# உலகைக் கவர்ந்த உன்னத நிகழ்ச்சிகள்

தொகுத்தவர் :

பூவை. எஸ். ஆறுமுகம்

வாசு பிரசுரம்

185, லாயிட்ஸ் ரோடு, சென்னை-14

தொலைபேசி எண் : 82499 : : த. பெ. எண் : 659

வெளியீடு எண் : 192
முதற்பதிப்பு : மே,
சகல உரிமைகளும் பெ

விலை ரூபாய் 2-00

அச்சிட்டோர் : பூவை அச்சகம், சென்னை-11.

# பதிப்புரை

நாம் அன்றடம் பத்திரிகைகளிலும், தலைவர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளிலும் எத்துணையோ விந்தையான, உன்னதமான நிகழ்ச்சிகளைப் படிக்கிறோம்; பார்த்து, கேட்டு அனுபவிக்கிறோம்.

ஆனால், எல்லா நிகழ்ச்சிகளும் நமக்கு விந்தையாக, உன்னதமாக இருப்பதும் அல்ல, நம் மனத்தில் நின்று நிலை பெறுவதும் அல்ல.

காந்திஜி, பண்டிட்ஜீ, பெர்னட்ஷா, லெனின், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் முதலான இன்னும் அநேக உலக தலைவர்களால் சொல்லப் பெற்ற, நிகழ்த்தப்பெற்ற, சம்பவங்களைத் தொகுத்து இதன் ஆசிரியர், பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் புத்தக உருவில் தந்திருப்பது மக்களுக்கு நன்மை பயப்பதாகும்.

இதில் கூறப்பட்டிருக்கும் சம்பவக் கோர்வைகளைப் படிக்குங்கால், உலகப் பெருந் தலைவர்களின் நிகழ்ச்சிகளில் ஒன்றி, மறக்க முடியாத இன்பத்தில் திளைக்கிறோம்.

அறிவு வளர, இன்பம் துய்க்க, உலகத் தலைவர்களின் நகைச்சுவையை அனுபவிக்க மக்களுக்கு உறு துணையான நூல் இது என்றால் மிகையில்லை.

ஆசிரியரவர்களுக்கு நன்றி.

சென்னை-14.
10—5—1972

வாசு பிரசுரத்தார்.

# நிதியும் நீதியும்

நான் உலகம் சுற்றும் தமிழன். எனவேதான், உலக அரங்கின் பழைய கதைகளும், புதிய கதைகளும் எனக்கு அத்துபடியாக விளங்குகின்றன. இவ்வினிய அனுபவங்களுக்கு எனக்குப் பத்திரிகைப் பணிதான் நிரம்பவும் கைகொடுத்தது. இல்லையென்றால், இத்தனை அருமையான நிகழ்ச்சிகளையும் காலத்தின் சரித்திரப் பொன்னேடுகளினின்றும் தொகுத்தளித்திருக்க முடியுமா?

இவ்வகையில், நூலகங்களே எனக்குப் பெரிதும் உதவின. அவற்றைப் பேட்டி கண்டதன் வாயிலாக இந்த விந்தைத் தொகுப்பு எனக்குக் கிடைத்தது.

உங்களுக்கு ஒரு நிதி கிடைத்தது. இருந்த இடத்தில் இருந்து கொண்டே, உலகத்தைக் கவர்ந்த உன்னதப் பெரியோர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த உன்னத நிகழ்வுகளைப் பற்றி அறிந்து, சிரித்து, மகிழ ஓர் அரிய வாய்ப்பு உங்கட்குக் கிடைத்திருக்கிறதல்லவா? நீதி நல்கும் சம்பவங்கள் ஆயிற்றே!

அனைவருக்கும் நன்றி.

சென்னை
10-5-1972

பூவை எஸ். ஆறுமுகம்

## பொன் மனம்

"உலகப் பேரொளி" என்று அன்றும் என்றும் சரித்திரத்தின் ஏடுகள் புகழ்த் துதி பாடிக் கௌரவம் செய்து வரும் அந்தத் தன்னிகரற்ற பெருமைக்கு இலக்கானவர் அல்லவா அண்ணல் காந்தி அடிகள்!

ஒரு நாள்:

அப்போது, ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாக எழுந்த பிரச்னை ஒன்றிற்குத் தீர்வு காண வேண்டி காந்திஜி உண்ணு விரதம் மேற்கொண்டிருந்தார்.

சிக்கல் தீரும் கட்டம் நெருங்கியது. உண்ணு நோன்பை முடிக்கும் முடிவை எடுத்தார் மகாத்மா.

அவரது நெஞ்சில் இடம் பெற்றவன் சிறுவன் விட்டோபா.

அவன் ஒரு ஹரிஜனச் சிறுவன்.

"தம்பி! நீ கொண்டு வந்து கொடுக்கும் ஆரஞ்சுப் பழச் சாற்றைக் கொண்டுதான் நான் என்னுடைய உண்ணு விரதத்தை முடிக்க உத்தேசித்துள்ளேன்!" என்றார் காந்திஜி.

சிறுவனுக்குக் கண்கள் கசிந்தன—ஆனந்த மேலிட்டால்!

காந்திஜியை வணங்கிவிட்டு விடைபெற்றான் விட்டோபா.

இடையில் இருந்ததோ மூன்றே மூன்று நாட்கள் தாம்!

எப்படியோ பாடுபட்டு அவனால் நாலணதான் சேர்க்க முடிந்தது. நாலணாவுக்கு எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் கிடைக்குமோ?

அன்றுதான் காந்தியடிகள் உண்ணுவிரதத்தை முடிக்க வேண்டிய தினம்.

கடை கடையாக ஓடினான் ஹரிஜனப் பையன்.

"ஒரு பழம் கூட நாலணாவுக்குக் கிடைக்காதப்பா!"— இந்தப் பதில்தான் கடைகாரர்களிடமிருந்து வெளிவந்தது.

"நான் வாங்கிச் செல்லும் இந்த ஆரஞ்சுப் பழச் சாற்றைக் கொண்டுதான் நம் மகாத்மா உண்ணுவிரதத்தை

முடிக்கப் போகிறார்கள்!" என்று அவன் சொன்ன உண்மையை அவர்கள் நம்பத் துணியவில்லை.

அழுதான்; துடித்தான், விட்டோபா.

நேரம் நெருங்கியது.

கடைசியில் மனம் இரங்கிய ஒரு கடைக்காரர் விற்காமல் கிடந்த மூன்று காய்ந்த ஆரஞ்சுப் பழங்களை நாலணாவுக்கு அவனிடம் கொட்டினார்.

சிறுவன் ஓடினான்.

விட்டோபாவுக்காகக் காத்திருந்தார் மகாத்மா.

அண்ணலின் பக்தர்கள் பையனைத் தேடிய தருணத்தில், பழங்களுடன் வந்து நின்றான் அந்த அனாதைச் சிறுவன்.

ஒரு வாய்க்குக் காணும்படியாகத் தேறிய அந்த ஆரஞ்சுப் பழச் சாற்றைக் கொண்டுதான் அடிகள் தம்முடைய உண்ணா விரதத்தை முடித்தார்.

பாக்கியவான் விட்டோபா!

## "பண்டிட்ஜி!"

உலகப் பேரறிவாளர் நேருஜி மறைவதற்குப் பத்துத் தினங்களுக்கு முன், வைஜயந்திமாலாவின் 'சண்டாலிகா' நாட்டிய நாடகத்தைப் பார்க்க தம் சகோதரி விஜயலட்சுமி பண்டிட்டுடன் வந்திருந்தார்.

இடைவேளையின் போது, நேருஜி எழுந்து போய் விடுவாரென்று அறிந்து, வைஜயந்திமாலா நேருஜிக்கு நன்றி தெரிவிக்கச் சென்றார். "பண்டிட்ஜி, தாங்கள் வந்திருந்து என்னைக் கௌரவித்ததற்காக மிகுந்த நன்றி. இன்னும் இருபது, இருபத்தைந்து நிமிஷங்கள் தான் இருக்கிறது. கடைசி வரை இருந்து விட்டுப் போனால், அதை என் பாக்கியமாகக் கருதுவேன்!" என்றார்.

காருண்ய மிக்க நேருஜி கடைசி வரை இருந்து நிகழ்ச்சியை ரசித்தார்—தமது உடல் நலக் குறைவையும் மறந்து ரசித்தார்!

## முதல் நிகழ்ச்சி

உலகத்தின் சரித்திரத்திலே ஒரு தேசத்தை ஆளும் பொறுப்புக்குத் தேர்வு பெற்ற பெருமைக்கு பெண்மணி தேர்ந்தெடுக்கப் பெற்ற நிகழ்ச்சி இந்தியத் துணைக் கண்டத்திலே தான் நிகழ்ந்தது.

அத்தகைய சால்லப் பெருமைக்கு உரியவராக—உகந்த வராக பெருமை கண்டார் சரித்திரத் தலைவி இந்திரா காந்தி அவர்கள்.

அவர்கள் பாரதத்தின் 'பிரதமரானதும் அவர்களுக்கு வந்த தந்திகள்—அகில உலகினின்றும் வந்த பரிசில்கள்—வாழ்த்துக்கள் ஏராளம், ஏராளம்!

அவற்றுள் ஒன்று, போப் ஆண்டவர் பால் அவர்கள் அனுப்பியது.

அது வாழ்த்து.

"என் வாழ்நாளில் இந்தப் பரிசு என் வணக்கத்துக்குரிய தாகும்!" என்றார் இந்திரா நேரு.

காரணம்:

உலகிலே பிரத்தியேகமாக இம்மாதிரி வாழ்த்துச் செய்தியை போப் ஆண்டவர் அனுப்பியது இதுவே முதல் நிகழ்ச்சியாம்!

## மேலான உபதேசம்!...

தமிழக முதல்வராக பேறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்னம் நடந்தது.

அன்று, சென்னைச் சட்டக் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றுவதாக ஏற்பாடாகியிருந்தது.

விழாவைத் தொடக்கிய பெருமைக்கு உரியது முருகன் பாடல்.

குறித்த நேரம் கழித்துத்தான் அண்ணா அரங்கம் நாடி வந்தார்.

"நீண்ட நேரம் எல்லோரையும் காக்க வைத்து விட்டீர்கள். ஆகவே, நீண்ட நேரம் தாங்கள் பேச வேண்டும்!"

தலைமை ஏற்ற வக்கீல் பிரமுகரின் வேண்டுகோள் இவ்வாறு புறப்பட்டது.

அந்தந்தச் சூழலுக் கேற்ப அறிவாற்றலுடன் நகைச் சுவைப் பண்பையும் கூட்டிப் பேசிவிடும் நயம் பேரறிஞருக் கென்று வாய்த்திட்ட ஒரு தனித்திறன் ஆயிற்றே!

அண்ணா சொன்னார்கள்:

"நீண்ட நேரம் காத்திருந்தவர்களைச் சீக்கிரம் அனுப்பு வதுதான் நியாயம். நீண்ட நேரம் காத்திருந்தவர்களை, நீண்ட நேரம் கழித்து அனுப்புவது என்னும் நல்ல கொள்

கையை நீங்கள் கட்சிக் காரரிடம் வைத்துக் கொள்ளுங்கள், ஐயா!''

அறிஞரின் நா தலைமை தாங்கியவரின் வாயை அடைத்தது.

கூட்டம் மெய்ம்மறந்து கையொலி கூட்டியது!

## தொண்டும் துண்டும்

இன்றையத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

மாநில சுயாட்சி மாநாட்டில் பாண்டிச்சேரியிலிருந்து வந்த 'ஜோதி' முதல்வருக்குக் கொடுக்கப்பட்டது.

தீபத்தின் எண்ணெய் கலைஞரின் கைகளில் ஒட்டியது.

ஓட்டி வந்தார் மாவட்டச் செயலாளர் நீலநாராயணன். தம் துண்டை நீட்டினார்.

அடுத்த ஜோதி வந்தது.

இப்போதும் முதல்வருக்குத் தேவைப்பட்டது துண்டு.

நன்றியுடன் நகை செய்தார், மாண்புமிகு முதல்வர். பிறகு சொன்னார்:

''உங்கள் தொண்டைவிட உங்கள். துண்டுதான் இப்போது எனக்கு நல்ல சமயத்தில் கை கொடுத்தது!''

சிரித்தது மாநாட்டுப் பந்தல்!

## கடவுள் பிரசினையில் ஷா

பெர்னாட்ஷாவின் சேவைகளிலே மிக உயர்ந்தது எது என்பது பற்றி ஹெஸ்கத் பியர்ஸனுக்கும் அவரது மனைவிக்கும் அபிப்பிராய பேதம் இருந்தது.

ஷாவின் சோஷலிஸ நூல்களும் சொற்பொழிவுகளுமே சிறந்தவை என்று மனைவி கருத, ஷா ஒரு நாடக மேதை என புருஷன் கருதினான்.

இந்நிலையின் முடிவைப் பெற அவள் ஷாவிடமே நேரில் சென்றாள்:

''மனித சமுதாயத்துக்கு நீங்கள் அளித்துள்ள கொடைகளிலே எது மிக உயர்ந்தது? உங்களது சோஷலிஸ பிரசாரமா? அல்லது நாடகங்களா?''

''என் பிரசாரத்தை எவர் வேண்டுமானாலும் செய்திருக்கலாம். ஆனால், என்னுடைய நாடகங்களை வேறு எவரும் எழுதியிருக்க முடியாது. நான்தான் அவற்றை எழுதவேண்டி

யிருந்தது. அவைதான் நான் என்று சொல்லும்படி என் வாழ்க்கையிலே ஒரு பகுதியாகி விட்டன!" என்றார் ஷா.

அவள் அத்துடன் நிற்கவில்லை.

"அதுசரி. நீங்கள் பரமண்டலத்திற்குச் சென்று, கடவுள் முன்பு நிற்பதாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் செயல்களில் அவர் எதற்கு அதிகமாக மார்க்கு கொடுப்பார் என்று நினைக்கிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள்.

"கடவுள் மாத்திரம் என் செயல்களுக்குப் பரீட்சை மார்க்கு கொடுக்க ஆரம்பிப்பாரானால், அப்புறம் அவருக்கும் எனக்கும் பெரிய தகராறுதான் வந்து விடும்!" என்றார் ஷா!

## சித்ரகுப்தன் வமிசம்

சென்னையில் சுவாமி விவேகாநந்தர் தங்கியிருந்தார்.

பல்லாயிரக் கணக்கில் சுவாமிஜியைத் தரிசிக்கக் குழுமியிருந்தனர்.

அக்கூட்டத்தில் ஒரு பண்டிதர் எழுந்து, "நீங்கள் பிறப்பில் பிராமணர் அல்லவென்று அறிகிறேன். அப்படி இருக்க, சாஸ்திரப்படி நீங்கள் சந்யாசம் வாங்கிக் கொள்வது தவறாயிற்றே" என்று கேட்டார்.

"நான் சித்திரகுப்தனின் வமிசத்தில் வருபவன். ஒவ்வொரு பிராமணனும் தனது சந்தியாவந்தனத்தின்போது சித்திரகுப்தனைப் பிரார்த்தனை செய்கிறான். ஆகவே, பிராமணன் சந்யாசம் பெறுவதற்குத் தகுதியுள்ளவன் என்றால், பிறகு, நானும் தகுதியுள்ளவனே!" என்றார் சுவாமிஜி. பிறகு "அதுசரி. நீங்கள் இப்போது என்னிடம் சம்ஸ்கிருதத்தில் பேசினீர்களல்லவா? அதில் ஏராளமான உச்சரிப்புப் பிழைகள் இருந்தன. வடமொழி இலக்கணவாதி பாணினி சொல்லியிருக்கிறான், 'சம்ஸ்கிருத வார்த்தைகளைத் தவறாக உச்சரித்துக் கீழ்மைப்படுத்திவிடக் கூடாது' என்று. எனவே, நீங்கள் இந்தச் சர்ச்சையைத் தொடர அருகதை இழந்தவர்" என்றார்.

பண்டிதரின் முகத்தில் அசடு வழிந்தது!

## குழந்தை லால்பகதூர்

அலகாபாத்தில் ஒரு பெரும் திருவிழா.

கங்கையில் புனித நீராடி, கடவுள் தரிசனம் செய்து கொண்டு இருந்தபோது, தாயின் இடுப்பிலிருந்து மெல்ல இறங்கி நழுவி கூட்டத்தில் எங்கோ சென்று விட்டது அந்தக்

குழந்தை. அதற்கு அப்போது மூன்று வயசுதான் ஆகி யிருந்தது.

தரிசனம் முடிந்து, தன் நினைவு அடைந்த தாய் குழந்தையைக் காணுமல் துடித்தாள்; பதறினுள். கங்கா தேவிக்குக் குழந்தை காணிக்கை ஆகியிருக்குமோ என்று கதறினுள். எங்கும் தேடினுள். கடைசியில் ஓர் ஆட்டிடை யனிடம் ஒரு குழந்தை இருப்பதாகக் கேள்விப்பட்டு ஓடினுள்.

அக்குழந்தைதான் அவள் பெற்ற மகன். சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

தாய் அடைந்த ஆனந்தத்துக்குக் கரை ஏது?

அக் குழந்தைதான்......தாஷ்கண்ட் சமாதானக் காவலர் அமரர் லால்பகதூர்!

## ராவ்பகதூர்

செட்டி நாட்டரசர் வள்ளல் அண்ணுமலைச் செட்டி யாருக்கு 'ராவ்பகதூர்' என்ற பட்டம் கிடைத்தது ஒரு ஒரு ரசமான விஷயமாகும்.

அக்காலத்தில் செட்டி நாட்டின் சிற்சில பகுதிகளில் கள்வர் நடமாட்டம் கூடியிருந்தது. அச்சமயம், குதிரை மூலமே தபால் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது.

1911 கடைசியில் ஓர் இரவு

தபால் வண்டி திருமயத்திலிருந்து காரைக்குடி காத்தானை நோக்கி வந்தபோது, அஞ்சல் பைகளைச் சூறையாடினர் திருடர்கள்.

இதை அறிந்த செட்டியார் உடனே திருடர்களைத் தேடிக் கண்டு பிடித்தார். அஞ்சல் பைகளை மீட்டார்.

இத்தீரமிகு செயலைப் பாராட்டிய மாகாண அஞ்சல் நிலையத் தலைமையதிகாரி, செட்டியாருக்கு 'ராவ் பகதூர்' பட்டம் கொடுக்கும்படி வெள்ளையர் அரசாங்கத்துக்குக் குறிப்பு அனுப்பினுர்.

அண்ணுமலைச் செட்டியார் 'ராவ்பகதூர்' ஆனுர்!

## குருதேவர் சான்று

குருதேவர் ரவீந்திரநாத் தாகூர் தம்மிடம் நற்சான்றிதழ் கேட்க யார் வந்தாலும் மறுக்காமல் கொடுத்து வந்தார்.

அவரது அந்தரங்க நண்பர் ஒருவர் தாகூரிடம் இது பற்றிக் கேட்டார். "எதற்கெடுத்தாலும் நீங்கள் சர்டிபிகேட் கொடுத்தால் நன்ருயிருக்குமா?" என்று வினவினுர்.

அதற்குத் தாகூர் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்; "நான் சர்டிபிகேட் கொடுக்காத பொருளும் இவ்வுலகத்தில் உண்டு. அது என்ன தெரியுமா?" என்று வினவினார்.

நண்பர் விழித்தார்;

"அதுதான் பிளேட்! பிளேடுகளுக்கு—க்ஷவரக் கத்திகளுக்கு நான் எப்படிச் சான்றிதழ் எழுதிக் கொடுக்க முடியும்?" என்று சிரித்தார் வங்கப் பெருங் கவி.

நோபல் பரிசு பெற்று உலகப் புகழ் பெற்ற மாமேதை அவர்!

## மூன்றெழுத்து

நாட்டின் விடுதலை வேள்வித் தீயில் குதித்துச் சுதந்தர முழக்கம் செய்த கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. அவர்கள் அப்போது பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார்.

ஒருநாள், சிறைச்சாலையை அதிகாரி ஒருவர் பார்வை யிட்டார். அப்போது வ. உ. சி. அமைதியாக அமர்ந்திருந் தார். சிறை அதிகாரிக்கு மரியாதை காட்டும் வகையில் அவர் எழுந்திருக்கவில்லை.

சிறை அதிகாரிக்குச் சினம் பொங்கியது. "நான் நின்று கொண்டிருக்கையில், இவன் எனக்குக் கொஞ்சமும் மரியாதை தராமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறானே!" என்று எண்ணினார். அவர் வ. உ. சி.யைப் பார்த்து, "நான் நின்று கொண்டிருக்கிறேன். நீ எப்படி உட்கார்ந்திருக்கலாம்" என்று உறுமினார்.

அதற்கு தேசத் தலைவர் வ. உ. சி. அவர்கள், நான் வெளியே போய்விடுவேன். ஆனால் அதற்கு இன்னும் ஆணை வரவில்லையே? அதனால்தான் உட்கார்ந்திருக்கிறேன்!" என்றார்.

அதிகாரிக்கு அசடு வழிந்தது.

## ஜனாதிபதி தர்பார்

அரும் பெருந்தலைவர் நேருஜியிடம் ஒருசமயம் ஒரு நிருபர் கேள்வி ஒன்றைக் கேட்டார். "மந்திரி சபையில் மந்திரி களுக்கு அந்தஸ்து—ஸ்தானம் கொடுப்பது என்றால் என்ன?" என்பதே அந்நிருபர் கேட்ட கேள்வியாகும்.

"எல்லா மந்திரிகளும்தான் தர்பார் நடத்துகிறார்கள்" என்று கூறினார் இன்னொரு நிருபர்.

உடனே நேருஜி, "ஜனாதிபதிதான் இப்போது, மிகப் பெரிய தர்பார் நடத்துகிறார்!" என்று கூறினார்.

அப்போதைய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்கள் வாரத்தில் புதன்—ஞாயிறுகளிலே பொதுஜனங்களுக்குத் தாராளமாகப் பேட்டி கொடுப்பதையே இவ்வாறு நேருஜி தமாஷாகக் குறிப்பிட்டார்.

"இதுபற்றிய யோசனையை ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டார்கள். எனக்கும் அந்த யோசனை பிடித்திருந்தது. அதனால் பொதுமக்களுக்குப் பேட்டி கொடுக்கும் அளவுக்கு நான்தான் அவருக்குத் தீவிரமாக ஆதரவு கொடுத்தேன்!" என்றார் மனிதர்குல மாணிக்கம்.

## தொண்டர் தலைவர்

தேசபக்தர் சத்தியமூர்த்தி அவர்களுடன் காமராஜரும் வெளியூர்க் கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தார். உலவி வர தலைவருடன் சென்றார். வழியில், வயல்களிலே வேலை செய்து கொண்டிருந்தார்கள் உழவர்களும் உழத்திமார்களும். அருகிலிருந்த மரங்களிலே சில தூளிகளும் தொங்கின.

அப்போது, ஒரு மரக்கிளையில் பாம்பொன்று படம் விரித்துக் கொண்டு இருந்த காட்சியைக் காங்கிரஸ் தலைவர் பார்த்துப் பதைபதைத்தார். துணித் தொட்டிலைக் குறி வைத்துக் கொண்டிருந்தது அந்தப் பாம்பு. தம் சீடருக்கும் காட்டினார். சீடர் ஒரு கணம் சிந்தித்தார். மறுகணம், தலைவரது கைத்தடியை வாங்கினார். அதை அப்படியே மரக்கிளையை நோக்கி, பாம்புக்கு நேராகப் பிடித்து நீட்டினார். பாம்பு அக்கழி வழியே ஊர்ந்தது. உடனே, அது தரைக்கு நழுவி ஓடி விட்டது.

சீடரின் புத்திக் கூர்மையை மெச்சினார் தலைவர்.

## ருஷ்யப் பேனா

*1819 டிசம்பர் 23.*

சென் பீட்டர்ஸ் பர்க்கிலிருந்த ஸெமெனாவ் சதுக்கத்தில் நிறுவப்பட்டிருந்த தூக்கு மரங்களைச் சுற்றிலும் இருபது அரசியல் கைதிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்களில் முதல் மூன்று பேர்களின் முகங்கள் கறுப்புத் துணி கொண்டு மூடப்பட்டிருந்தன. தண்டனையை ஏற்கத் தயாராக இருந்தார்கள்.

அப்பயங்கரக் காட்சியை ஏனைய கைதிகள் கண் கொட்டாமல் பார்த்தார்கள்.

அடுத்தது அவர்களின் முறை.

அவர்கட்குத் தண்டனை அளிக்க வேண்டிய வகையில், "சுடுங்கள்!" என்று மேலதிகாரி உத்தரவிட்டார். அப்போது ஓர் அதிகாரி வெள்ளைக் கைக்குட்டையை வெண் கொடி போல அசைத்தபடி ஓடிவந்து அம்மரண தண்டனையை நிறுத்தினர்.

முதலாவது நிக்கல்ஸ் என்ற ருஷ்யச் சக்கரவர்த்தி மரண தண்டனையை சிறைத் தண்டனையாக மாற்றினன்.

மயிரிழையில் தப்பியவர்களிலே ஒருவர் பெரும் எழுத்தாளராகத் திகழ்ந்தார்.

அவர்தான் ருஷ்யாவின் பிரபலமான எழுத்தாளரான டாஸ்டாவ்ஸ்கி!

## போர்!"

நாடகமேதை ஷா ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். விருந்து முடிந்தது. சொற்பொழிவு ஆரம்பமானது. ஒருவர் தனக்குச் சகலமும் தெரியும் என்று பேசினர். அப் பேச்சு ஷாவுக்கு மண்டை வலியை உண்டாக்கியது.

பேச்சு முடிந்தது.

பேச்சாளர் தன்னை ஷா பாராட்டப் போகிறார் என்று மிகுந்த மகிழ்வுடன் அவர் பக்கம் திரும்பினர்.

"நம்மிருவருக்கும் இவ்வுலகில் அறிய வேண்டியவை அனைத்தும் தெரிந்திருக்கிறதே!" என்றார் பெர்னார்ட் ஷா.

"உண்மையாகவா? அது எப்படி?"

"நீங்கள் பிறரை 'போர்' அடிக்கும் நபர் என்பதைத் தவிர வேறு எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கிறீர். நானே, நீங்கள் ஒரு பெரிய 'போர்' ஆசாமி என்ற ரகசியத்தைத் தெரிந்து வைத்திருக்கிறேன்!" என்றார், ஷா.

பேச்சாளர் குன்றினர்!

## கவிக்கு பாதுகாப்பு

1919-ல் ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடத்தும் இயக்கத்திற்கு மக்களைத் தயார் செய்வதற்காகக் காந்திஜி சென்னை வந்து, ராஜாஜியின் வீட்டில் தங்கியிருந்தார். உச்சிவேளை.

ராஜாஜியுடன் சத்திய மூர்த்தியும் சிலரும் அமர்ந்திருந்தனர். வ.ரா. மெய்க்காவல்.

அப்போது பாரதியார், உள்ளே நுழைந்து, காந்திஜியை தமது மாலைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவர், கேட்ட தினத்தில் வேறொரு கூட்டம் இருந்தது. 'தங்கள் கூட்டத்தை நாளை நடத்துகிறீரா?' என்றார் காந்தி.

"முடியாது, மிஸ்டர் காந்தி. நீங்கள் ஆரம்பிக்கும் இயக்கத்துக்கு எனது ஆசீர்வாதம்! வருகிறேன்!" என்று சொல்லி விரைந்தார் பாரதி.

"வந்தவர் யார்?" என்றார் காந்திஜி.

"எங்கள் தமிழ்நாட்டுக் கவி!"—ராஜாஜி.

"இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்!" என்றார் காந்திஜி.

## மேடம் க்யூரி

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி மேடம் க்யூரி அப்போது பத்தொன்பது வயதுக் கன்னி. ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் வேலைக்கு இருந்தாள். பணக்காரரின் பத்து வயசு மகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவளுக்கு.

அப்போது, கிறிஸ்துமஸ் லீவுக்கு பணக்காரரின் மூத்த மகன் வீட்டுக்கு வந்திருந்தான். க்யூரியைக் கண்டதும் காதல் கொண்டான். அவளைத் திருமணம் செய்துகொள்ளவும் துணிந்தான். விஷயம் தந்தைக்கு எட்டியது. "ஒரு பென்னி கூட இல்லாத வேலைக்காரியையா இவ்வளவு பணக்காரர் வீட்டுப் பிள்ளையான நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?" என்று கடிந்தார்.

இச் செய்தி க்யூரிக்கு எட்டியது. ஒரு வைராக்கியம் பிறந்தது. திருமண எண்ணத்தை அறவே நீக்கிக் கொண்டு, பாரிஸுக்குப் போனாள். விஞ்ஞானத்துக்குத் தன்னையே அர்ப்பணித்தாள். பசியால் மயங்கி விழுந்த அதே பெண் பின்னர் விஞ்ஞானக் கண்டுபிடிப்பிற்கென்று இரண்டு முறை 'நோபல் பரிசு' பெற்றார் அல்லவா?

## ஆந்தை ஜோடி!

அந்தப் பையன் நோய் பிடித்தவனாகவும் ரத்தமின்றி வெளுத்தும் இருந்தான். ஆஸ்த்மா தொல்லை வேறு. இந்நிலையில் அவன் உடல்நலம் பெற மேலை நாடுகளை நோக்கிப்

பயணப்பட்டான். மாடு மேய்ப்பவனாக இருந்தான். உழைத்தான்; காலம் ஓடியது. உடல் வலு ஏறியது. உலகப் புகழ் பெற்ற மைக் டொனவான் எனும் மல்யுத்த வீரனுடன் மல் யுத்தம் செய்தான்.

அவன்தான் தியோடர் ரூஸ்வெல்ட்!

அதே தியோடர் ரூஸ்வெல்ட்தான் அமெரிக்காவின் செல்வாக்கு மிக்க ஜனாதிபதியாகவும் ஆனார்.

1912-ஆம் வருஷம்.

'புல் மூஸ் பிரசாரம்' நடந்து கொண்டிருந்த நேரம்.

அவர் அவசரமாகக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது யாரோ ஒரு பேராசை பிடித்த மனிதன் அசம்பாவிதமாக ரூஸ்வெல்டின் மார்பில் சுட்டு விட்டான். குண்டு அடிபட்டு விட்டது என்கிற விவரத்தை யாரும் அறிந்து கொள்ள முடியாத வகையில் அவர் பேச்சை நடத்தி முடித்தார். ரத்தம் தன் போக்கில் ஒழுகிக் கொண்டேயிருந்தது. கடைசியில் பேசி முடிந்ததும்தான் அவர் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார். அப்புறம்தான் விவரம் மற்றவர்களுக்குத் தெரிய ஆரம்பித்தது. பின் ஒரு தருணம்:

அப்போது ரூஸ்வெல்ட் வெள்ளை மாளிகையிலிருந்து பிரசித்தி பெற்ற வாஷிங்டன் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு 'டெலிபோன்' செய்தார்; உடனே மாளிகையின் நிர்வாக மண்டபத்துக்குப் புறப்பட்டு வரும்படி செய்தி சொன்னார்.

நிருபருக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. யாருக்குமே அளிக்காத பிரத்யேக பேட்டி இது என்று ஊகம் செய்தார். ஏதோ அவசரமான அரசியல் விஷயமாகவே இருக்க வேண்டுமென்றும் நிர்ணயம் செய்தார். ஆகவே, இதுபற்றிய பிரத்யேக வெளியீடு ஒன்றை உடனடியாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பதற்கு அடையாளமாக அப்பத்திரிகை நிறுவனத்துக்கு ஒரு தந்தியும் கொடுத்தார் அந்நிருபர்.

நிருபர் வெள்ளை மாளிகையை அடைந்ததும், ரூஸ்வெல்ட் அவரை வரவேற்று, தம் மாளிகைத் தோட்டத்திலிருந்து ஒரு பழைய மரத்தை நோக்கி அழைத்துச் சென்று, தாம் கண்டு பிடித்த ஆந்தை ஜோடி ஒன்றை வெகு ஆர்வத்துடன் காண்பித்தாராம்!

## 'மழை!'

உலகப் புகழ்பெற்ற மேடை நாடகம் எது என்றால், எல்லோரும் ஒருமுகமாக 'ஹாம்லெட்'டைத்தான் குறிப்பிட்டுச் சொல்லுவார்கள்.

ஆனால், அதையடுத்து, இரண்டாவது மரியாதையைப் பெறும்—பெறவல்ல நாடகம் எது என்றால், அது கட்டாயம் 'மழை' என்ற நாடகமாகத்தான் இருக்கும்.

'சாடி தாம்ஸன்' என்று ஒரு சிறுகதை எழுதினார் ஸாமர்ஸட் மாம்.

ஒருநாள், அவர் நண்பர் ஜான் கால்டன் அவர் வீட்டில் விருந்தினராக வந்திருந்தார். இரவில் தூக்கம் வரவில்லை என்று, தூக்கம் வரும்வரை படிப்பதற்கு ஏதாவது கேட்டார். மேற்கண்ட கதையின் அச்சுப்படிகளைக் கொடுத்தார் மாம்.

அதைப் படித்தார் நண்பர். அது அவருக்குப் பிடித்து விட்டது. சிறப்பான நாடகமாக்கலாமென்று கருதினார். அவ்வாறே செய்யவும் செய்தார். அதுதான் 'மழை'!

இதற்காக ஐந்து நிமிஷம் கூட செலவழிக்க வில்லை மாம். ஆனால், அதன் மூலம் அவர் சம்பாதித்தது இரண்டு இலட்சம் பவுன்களாகும்!

## ஞானியின் முடிவிலே!

ருஷ்யச் சரித்திரத்திலே என்றும் நிலைத்திருக்கும் பெயரும் புகழும் பெற்ற மேதை லியோ டால்ஸ்டாயைப் பற்றியும் அவரது கருத்துக்கள், எழுத்துக்கள் ஆகியவை பற்றியும் பத்திரிகைகளிலும் உதிரியாக நூல் வடிவிலும் வந்த கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை 56,000, புத்தக வடிவு கொண்டவை 23,000!—2,300 அல்ல!

தத்துவ ஞானி டால்ஸ்டாய் எழுதியவை 100 தொகுதிகள். இதுவரை அம்மாதிரி யாருமே எழுதியதில்லை.

அவர் இவ்வளவு சீரும சிறப்பும் பெற்றிருந்தாலும், அவரது சொந்த வாழ்வு ஒரு தோல்வியே யாகும்.

அவர் ஆடம்பரத்துக்கு எதிரி.

அவரது மனைவியோ ஆடம்பரத்துக்கு அடிமை.

அவரை அவள் திட்டினாள்; ஏசினாள்.

அவ்வீடு அவருக்கு ஒரு பாழ் நரகமாகவே தோன்றியது. ஆகவே, அவர் தமது பதிப்பாளர்களிடம் 'ராயல்ட்டி—சம்மானம்' கொடுக்காமலேயே தம் நூல்களைப் பிரசுரம் செய்யும் படிகூட தூண்ட வேண்டியவரானார்.

அவளை அவர் எதிர்த்தபோது, அவளுக்கு 'ஹிஸ்டீரியா வந்து விட்டது. அவள் துடித்தாள்; நலிந்தாள்.

அப்போது, அவர் அவளைப் பற்றி தம் டைரியில் எழுதி வைத்திருந்த பழைய காதல் மொழி விளக்கங்களை அவளுக்கு ஐம்பதாண்டுகள் கழித்து வாசித்துக் காட்டினார்.

இறுதியில் இருவருமே விம்மித் துடித்தார்கள்.

1910 அக்டோபர் 21-ல் மனைவியின் கொடுமைக்கு அஞ்சிய டால்ஸ்டாய் வீட்டைத் துறந்து வெளியேறினர். பதினொரு நாள் கழித்து, ஒரு ரயில் நிலையத்தில் ஏழை உழவர்களின் சூழலில் நிமோனியா காய்ச்சல் கண்டு இறந்தார்!

## சிந்தனையும முனையும்!

பிரபலமான அமெரிக்க ஆசிரியர் மார்க்ட்வைனின் வாழ்க்கைப் பாதையையே மாற்றி விட்ட சின்னஞ்சிறு சம்பவம் அது.

ஒருநாள்:

பழைய கடுதாசிக் கிழிசல் என்று அவர் பார்வையில் பட்டது. அதை எடுத்துப் படித்தார். அது 'ஜோன் ஆஃப் ஆர்க்' பற்றிய வரலாற்று நூலினின்றும் கிழித்து எறியப் பட்டிருந்த காகிதம். அதைப் படித்தார். அதில் ஆர்க் நாட்டின் ஜோன் ருவான்கோட்டையில் கைதாகி அடைக்கப் பட்டிருந்த விவரம் இருந்தது. அந்த வீராங்கனையைப் பற்றிய முழுக் கதையையும் தேடித் தேடிப் படித்தார். அவளது சுதந்திர வேட்கையும் நாட்டுப் பற்றும் அவரைக் கவர்ந்தன.

நாற்பத்தாறு ஆண்டுகள் கழித்து மார்க்ட்வைன் அந்தப் புரட்சித் தலைவி ஜோனைப் பற்றிச் சிறப்பானதொரு புத்தகம் எழுதினர். 'ஜோனைப் பற்றிய நினைவுகள்' என்பது நூலின் பெயர்.

விமரிசகர்கள் அந்நூலை அவ்வளவு போற்றவில்லை. ஆனாலும் அதைத்தான் அவர் தமது தலைசிறந்த படைப்பாகக் கருதினர்!

அவரை ஒரு இளம் விஞ்ஞானி அலக்ஸாண்டர் க்ரஹாம் என்பவர் சந்தித்தார். டெலிபோன் கருவி கண்டு பிடிப்பில் கொஞ்சம் முதலீடு செய்யும்படி மார்க்ட்வைனிடம் அவர் கேட்டுக் கொண்டார். ஒரு கம்பி மூலம் வீட்டிலிருந்தபடியே வெகு தொலைவுக்கு நண்பர்களுடன் பேசலாம் என்றார் கண்டுபிடிப்பாளர்.

இதைக் கேட்டு ட்வைன் விழுந்து விழுந்து சிரித்தார்.

ஆனல், அப்போது அந்த விஞ்ஞானியின் இஷ்டப் பிரகாரம் கொஞ்சம் முதலீடு செய்திருந்தால், கொஞ்சகாலத்திற்குள் அவருக்கு விலைமதிப்பிட முடியாத பொருள் கிட்டியிருக்குமல்லவா?

## நிருபா சரடு!

1937-ஆம் ஆண்டு மந்திரிசபையை ஏற்பதா, இல்லையா என்ற வாதம் காங்கிரஸ்காரர்களுக்குள் நடந்து கொண்டிருந்தது.

அவ்வமயம் காந்தி அடிகள் ஹிந்தி சாகித்ய சம்மேளனத்துக்காகச் சென்னைக்கு ரெயிலில் வந்து கொண்டிருந்தார். யாரோ ஒரு நிருபர் காந்திஜியிடம் வந்து வெகு ஆவலுடன், "காங்கிரஸ்காரர்கள் மந்திரிசபை அமைத்து, மந்திரிப் பதவி ஏற்று விடுவார்களோ?" என்று வினவினார்.

'ஆம்' என்றோ 'அல்ல' என்றோ பதில் சொன்னால், ஒரே வினாடியில் உலகமெல்லாம் இச் செய்தி பரவிவிடும். மௌனமாக இருந்தால் கூட அதற்கும் ஒரு வியாக்யானம் செய்து விடக்கூடியவர்கள் இந்தப் பொல்லாத நிருபர்கள்.

ஆகவே காந்திஜி வெகு சாதுரியமாக, "ஏன்? நீர் ஒரு மந்திரியாகப் போகிறீரோ?" என்று கேட்டார்.

உடனே எல்லோரும் 'கொல்' லென்று சிரிக்கவே, நிருபர் மறைந்து விட்டார், அங்கிருந்து!

## மரியாதை லீவு

அணுசக்தி விஞ்ஞானத் துறை மாமேதை! டாக்டர் பாபாவின் 'ட்ராம்பே அணுசக்தி நிலையம்' அன்னாரது மறைவுக்காக மூடப் பெறவில்லை.

அதற்குரிய காரணம்:

"எவரது மரணமும் ட்ராம்பே அணுசக்தி நிலையத்தின் வேலைகளைத் தடைப் படுத்தக்கூடாது என்று டாக்டர் பாபா சில தினங்கள் முன்புதான் சொன்னார். அவருடைய இறுதி ஆசையைப் பூர்த்தி செய்வதே நாங்கள் அன்னாருக்குக் காட்டும் மரியாதை எனக் கருதுகிறோம்.

## இங்கிலீஷ் பேசத் தெரியாத குழந்தை!

திக்கித் திக்கிப் பேசிய குழந்தை—இங்கிலீஷ் பேசத் தெரியாமல் திண்டாடிய அக் குழந்தை பிற்காலத்தில் பிரபலமான எழுத்தாளராக உயர்ந்தான் என்றால் அதிசயமாக இருக்கிறதல்லவா?

சுவாசப் பையில் ஏற்பட்ட கோளாறுகளுக்காக வைத்தியச் சிகிச்சை பெறப் போனவனுக்கு வைத்தியத் தொழிலில் மோகம் பிறந்து, அவனே டாக்டராகி, அதே நேரத்தில் கதைகளையும் எழுதி வந்தான் என்றால் இதுவும் விந்தையாகத் தோன்றுகின்ற தல்லவா?

அவன், அவரானார்!

அவர், நெறி கெட்ட பெண் ஒருத்தியைப் பற்றி ஒரு சிறுகதை எழுதினார்.

உலகப் புகழ் அடைந்தார்.

பாதிரியார் ஒருவரைப்பற்றி ஒரு நாடகம் எழுதினார்.

மேலும் புகழ் பெற்றார்.

'ஸர்' பட்டம் வந்தது.

இந்தியாவுக்கு வந்திருக்கிறார்; ரமண மகரிஷியைச் சந்தித்து அங்கு தங்கியும் இருக்கிறார்.

ஒரு பெரிய எஸ்டேட்டின் முதலாளியாகவும் ஆனார்.

அவர் இன்று இல்லை.

அவர் பெயர் என்றும் இருக்கும்:

அது: ஸாமர் ஸெட் மாம்!

## ஒவ்வொரு கடிதத்திலும்

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் ஞாபகார்த்தமாக அமெரிக்க அரசாங்கம் நினைவுத் தபால் தலைகள் வெளியிட்டது. அவற்றை உபயோகப் படுத்தி திருமதி கென்னடி தம் உறவினர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். அவர் எழுதிய ஒவ்வொரு கடிதத்திலும் அமரர் கென்னடியின் உருவம் வரையப் பெற்றிருந்தது. அதன் அடியில், "கடவுளே! தங்கள் ஊழியன் கென்னடியைக் கவனித்துக் கொள்ளுங்கள்!" என்றும் எழுதிக் கையொப்பம் செய்து அனுப்பினாராம்!

அந்த அன்பு மனம் இன்று வேறொரு கோடீஸ்வரர் சொத்து.

## "எஸ்!"

ஒரு சமயம்: ஸ்டாலினும் மொலட்டாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். அமெரிக்கக் காரியதரிசியிடமிருந்து டெலிபோன் அழைப்பு வந்தது. மொலடோவ் எடுத்தார். "ஹெல்லோ...யெஸ்...நோ...நோ...முடியாது! கண்டிப்பாக முடியாது!...இல்லை, முடியவே முடியாது!" என்று பேசிக் கொண்டிருந்தார்.

டெலிபோன் பேசி முடிந்ததும், ஸ்டாலின், எந்த விஷயத்திற்காக 'யெஸ்' என்று ஒப்புக் கொண்டீர்கள்?" என்று கவலையுடன் மொலடோவிடம் கேட்டார்.

"நான் பேசுவது உங்கள் காதுகளில் விழுகிறதா என்று அவர் கேட்டார். 'எஸ்' என்று ஒப்புக் கொண்டேன்!" என்று பதில் மொழிந்தார் மொலடோவ்.

## செருப்பைத் தேடி

அண்மையில் நூற்றாண்டு விழா கொண்டாடிய வங்கப் பிரமுகர் ஆசுதோஷ் பஞ்சாப்—கல்கத்தா ரயிலில் ஒரு சமயம் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவ்வகுப்பில்—முதல் வகுப்பில் ஓர் ஆங்கில ராணுவ அதிகாரியும் இருந்தார். இவருக்கு ஆசுதோஷ் தோற்றம் புதுமையாகப் பட்டிருக்க வேண்டும்.

ஆசுதோஷ் செருப்பு, வேட்டி சட்டையுடன் விளங்கினார். இரவில் ஆசுதோஷ் உறங்கிக் கொண்டிருக்கையில், அவரது செருப்புக்களை ஓசைப் படாமல் எடுத்து வெளியே வீசி விட்டார் அந்த ஆங்கில ராணுவ அதிகாரி. ஆசுதோஷ் விழித்துப் பார்த்தார், விவரம் புரிந்தது.

ஆங்கில ராணுவ அதிகாரி முகம் கழுவச் சென்றார். அப்போது, அவனது தொப்பியை எடுத்துச் சுழற்றி வண்டிக்கு வெளியே வீசி விட்டார் ஆசுதோஷ். திரும்பியவன் "எங்கே என் தொப்பி?" என்று பதட்டத்துடன் வினவினான்.

"அது என் செருப்பைத் தேடிக் கொண்டு போயிருக்கிறது!" என்றார் அவர், அமைதியாக!

## தமிழ்நாட்டுக் காமராஜ்

நேரு குடும்பத்திடம் தலைவர் காமராஜ் அவர்கட்கு நிரந்தரமான அன்பும் பாசமும் விசுவாசமும் எப்போதும் உண்டு.

அதேபோல, காமராஜரிடம் நேரு குடும்பத்துக்கும் அன்பு உண்டு.

ஒரு சமயம்,

நேருஜி உதகையில் தங்கியிருந்தார். அவரிடம் சில காங்கிரஸ் தலைவர்கள் சென்று, மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணமூலர் காமராஜ் என்று குற்றப்பத்திரிகை படித்ததைக் கேட்டுக் கொதித்தார் நேருஜி.

"இப்போதே எல்லாரும் வெளியேறிவிட வேண்டும். காமராஜ் இல்லையேல், சென்னையும் மற்றொரு உத்தரப் பிரதேசமாக ஆகியிருக்கும். தமிழ்நாட்டைக் காப்பாற்றி வருபவரே காமராஜ்தான்!" என்று சீறினாராம்!

## புத்த இம்சை

ஜீவ ஹிம்சையே கூடாது என்று புத்தர் பிரான் உபதேசித்திருக்கிறார். ஆனால் புத்த மதத்தில் மிகுந்த நம்பிக்கையுள்ள ஒரு பர்மாக்காரனுக்கு மீன் பிடிப்பதில் ரொம்ப ஆசை. ஆகையால் அவன் ஒரு யுக்திசெய்தான். ஒரு மரக்கட்டையை எடுத்தான். வெள்ளை வர்ணம் பூசினான். அதன்பின் அதை ஆற்றிலே தண்ணீரில் கரையோரமாகப் போட்டான். மீன்கள் அதைக் கண்டு, என்னவோ ஏதோவென்று பயந்து துள்ளி மணலிலே வந்து விழுந்து மாண்டன. மீன்களைப் பொறுக்கிப் பொறுக்கி பையிலே நிறைத்துக் கொண்டான் அந்தப் பர்மியன்.

''இப்படிக் கொலை செய்யலாமா?'' என்று அவனை நண்பர் கேட்டார்.

''நான் எங்கே கொலை செய்கிறேன்? அவை தற்கொலை செய்து கொள்கின்றன. அப்படித் தற்கொலை செய்து கொள்பவற்றை நான் பொறுக்கிக் கொள்ளுகிறேன். இவ்வளவுதானே?''

## ராவ் கதை

ஐ. நா. சபையில் ஒரு சமயம் நிகழ்ச்சி முறை பற்றிப் பலத்த வாதங்கள் நடந்தன. அதைக் கண்டு சகிக்காமல் சர் பி. என்; ராவ் இந்தக் கதையைச் சொன்னார்;

இந்தியாவில் ஒரு அரசர் இருந்தார். அவரைக் கால் பந்தாட்டம் ஒன்றைப் பார்க்க அழைத்துச் சென்றார்கள். ஆட்டத்தில் வெற்றி பெற்ற கோஷ்டிக்கு ஆளுக்கு ஒரு கால் பந்து வீதம் அந்த அரசர் அடுத்த நாள் இனமாக அனுப்பினார். அவர் கூடவே இப்படி ஒரு கடிதம் எழுதியிருந்தார். ''ஒரே பந்துக்காக நீங்கள் பதினேரு பேரும் அப்படிச் சண்டை போட்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே இவைகளை அனுப்பினேன்!''

ஆனால் இங்கே இருக்கிறோமே, பதினேரு பேர், நம் எல்லோருக்கும் ஒரு சமயத்தில் ஒரு பந்து போதும் என்றே நினைக்கிறேன். அதாவது ஒரு சமயத்தில் ஒரே ஒரு தீர்மானத்தைப் பற்றி மட்டும் விவாதிப்போம்!

## பைரனின் மூடநம்பிக்கை

என்றென்றும் நினைவில் தங்கும் காதற் பாக்களைப் பாடிய பெருங்கவிஞர் பைரனுக்கும் சில மூடநம்பிக்கைகள்

இருந்தன. அவருக்குரிய பொழுதுகள் பூராவும் பெண்களின் அழகான—மயக்கம் நிறைந்த இன்பச் சூழ்நிலையில்தான் கழிந்தன.

அவருடைய முப்பத்தாறுவது வயதில் அவர் இறந்து விடுவாரென்று யாரோ ஒரு நாடோடிக் கும்பல் அவரிடம் சோதிடம் சொன்னது. அவர் இதனால் வெகுவாகப் பாதிக்கப் பட்டார்.

ஏன் தெரியுமா?

அவரது தந்தை சரியாக அதே முப்பத்தாறுவது பிறந்த தின விழாவில்தான் மரண மடைந்தார்.

அவரது சகோதரியும் அவ்வாறே!

ஆனால் பைரனோ சோதிடம் கணிக்கப்பட்ட மூன்று மாதங்கள் கழித்துத்தான் இறந்தார்!

## நூறாண்டுக் கனவு

ஜான் ராக்பெல்லர் மூன்று அதிசயச் சம்பவங்களின் மூலம் உலகத்தைக் கவர்ந்தது மெய்!

ஒன்று: அவர் சுடும் வெய்யிலில் அலைந்து உருளைக் கிழங்குகளைத் தோண்டி ஒரு மணிக்கு நாலு செண்டுகள் வீதம் சம்பாதித்தார்!

தான் ஏழை என்பதால் தன்னை மணக்க மறுத்த பெண்ணையே கடைசி வரைக் காதலித்து அவளையே திருமண மும் செய்து கொண்டார்!

இரண்டு: உலகச் சரித்திரத்தில் இதுவரை யாருமே வழங்காத அளவுக்கு 750,000,000 டாலர் வழங்கியுள்ளார், பொது நிறுவனங்கட்கு!

மூன்றுவது: தொண்ணூற்றேழு வயது வரை அவர் வாழ்ந்தார். அமெரிக்காவில் பொதுமக்களால் வெறுக்கப் பட்ட மனிதர்களில் அவர் ஒருவர். அவரைக் கொன்றுவிடுவ தாகப் பயமுறுத்தி ஆயிரக் கணக்கான கடிதங்கள் அவருக்குத் தினமும் வந்தன. ஆகவே, அவர் இரவும் பகலும் பாதுகாப் புடன் இருந்து வந்தார்.

ராக்பெல்லர் நிறுவனத்தின் சொத்து இன்றளவில் நிமிஷத்துக்கு நூறு டாலர் விகிதம் பெருகி வளர்ந்து கொண் டிருக்கிறதாம்!

ஆனால், பாவம் அவர் நூறாண்டு வாழ கண்ட கனவு மட்டும் பலிக்கவில்லையே!

## ஞாபக மறதி

விஞ்ஞான மேதை எடிசன்.

ஒரு சமயம் பாஸ்டன் நகரத்துப் பெண்கள் பள்ளிக்கூடத்தில் மின்சாரம் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்ற இணங்கியிருந்தார்.

ஆனால், குறித்த நேரத்தில் அவர் அங்கு வந்து சேரவில்லை.

நேரம் கழிந்து கொண்டேயிருந்தது.

எடிசனைத் தேடிக் கண்டுபிடிக்க பலர் புறப்பட்டார்கள். பல இடங்களில் அவரைத் தேடிப்பார்த்தும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

கடைசியில் அவர் நண்பர் ஆடம்ஸ் அவரைக் கண்டு கொண்டார். ஒரு வீட்டின் உச்சியில் எடிசன் உட்கார்ந்திருந்தார். அவர் அங்கு தந்திக் கம்பி அமைக்கும் அலுவலில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார்.

பெண்கள் பள்ளியில் எடிசன் பேசவேண்டும் என்பதை அவரது நண்பர் நினைவூட்டினார்.

"ஆ! மறந்தே போனேன்!..." என்று வருந்தினார். உடனே கீழே குதித்தார் எடிசன். நேரே பெண்கள் பள்ளிக்கூடம் நோக்கிப் புறப்பட்டார். வெகு அற்புதமாக உரை நிகழ்த்தினார்.

எதைப் பற்றிப் பேசவேண்டும் என்பதுகூட அவர் அங்கு சென்ற பிறகுதான் ஞாபகத்துக்கு வந்தது. அவரது சொற்பொழிவு எல்லோரையும் வியப்பிலாழ்த்திவிட்டது. வீடு திரும்பும்போதுதான் அவர் தம் உடைகளின் நிலையைக் காண நேர்ந்தது.

"நீங்கள் உடைகளை மாற்றிக் கொண்டு வந்திருக்கலாம்" என்றார் ஆடம்ஸ்.

'ஓ...! வாஸ்தவம்தான்! நீங்கள் இதை என்னிடம் முன்கூட்டியே நினைவூட்டியிருக்கலாமல்லவா?' என்று வருந்தினாராம் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் எடிசன்!

## தண்ணீர்ப் பிரச்னை

இந்து—முஸ்லீம் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்ட அண்ணல் காந்தி அடிகள் நவகாளியில் பாத யாத்திரை செய்து கொண்டிருந்த சமயம் அது.

எங்கும் தாங்க முடியாத குளிர். ஆகவே காந்திஜிக்கு கால்களைக் கழுவ சுடுநீர் கொணர்ந்து கொடுத்தார் மனுபஹன்.

இதைக் கண்ட காந்திஜி வருத்தம் அடைந்தார். "தினமும் உணவு தயாரிப்பதற்குக் கூட விறகு இல்லாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கையில், என் கால்களைச் சுத்தப்படுத்த வெந்நீர் தயாரிப்பதற்காக விறகுகளை வீணடித்து விட்டாயே? இது தவறு? குளிர் ஆனால் என்ன? கைகால்களைக் கழுவ பச்சைத் தண்ணீர் போதாதா?" என்றார்.

மனுவுக்கு உண்மை புரிந்ததும் அடிகளிடம் மன்னிப்புக் கோரினார்.

## காந்திஜியின் சட்டை

மகாத்மா காந்தி அப்போது ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தார்.

பாபுஜியைக் கண்டதும் மாணவர்கள் வணக்கம் தெரிவித்தார்கள். சட்டை அணியாமல் இருந்த காந்திஜியைக் கண்டதும், மாணவன் ஒருவனுக்கு அதிசயமாக இருந்தது.

"பாபுஜி! நீங்கள் சட்டை போட்டுக் கொள்ள மாட்டீர்களா? என் அன்னை அழகான சட்டை தைத்துத் தருவாள். நான் தைத்துக் கொண்டு வந்து தரட்டுமா?" என்று அன்புடன் கேட்டான்.

காந்திஜி புன்னகை தவழச் சொன்னார்; "எனக்கு 40 கோடி சகோதரர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் ஆளுக்கொரு சட்டை வீதம் தைத்துக் கொடுக்க உன் தாயால் இயலுமா? அப்படியென்றால் தான், நானும் சட்டை போட்டுக்கொள்வேன்!"

கேள்வி கேட்ட மாணவன் சிந்தனை வசப்பட்டு நின்று விட்டான்!

## பாரதிதாசனுக்கு அடிமை

பாரதிதாசனைப் பற்றி உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். 'தமிழுக்கும் அமுதென்று பேர்!' என்கிற இந்தப் பாட்டைச் சினிமாவில் நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்த அழகான பாடலைப் பாடியவர் பாரதிதாசன் தான். எண்பதாவது பிறந்த நாள் விழா கொண்டாடப் பெறும் நேரமல்லவா?

'ஓடி விளையாடு பாப்பா!' என்று பாடினாரே பாரதி அவருக்குத் தாசன் இவர். இவருக்கும் தாசன்மார்கள் உண்டு.

ஒருவர் சுரதா. பாரதிதாசனுடைய இயற்பெயர். சுப்பு ரத்தினம், சுப்புரத்தினதாசன் தான்—சுரதா.

'தூங்காதே தம்பி. தூங்காதே! என்று பாடிவிட்டு அமர நித்திரை கொண்டு விட்டாரே, பட்டுக்கோட்டை கவிஞர், அவர்கூட பாரதிதாசனை குருவாகக் கொண்டவர் தான்.

புகழேந்தி என்று புதிய கவி ஒருவர் புரட்சிக் கவியர சரிடம் குருகுலவாசம் செய்தார். அவர் ஒருநாள், என்னிடம் கதை ஒன்று சொன்னார், பாரதிதாசனைப் பற்றிய கதை அது.

ஒருசமயம், பாரதிதாசன் முடிவெட்டிக் கொள்ளப் போனார். புதிய இடம் ஆனால் முடிவெட்டி முடிந்ததும் வழக்க மாக வேறு இடத்தில் கொடுப்பது மாதிரி அந்த நாவித ருக்கும் ஒரு ரூபாய் கூலி கொடுத்தாராம். ஆனால் அந்த ஆள் வாங்க மறுத்துவிட்டாராம்.

பாரதிதாசன் ரொம்பவும் பிடிவாதக்காரரா் ஆயிற்றே! அவரும் அதற்குமேல் கூடுதலாகக் கொடுக்க விரும்பவில்லை.

இருவரும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது. அங்கு ஒருவர் வந்தார். "ஐயா, வணக்கம்!" என்று வணங்கினார். விவரம் அறிந்ததும், "என்னப்பா இது. இவர்தான் பாரதிதாசன்!" என்றாராம், நாவிதரிடம்.

அவ்வளவு தான்.

அந்த நாவிதர், பாரதிதாசன் பாதங்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டாராம். அத்துடன் நிற்கவில்லை. உடனே ஓடிப்போய், பத்து ரூபாய்க்கு பழம் முதலியன வாங்கி வந்து பரிசிலாகக் கொடுத்து மகிழ்ந்தாராம்.

அந்த நாளிலே இம்மாதிரிக் கவிகளுக்கு பரிசில் கொடுக்க மன்னர்கள் இருந்தார்கள். இப்போதும் மன்னர்களுக்குப் பஞ்சம் ஏது? நாமெல்லாம் தான் இந்நாட்டு மன்னர்கள் ஆயிற்றே!

பாரதிதாசன் ஆனந்த மடைந்தாராம். தம் பாடல் களுக்கு பொதுமக்கள் மத்தியில் உள்ள வரவேற்பை நினைத் துத்தான் அவர் அப்படி மகிழ்ச்சி அடைந்தாராம்.

அத்தகைய பெருமை கொண்டவர் பாரதிதாசன். அவர் அமரராகி விட்டார். 'சாகித்ய அகடமி பரிசு இப்போது அவரது 'பிசிராந்தையார்' நாடகத்துக்குக் கிடைத்திருக் கிறது.

## மகாத்மா காந்திக்கு ஜே

குவாலியரில் கிங்கோலி என்னும் இடத்தில் மகாத்மா காந்தி தங்கியிருந்தார். ஒரு சமயம், காந்திஜியும், அவரது

நண்பர் ராம் நாராயண் சௌத்திரியும் காட்டு மார்க்கமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். சில குடியானவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

அப்போது நடுக்காட்டில் ஆயுதம் தாங்கிய கும்ப மொன்று எதிர்பட்டது. உடன் இருந்த குடியானவர்கள் அக்கும்பலைப் புரிந்து கொண்டார்கள். இவர்கள் பயங்கரக் கொள்ளைக்காரர்கள் என்று மெல்லிய குரலில் காந்திஜியின் நண்பரிடம் தெரிவித்தார்கள். மகாத்மாவின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என்று ராம் நாராயண் சௌத்திரி அஞ்சினார்.

ஆனால் காந்திஜியோ மௌனமாகப் புன்னகையோடு நடந்து கொண்டேயிருந்தார்.

எதிர்ப்பட்ட கொள்ளைக்காரர்கள் இவர்களை நெருங்கியதும், "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷமிட்டு காந்திஜியை வணங்கியபடி விரைந்து சென்று விட்டார்கள்.

## சூப்

புகழ் பெற்ற பெவின் பிரிட்டனின் அயல் நாட்டுக் காரியதரிசியாக இருந்த சமயம் அது.

லண்டனில் இருந்த சீனத் தூதுவர் அவரை விருந்துக்கு அழைத்திருந்தார். "எப்போதாவது நீங்கள் சீன நாட்டு உணவைச் சாப்பிட்டது உண்டா?" என்று கேட்டார்.

ஆமாம், எனக்கு எட்டாம் எண்ணுள்ள உணவு வகை என்றால், நிரம்பப் பிடித்தம்!" என்றார் பெவின்.

சீனத்து உணவுக் கடைகளிலே உணவு வகைகளை எண்களில் வரிசையைக் குறிப்பிட்டுத்தான் இனம் பிரிப்பது வழக்கம்.

என்றாலும், பெவின் குறிப்பிட்ட எட்டாம் எண் உணவு விவரம் சீனத்தூதுவர் டாக்டர் செங்குக்குக் குழப்பம் விளைவித்தது. ஆகவே, "உங்களுக்கு கோழிக் கறி, மாமிசம், மீன் வகை இவற்றில் நீங்கள் சொன்ன எட்டாம் நம்பர் 'டிஷ்' எது?" என்று வினவினார்.

அவர் குறிப்பிட்ட உணவு வகைகளில் தான் குறித்த எட்டாம் நம்பர் டிஷ் எதுவும் இல்லை என்று தெரிவித்தார் பெவின்.

உடனே சீனத் தூதருக்குப் புரிந்து விட்டது.

பெவினுக்கு விருப்பமான எலும்பு சூப் பரிமாறப்பட்டது. அவர் புன்னகை செய்தார். அவர் அதற்கப்புறம் கலந்து கொண்ட எல்லா விருந்துகளிலும் சீன உணவில் பிரசித்தி

பெற்ற சூப் பரிமாறப்பட்டது. இதே சூப், பிரிட்டிஷ் ராணி கலந்துகொண்ட ஒரு பெரிய விருந்திலும் வெகுவாகப் பாராட்டப் பெற்றது!

## அறைகள் எத்தனை

டாக்டர் அழகப்ப செட்டியார் ஒரு வள்ளல் மட்டுமல்ல, ஓர் அதிசய மனிதரும் கூட.

ஒரு சமயம், அவர் பம்பாய்க்குச் சென்றிருந்தார். மேல் நாட்டுப் பாணியில் நடத்தப்பட்டு வரும் ரிட்ஸ் ஹோட்டலுக்குள் நுழைந்து, தங்குவதற்கு அறை வேண்டுமென்று கேட்டார்.

"அறை காலி இல்லை" என்றார் அந்த ஹோட்டலின் நிர்வாகி.

அழகப்பர் விடவில்லை. "இந்த ஹோட்டலில் எத்தனை அறைகள் இருக்கின்றன?" என்று வினவினார்.

"இந்த ஹோட்டலையே விலைக்கு வாங்கப் போகிறவர் மாதிரி அல்லவா நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள்!" என்றார் நிர்வாகி, ஏளனமாகச் சிரித்த படி.

"ஆமாம், விலைக்கு வாங்கத்தான் போகிறேன். என்ன விலை?"

லட்சக் கணக்கில் ஒரு பெரிய தொகையைச் சொன்னார் ஹோட்டல் நிர்வாகி.

உடனே வள்ளல் அழகப்பர் அந்த மாபெரும் ஹோட்டலையே விலைக்கு வாங்கிவிட்டார்!

## ஆப்பிள் தோல்

ஒரு சமயம். நேருஜியும், கிருபளானியும் இன்னும் சில அரசியல் தலைவர்களும் விழா ஒன்றில் ஓய்வாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நேருஜி ஆப்பிள் பழங்களைச் சீவி தோல்களை வீசிவிட்டு பழத்துண்டுகளை மாத்திரம் ஒரு தட்டில் வைத்துக் கொண்டிருந்தார்.

பண்டிட்ஜி! ஆப்பிள் பழங்களின் தோல்களையெல்லாம் இப்படி வீணாக்கலாமா? அந்த ஆப்பிள் பழத்தோல்களில் தான் வைட்டமின் சத்துக்கள் அபரிமிதமாக இருக்கின்றன!" என்றார் கிருபளானி.

மறுவிநாடி, நேருஜி கீழே கிடந்த ஆப்பிள் பழத்தோல்களையெல்லாம் கச்சிதமாகப் பொறுக்கி ஒரு தட்டில் இட்டு

அதை கிருபளானியிடம் விஷமப் புன்னகையோடு நீட்டினர்.

நேருஜியின் நகைச்சுவைப் பண்பு கிருபளானியையும் தான் சிரிக்க வைத்து விட்டது!

## தாய் மண்

“ஓடி விளையாடு பாப்பா!” என்று பாட்டுப் பாடி, உங்களுக்கெல்லாம் உற்சாகம் ஊட்டிய கவிஞர் யார் என்பது தெரியும். ஆமாம்; பாரதியார் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லி விடுவீர்கள்.

‘மகாத்மா’ என்ற பட்டத்தை காந்திஜிக்குச் சூட்டிய தமிழ்க் கவி யாரென்று தெரியுமா? அந்தத் தமிழ்க் கவியும் பாரதியார் தான்! “வாழ்க! எம்மான்!” என்று தொடங்கும் காந்தி அஞ்சலிப் பாடலில் “மஹாத்மா நீ வாழ்க, வாழ்க!” என்று பட்டம் சூட்டிப் பாடலை முடிக்கின்றார் அமரகவி.

பாரதியார் புதுமைக் கவி, புரட்சிக் கவிஞரும் கூட. அது மட்டுமல்ல. அவர் தேசிய மகாகவி!

ஒரு சமயம்:

சுப்பிரமணிய பாரதியார் வெளியூர் செல்லவேண்டி, எழும்பூர் ரயில் சந்திப்பு நிலயத்தை அடைந்தார். அவரை வழியனுப்ப வந்திருந்தார்கள் நாட்டு விடுதலையில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் பலர்.

தாய் நாட்டின் விடுதலை பற்றிப் பேச ஆரம்பித்து விட்டால், பாரதியார் உணர்ச்சி வசப்பட்டு விடுவார். அவ்வாறு, அவர் பேசத் தொடங்கினர். வண்டி புறப்படத் தயாராக நின்றது அதில் ஏற முயன்றார். கால் தவறித் தரையில் விழுந்து விட்டார்.

உடனே, நண்பர்கள் பாரதியைத் தூக்க முயற்சி செய்தார்கள்.

பாரதியார் என்ன செய்தார், தெரியுமா ?

மண்ணில் புரண்டு கொண்டேயிருந்தாராம் தேசிய கவி. “என்னுடைய தாய் மண்ணிலே இன்னும் கொஞ்ச நேரம் புரண்டால் தான் எனக்கு அமைதி கிடைக்கும். அடுத்த ரயிலில் நான் போகிறேன்!” என்று சொல்லி, ஆசைதீர தாய் நாட்டு மண்ணிலே புரண்டாராம் அமரகவி!

## மைசூர் நாராயண பாகவதர் யார்?

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆர். கே. நாராயணன் தமிழ் மண்ணுக்குச் சொந்தம். அவர் எழுத்துக்கள் உலகத்துக்குச் சொந்தம்.

அவர் எழுதிய நூல் ஒன்றுக்கு ஆஸ்திரேலியப் பத்திரிகையான 'சிட்னி ஹெரால்டில், விமரிசனம் எழுதியிருந்தார்கள். அதில் இவரது புகைப்படம் என்று நினைத்துக் கொண்டு, நம் பாரத ஜனாதிபதியின் படத்தை தவறுதலாகப் பிரசுரித்து விட்டார்களாம்!

"ஆஸ்திரேலியாக்காரர்களுக்கு இரண்டும் ஒன்றுதானே என்று நானும் சும்மா இருந்து விட்டேன்!" என்கிறார் நாராயணன்.

1961-ல் சாகித்ய அகாடமி பரிசு பெற்றார்.

1964-ல் 'பத்மபூஷன் நாராயணன்!'

"நான் எழுத்தாளன் ஆக ஆகியிருக்கவில்லையென்றால், நான் மைசூர் நாராயண பாகவதர் ஆகியிருப்பேனோ என்னவோ!" என்றார், விகடனுக்கு அளித்த பேட்டியின் போது.

ஆம்; இவர் வசிப்பது, மைசூரில்தான்!

## பந்த் பல்லவி

அன்று:

ஜீப் ஒன்றில் பந்த் அவர்களும் லால்பகதூர் அவர்களும் பிரயாணம் செய்தபோது, ஜீப் விபத்துக்கு இலக்காகவே, பந்தும் சாஸ்திரியும் தூக்கித் தரையில் எறியப்பட்டார்கள். பந்த் கீழே விழ, லால்பகதூர் அவர்மேல் விழுந்து விட்டார்.

பின்னர், இந் நிகழ்ச்சி நேருஜியின் காதுகளை எட்டியது.

உடனேயே நேருஜி விமர்சனம் செய்தார்.

நல்ல வேளையாகப் போய் விட்டது. நீங்கள் கீழே விழுந்து, உங்கள் மீது வல்லப பந்த் விழுந்திருக்கும் பட்சத்தில் பாவம், உங்கள் கதி என்னவாகியிருக்கும். நல்ல வேளை, தப்பித்தீர்கள்!" என்றார் நேருஜி—லால்பகதூரைப் பார்த்து!

## பெண் திலகம்

காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் எதிரியாக விளங்கியவர் அந்த அம்மையார். அவரே பின்னர், காந்தியடிகளின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராகவும் ஆனார்.

இவ்வம்மையார் பாரத நாட்டுச் செல்வியா? அல்ல, அயல் நாட்டுச் சொத்து. ஆனாலும், இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்டார்!

இவர் பாரதத்தில் காங்கிரஸ் அக்கிராசனுராகவும் விளங்கினுர்.

இவரே முதன் முதலாக காங்கிரசுக்கு ஒரு கொடியையும் கொடுத்தார்.

இந்து, முஸ்லீம் ஆகிய இருவருக்கும் பயன் தரும் வகையில் சிவப்பு, பச்சை நிறங்களைக் கொண்டிருந்தது அக் கொடி. நடுவே வெள்ளை, அதன் மையத்தில் சர்க்கா—ராட்டையும் இருந்தது.

அன்னுரது இந்திய நாட்டுப் பணியை சரித்திரம் என்றென்றும் மறக்காது; மறக்க முடியாது. அவர் நினைவுக்குத் தபால் தலைகளை வெளியிட்டுக் கவுரவித்தது நம் அரசாங்கம்.

அந்த மேலைநாட்டுப் பெண் திலகம்தான் அன்னி பெஸண்ட் அம்மையார்!

## நிழற்பட நேரு

பாரதப் பிரதமர் நேருஜியும் ஆஸ்திரேலியப் பிரதமர் ராபர்ட் பென்ஸிஸ்ஸரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

"இந்த உலகத்திலேயே அதிகமாகப் படம் பிடிக்கப் படுபவர் தாங்கள் ஒருவர்தான். உங்கள் போட்டோ இல்லாத பத்திரிகையே கிடையாது. உங்கள் படத்தை நீங்களே பார்த்துத் தற்பெருமை அடைகிறீர்கள்!" என்று சொன்னுர், ஆஸ்திரேலிய நாட்டின் பிரதமர்.

இதைக் கேட்டுவிட்டுப் புன்னகையுடன் பதில் தெரிவித்தார் ஜவாஹர்லால் அவர்கள்.

"உங்கள் எண்ணம் சரியல்ல. உங்கள் நாடு மிகவும் முன்னேற்றம் அடைந்த நாடு, படித்தவர்கள் மிகுதி. ஆகவே, ங்கள் நாட்டுக்காகச் செய்யும் சேவைகளை அவர்கள் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொள்கிறுர்கள். ஆனுல் இங்கே எங்கள் நாட்டில் பெரும்பாலோருக்கு எழுத்தறிவு இல்லை. நான் அவர்களுக்காகச் செய்து வரும் சேவைகளைப் பற்றியும் நாடு அடைந்து வரும் முன்னேற்றம் பற்றியும் அவர்கள் பத்திரிகைகளில் படித்து அறிந்து கொள்ள முடியாது. அதனுல்தான், அணைக்கட்டைத் திறந்து வைப்பது, கிராமங்களைப் பார்ப்பது, அவர்களுடன் நெருங்கிப் பேசுவது என்று இப்படிப் பல நிகழ்ச்சிகளுக்கு நான் 'போஸ்' கொடுக்கிறேன். என் படங்களைப் பார்த்துத் தான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். அப்புறம் தான் நான் அவர்கட்காகச் செய்யும் பணிகளிலும் கடமைகளிலும் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். பிறகுதான்

அவர்கள் உண்மையான மகிழ்ச்சி அடைவார்கள். அந்த மகிழ்வுதான் என் வாழ்நாளின் மகத்தான லட்சியமாகும்!" என்று முடித்தார் நேருஜி.

## ஆம்; மாற்றம்தானே?

பரிதிமாற் கலைஞன், பள்ளி மாணவனுகப் படித்த காலத்தில், சூரிய நாராயணன் என்னும் பெயரை ஆங்கில ஆசிரியர் உச்சரிக்கக் கஷ்டப் பட்டார்.

"ஜுரி, எனக்கு உன் பெயரை உச்சரிக்கக் கஷ்டமாக இருக்கிறது."

"என்ன செய்தல் வேண்டும்?"

"மாற்றிக் கொள்."

மறுநாள் ஆஜர் பட்டியலைப் படிக்க மில்லர் துரை அதிக மான கஷ்டம் அடைந்தார், சூரியநாராயண சாஸ்திரி என மாற்றியிருந்தார்.

"உன் பெயரை மாற்றச் சொன்னேனே!"

"ஆமாம். மாற்றியிருக்கிறேன்! நீங்கள் குறுக்கச் சொல்ல வில்லையே;" என்முராம் மாணவன் சூரியநாராயண சாஸ்திரி.

## தேன்... எண்ணிக்கை

அவிநாசியில் ஆசிரியர்கள் இலக்கிய மன்றத்துக்குரிய ஆண்டு விழாவில் "முத்தமிழ்க் காவலர்", கி. ஆ. பெ. விசுவ நாதன் அவர்கள் தலைமை ஏற்றுர். பால்வாய்ப் பசுந் தமிழைப் பற்றிப் புகழ்ந்தார். "தமிழ் மொழி தேனைப் போன்ற இனிய நற்சுவை யுடையது. பேசினுலும், கேட்டா லும் தேன் ஊறும். இப்போது பாருங்களேன்!...நான் படித்தேன், நான் உட்கார்ந்தேன், நான் பார்த்தேன், நான் எடுத்தேன், நான் சிந்தித்தேன்!...பாருங்கள், எத்தனை தேன், பாருங்களேன்!" என்றுர்.

தமிழ் ஆர்வலர்கள் திகட்டாத் தேன் மாந்திய திளைப்பில் மெய்ம் மறந்தார்கள்.

## கறுப்பு ம. பொ. சி.

சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு செனட் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருந்ததால், உறுப்பினர் என்ற முறையில் ஒரு பட்டமளிப்பு விழாவுக்குச் செல்ல வேண்டியவரானுர். பட்டதாரிகள் அணியும் விசேட கறுப்பு அங்கி அணிந்து கொள்ள வேண்டும்.

தம் நண்பரான டி. செங்கல்வராயன் அவர்களிடம் தம்முடைய தர்மசங்கடத்தை விவரித்தார்.

கவலைப்பட வேண்டாம் என்று அபயமளித்தார் டி. சி. உடனே ம. பொ. சிக்கு எட்டு முழம் வேஷ்டி வாங்கிவரச் செய்து பஞ்சக் கச்சத்தை பஞ்சமின்றிக் கட்டினார். கறுப்புக் கவுனையும் போட்டு விட்டார். தலைப்பாகையையும் சூட்டினார். போய்வரும்படி ஆசி அளித்தார்.

ம. பொ. சி. இந்தப் புதிய கோலத்துடன் தம் வீட்டுக்கு வந்தார்; கண்ணாடியில் பார்த்தார். அசந்து போனார். அவர் வேடம் அவருக்கே பிடிக்கவில்லை. 'இந்தப் புதிய உருவத்தில் நான் சென்றால், மாணவர்கள் என்ன நினைப்பார்கள் என்னைப் பற்றி? சே, சே!...'' என்று கருதினார்.

அன்றையப் பட்டமளிப்பு விழாவுக்கு ம. பொ. சி. செல்லவில்லை!

## மக்களின் தொண்டர்

ஆவடி காங்கிரஸ் நடந்த நேரம்.

வெய்யில் சூடு பறந்தது.

தாகத்தால் தவித்தார்கள் மக்கள். 'தண்ணீர்!' என்று குரல்கள் நாலா பக்கங்களிலும் எதிரொலித்தன.

அப்போதைய முதலமைச்சராகப் பணிபுரிந்த காமராஜ் அவர்கள் இவ் விவரம் அறிந்தார், ஓடிவந்தார். இரண்டு வாளித் தண்ணீருடன் ஓடிவந்தார். தண்ணீரைக் குவளைகளில் ஊற்றி அவரே எல்லோருக்கும் கொடுக்கத் தொடங்கி விட்டார். அதன் பின் தொண்டர்கள் ஓடிவந்து, தண்ணீர்ப் பணியைத் தொடர்ந்தது வேறு வேறு விஷயம்!

என்றுமே காமராஜ் மக்களின் தொண்டர்தான்!

## தேவை-ஒரு வயிறு

புலவர் ஒருவருக்கு அன்பர் ஒருவர் மிகச் சிறந்த விருந்தை அளித்தார். பலவகையான காய்கறிகள், பட்சணங்கள், இன்சுவைப் பண்டங்கள், பழங்கள் முதலியவை அடங்கிப் பெருவிருந்தாக இருந்தது அது.

விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த புலவர், பாயசம் பரிமாறிய பொழுது, "எல்லாம் நன்றாக இருக்கிறது; ஆனால் ஒன்றுதான் குறை'' என்றார். விருந்து செய்வித்தவர் திடுக்கிட்டார். புலவர் மறுபடியும், "எல்லாம் செய்தீர்கள். இன்னும் ஒன்று செய்து எனக்குத் தந்திருந்தால் எவ்வளவு

நன்றாயிருக்கும்!'' என்றார். அன்பர், ''தங்களுக்குப் பிரியமானது எது என்று முன்பே கேட்டுக் கொள்ளாதது தவறுதான். ஆனாலும் இப்போது அந்தக் குறையைத் தெரிவித்தால் அடுத்த முறை நிறைவேற்றுவேன்!'' என்றார்.

''இவ்வளவு செய்தவர்கள், ஒரு வயிற்றையும் தயார் செய்து எனக்கு அளித்திருந்தால் எவ்வளவு திருப்தியாகச் சாப்பாடுவேன்!'' என்று புலவர் சொன்னபோது, உடனிருந்த யாவரும் தடுமாற்றம் நீங்கிச் சிரித்தார்கள்.

## யார் அறிஞர்?

ஒரு சமயம் எடின்பர்க் வீதி ஒன்றின் வழியாக பிளாக்கி என்ற அறிஞர் சென்று கொண்டிருந்தார். அவரது கழுத்தைச் சுற்றியிருந்த சுருள் சுருளான, பளபளக்கும் கேசத்தைக் கண்டு யாவரும் வியப்படைவதுண்டு.

தெருவின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த சக்கிலியச் சிறுவன் ஒருவன் அறிஞர் முன் சென்று, ''பூட்ஸுக்குப் பாலிஷ் போடட்டுமா?'' என்று கேட்டான்.

அச் சிறுவனின் அழுக்கேறிய கழுவப்படாத முகத்தைப் பார்த்த அறிஞர் அருவருப்படைந்து, ''இந்தா, இந்த ஆறு பென்ஸை எடுத்துக் கொண்டு போய், முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவிக் கொண்டு வா!'' என்றார்.

அச்சிறுவன் மறுகணமே அருகிருந்த குழாய்க்குச் சென்று கைகளினால் முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டுவந்து அறிஞர் முன் நின்றான். அவனது பளிச்சென்றிருந்த முகத்தைப் பார்த்து அறிஞர் திகைத்தார்.

சிறுவன் அவர் முன் வந்து, ''ஸார், இதோ உங்கள் பணம். உங்களுடைய தலை மயிரை வெட்டிக் கொள்ள உபயோகித்துக் கொள்ளுங்கள்!'' என்றான்.

## ஜாதித் துவேஷம்

முன்பொரு தடவை தென்னாட்டில் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னை தலைதூக்கி இருந்த நேரத்தில், காந்திஜி மத்தியஸ்தம்ம் தேவைப்பட்டது. காந்திஜியிடம் பெரியார் ஈ. வெ. ரா. சென்று பிராமணர்களின் ஜாதிவெறி பற்றி புகார் செய்தார். அப்போது அவர்களுக்குள் நடந்த உரையாடலில் ஒரு துணுக்கு.

பெரியார்: ''பாபுஜி, பிராமணர்களில் ஜாதி வெறியற்ற யோக்கியமான ஒருவரைக் கூட என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.''

காந்திஜி: "அப்படியா! நான் அதை ஏற்க மாட்டேன். இதோ, திலகர் இருக்கிறாரே! இதற்கு என்ன சொல்கிறீர்?"

பெரியார்: தங்களைப் போன்ற மகாத்மாவின் கண்களுக்கே ஒருவர்தான் தென்பட்டார்! என்னைப் போன்ற சாமான்யர்களுக்கு அதுகூட தெரியவில்லை போலும்!

## பாத யாத்திரை

1955, ஏப்ரல்.

அமெரிக்க கான்ஸல்—ஜெனரல் டாக்டர் பிராங்ளின் மயிலாப்பூரில் எழுந்தருளியிருந்த காஞ்சி காமகோடி பீடாதிபதிகளைத் தரிசித்து, தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டதுடன், தமது அபிப்பிராயத்தையும் தெரியப் படுத்திக் கொண்டார். "நீங்கள் பாத யாத்திரை செய்யும் போது, தங்கள் பின்னால் நானும் தொடர்ந்து நடந்து வர விரும்புகிறேன்!" என்பதே அவர் விருப்பம்!

பேசும் தெய்வம் இணங்கி முறுவல் பூத்தது!

## "வந்தே மாதரம்"

1942-ல் சிறையில் மகாத்மாஜி உடல் நலமிழந்து இருந்தார்.

அவரது உடல்நலம் சீர்பெற இந்தியா பூராவிலுமே பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்தன.

சென்னையில் அம்மு சுவாமிநாதனும் மஞ்சு பாஷிணி முதலானோர் மட்டுமே எஞ்சி நின்றனர். அவர்கள் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்த முன்வந்தனர். அவர்களையும் கடைசி நேரத்தில் வெள்ளையாட்சி கைது செய்தது.

அப்போது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இருதய நோயால் அவதிப்பட்டார். விவரம் அறிந்து ஓடிவந்து, கூட்டத்தை நடத்தினார். 'கூட்டம் நடத்தினால் கைது செய்வோம்!' என்று பயமுறுத்திய அதிகாரியை எள்ளி நகையாடினார். "காந்திஜியின் உயிரைக் காப்பதற்காக இங்கே தடைமீற வந்திருக்கும் நாங்கள் கைதாவதற்கு மட்டுமல்ல; தூக்கு மேடை ஏறவும் தயார்" என்று வீறு கொண்டு பேசினார்.

போலீசும் சேர்ந்து வேடிக்கை பார்க்கும் நிலை வந்தது. இரண்டு லட்சத்திற்கும் அதிகமான ஜனக்கூட்டம் கூடியது.

"வந்தே மாதரம்!...மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷங்களுடன் கூட்டம் 'ஜாம் ஜாம்' என்று நடந்து முடிந்தது.

மறுநாள், காந்திஜி விடுதலை செய்யப்பட்டார்!

## கொள்ளையரிடையில்!

வினோபாஜி ராஜஸ்தானத்தில் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தார். அங்கு சில தினங்கள் முன்புதான் கொள்ளைக்காரர்கள் நான்கு மணி நேரத்தில் இரண்டு லட்சம் ரூபாய்களைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தார்கள்.

வினோபாஜி அக்கிராம மக்களைப் பார்த்து, "நான்கு மணி நேரத்துக்கு கொள்ளைக்காரர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்தீர்கள். நான் இங்கு இருபது மணி நேரம் தங்கப் போகிறேன். எனக்கு எவ்வளவு பணம் தருவீர்கள்?" என்று கேட்டார்.

"இரண்டு அல்லது மூன்றாயிரம் தரலாம்!" என்றார்கள் கிராமவாசிகள்.

"அப்படியானால், பயமுறுத்துபவர்களின் மதிப்பு இரண்டு மூன்று லட்சம். அன்புக்கு மதிப்பு வெறும் மூவாயிரம் தானா!" என்று சூடாகக் கேட்டார் பூதானத் தந்தை.

## ஜெய்ஹிந்த்

"யுவ பாரதமே, எழுந்திரு! ஹிமாசலத்தின் பனி முடி உன்னை அழைக்கிறது!" என்று சுவாமி விவேகானந்தர் முழக்கம் செய்தார்.

அம் முழக்கம்தான் சுபாஷ் சந்திர போஸை மாற்றியது. அவர் இமய மலைக்குச் சென்றார். சில காலத்திற்குப் பிறகு சந்நியாசி ஒருவர் அவரிடம், "நீ வீட்டுக்குச் செல்; துயர்ப்படும் லட்சக்கணக்கான உன் சகோதர சகோதரிகளுக்கு நீ பணி செய். தெய்வத்தை அப்போது நீ காண்பாய்" என்றார்.

அவ்வுபதேசம் சிறு பிராயத்தில் அவருக்குக் கிட்டியது. தெய்வ நம்பிக்கையின் வளர்ச்சியில் அவர் எத்தனையோ கஷ்டங்களைச் சமாளித்தார். நெப்போலியனை வழிகாட்டியாகக் கருதினார். சுவாமிகளைக் குருவாக வழிபட்டார்.

வெள்ளையர்களை ஏமாற்றி இங்கிருந்து மாறுவேடத்தில் தப்பிச் சென்றார், அவர்.

அவர்: நேதாஜி ஆனார்.

சிங்கப்பூரில் ஆஜாத் ஹிந்த் சர்க்காரின் தலைவராக இருந்தபோது, அவர் நட்ட நடுநிசியில் ராமகிருஷ்ண மடத்திற்குக் காரில் சென்று ஒற்றை வேட்டியுடன் பிரார்த்தனை அறையில் இருப்பாராம்! துளசி மாலையும் கீதையும் அவருக்கு அருமருந்தாயின. 'ஜேஹிந்த்' என்ற வீரவாசகத்தின் சரித்திரம் இருக்கும் வரை நேதாஜி உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக அர்த்தம்!

## தாய்நாட்டின் சொத்து

வ. வே. சு. ஐயரால் சேரமா தேவியில் நடத்தப் பட்டு வந்த 'பரத்வாஜ் ஆஸ்ர'மத்திற்குப் போட்டியாக, கம்யூனிஸ்டுத் தலைவர் திரு ப. ஜீவானந்தம் காரைக்குடி—சிராவயலில் 'காந்தி ஆஸ்ரமம்' நடத்தி வந்தார்.

அந்த ஆசிரமத்துக்கு வ. உ. சி., வ. ரா. போன்றோர் சென்றார்கள்.

அந்நேரத்தில், இலங்கைக்குப் போகும் வழியில் மகாத்மா காந்தி காரைக்குடிக்கு விஜயம் செய்தார். அவரை ஜீவாவும் ஏனைய நண்பர்களும் ஆசிரமத்துக்கு அழைத்தனர்.

"உங்களுக்குச் சொத்து ஏதாவது இருக்கிறதா?" என்று ஜீவாவிடம் காந்திஜி கேட்டார்.

"என் தாய்நாடுதான் என் சொத்து, பாபுஜி!" என்றார் ஜீவா.

"இல்லை. நீங்கள்தான் நம் தாய்நாட்டின் சொத்து!" என்றார் காந்திஜி.

## ஷேக்ஸ்பியர் சொத்து

ஆங்கில இலக்கியத்தின் மங்காத துருவ நட்சத்திரமாக விளங்குபவர் வில்லியம் ஷேக்ஸ்பியர். அவர் திருமணம் புரிந்து கொண்ட ஆனே ஹதாவே அவரைவிட எட்டு வருஷம் மூப்பு. இருவருக்கும் அடிக்கடி சண்டை, சச்சரவு தான்; ஆகவே அவர் அவளை விட்டு வெகுதூரம் விலகியே வாழ்ந்தார்.

பதின்மூன்று வயசில் பள்ளிக்கூடத்தை விட்டு வேலைக்குப் போனார் ஷேக்ஸ்பியர். பால் கறந்தார்; ஆடு மேய்த்தார்; தோல் பதனிட்டார்.

லண்டன் வந்து பல வருஷங்கள் கழித்ததும், அவர் ஒரு நடிகரானார். நல்ல பணம் சம்பாதித்தார். கூடுதல் வட்டிக்கு கடன் கொடுத்தார். அவருக்கு வயது நாற்பதானபோது அவரிடம் ஏராளமாகச் சொத்து இருந்தது. இத்தனை சொத்தில் அவர் தம் மனைவிக்கு ஒரு 'செண்ட்' கூட விட்டு வைக்கவில்லை!

அவரது நாடகங்கள் எல்லாம் அவர் இறந்து ஏழு வருஷங்கள் கழித்துத்தான் வெளிவந்தன!

ஷேக்ஸ்பியரின் பெயரில் வந்த நாடகங்கள் எல்லாம் ஸர் பிரான்ஸிஸ் பேகன், ஆக்ஸ்போர்ட் ஏர்ல் போன்றோரால் எழுதப்பட்டவையே என்பதை நிரூபிப்பதற்கென்றே

நிறையப் புத்தகங்கள் வெளிவந்தன வென்று டாக்டர் எஸ். ஏ. டானென்பாம் எழுதுகிறார். இவரும் ஷேக்ஸ் பியரின் விமரிசர்களிலே ஒருவர்; குறிப்பிடத் தகுந்தவர்!

## சிறுமியே குரு

உலகப் பேரறிஞர் ஐன்ஸ்டீனைத் தேடிக் கொண்டு பள்ளிச் சிறுமி ஒருத்தி அவரது 112-ம் எண் இல்லத்துக்கு ஓடி வந்தாள். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் போட்ட வீட்டுக் கணக்கைச் செய்து தரச் சொன்னாள்; அவ்வாறே கணக்குக்கு விடை கண்டு சொல்லிக் கொடுத்தார். இந்நிகழ்ச்சியைத் தன் தாயிடம் போய்ச் சொன்னாள் சிறுமி.

சிறுமியின் அன்னை விவரம் அறிந்து துடித்தாள். விஞ்ஞான மேதையின் பொன்னான பொழுதை வீணடித்து விட்டிருக்கிறாளே தன் மகள் என்று வருந்தி அப்பெரியாரிடம் மன்னிப்பு வேண்டினாள்.

"உங்கள் மகள் என்னிடமிருந்து கற்றுக் கொண்டதைப் பார்க்கிலும், நான் அவளிடமிருந்து கற்றுக் கொண்டதே அதிகம்!" என்றார் அப்பெரியார்!

## காஷ்மீர் நிலை

மறக்க முடியாததொரு சம்பவம்:

இந்தியப் பிரதமர் நேருஜியும் பாகிஸ்தான் பிரதமரான அயுப்கானும் புதுடில்லியில் விமான நிலையத்திலேயே ஓர் அறையில் உரையாடினர்.

நேருஜி ஓர் ஆப்பிளை எடுத்து அயூப்கானிடம் கொடுத்தார்.

அயூப் உடனே ஒரு கத்தியை எடுத்து ஆப்பிளைச் சுட்டிக் காட்டி, "இது காஷ்மீர்!" என்று கூறி, அதை வெட்டி ஒரு துண்டத்தை நேருஜியிடம் நீட்டினார்.

காஷ்மீரைப் பிளவுபடுத்த வேண்டுமென்ற வெறிக்கு சூசகமா அச்சம்பவம்?

ஆப்பிள் சரிவர வெட்டப்படாததால், நேருவிடம் இருந்த ஆப்பிள் கொஞ்சம் பெரிதாக இருந்தது. அயூப்கானிடம் இருந்தது சிறிதாகக் காணப்பட்டது. "இன்றைய காஷ்மீர் நிலையைச் சொல்கிறீர்களா?" என்று வினவினார் நேருஜி.

காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் பிடித்து வைத்திருந்த பழைய நிகழ்ச்சியைத்தான் அன்று நேருஜி அப்படிக் குறித்தார்!

## "வெள்ளையனே வெளியேறு"

"1942-ல் "வெள்ளையனே! வெளியேறு!" என்ற புரட்சி இயக்கம் சூடு பிடித்து நடந்து கொண்டிருந்தது, அப்பொழுது.

இதை முன்னின்று நடத்திய அண்ணல் காந்தி அடிகளை யும் அன்னை கஸ்தூரி பாயையும் பம்பாய் ஆகாகான் மாளிகை யில் சிறைப்படுத்தினார்கள் வெள்ளையர் ஆட்சியினர்.

அதற்கடுத்த ஆண்டில் அன்னை கஸ்தூரிபாய் மரண மடைந்தார். அன்னையை ஆகாகான் மாளிகையிலேயே அடக்கம் செய்தனர்.

பின்னர் இம்மாளிகையை காந்திஜி வாங்க நினைத்து, ஐரோப்பாவிலிருந்த ஆகாகானுக்குக் கடிதம் எழுதி விசாரித் தார். இத்தனைக்கும் அவ்விருவருக்கும் பரஸ்பரம் அரசியல் வேற்றுமைகள் இருந்த காலம் அது.

என்றாலும், காந்திஜியின்பால் அதிகமான மரியாதை கொண்டிருந்தார் ஆகாகான். அம்மாளிகையைக் காந்தி ஜிக்குப் பரிசாகவே கொடுத்து விட்டார் அவர்.

## எல்லாம் வல்லவர்

'பிறை' என்ற பத்திரிகையை அபுல்கலாம் ஆஜாத் 1912-இல் தொடங்கினார். முதல் உலக மகா யுத்தத்தின்போது இருபத்தையாயிரம் சந்தாதாரர்கள் பெருகியிருந்தனர். தேசியத்திலிருந்து விலகி ஆங்கில மோகத்தில் கட்டுண்டு இருந்த முஸ்லீம்களைத் தம் வயப்படுத்தவே இப்பத்திரிகை தொடங்கப்பட்டது. அவர் சிறந்த மத வாதி, இலக்கிய வாதி.

அண்ணல் காந்தி அடிகள்—அபுல் கலாம் ஆஜாத் இருவருடைய பரஸ்பர நேசமும் பாசமும் அளவிட முடியாதது. காந்திமகான் முன் உரிமையுடன் சிகரெட் பிடித்த ஒரே ஒரு தலைவர் ஆஜாத்தானாம்!

அரபி, பாரசீக, உருது மொழிகளில் வல்லவர் ஆஜாத்!

'இந்தியாவின் மூளை' என்று இவரை அமெரிக்க ஆசிரியர் ஜான் கண்டெர் வருணித்தார்.

## அவமதிப்பு விசித்தாசாரம்

அமெரிக்க நாட்டின் புகழைப் பெற்ற எழுத்தாளர் மார்க் ட்வெயின் கீழ்கண்டவாறு ஒரு விளக்கம் சொல்லி யிருக்கிறார்:

"இந்திய ரெயில்வேக்களில் பயணம் செய்யும் முதல் வகுப்புப் பிரயாணிகள் கார்டை அவமதிக்கிறார்கள்; கார்டோ மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளை லேசாக எடுத்துக் கொண்டு அவமதிக்கிறார். ஆனால் இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளோ ஒருவரையொருவரே அவமதித்துக் கொள்கிறார்கள்!"

எப்படி வியாக்கியானம்!

அவர் தமக்கு ஏற்பட்ட ஒரு லட்சம் டாலர் தொழில் கடனை அடைக்க வேண்டி, 1896-ல் இந்தியாவில் பிரயாணம் செய்து பிரசங்கங்கள் புரிந்து பணம் ஈட்டினபோதுதான், மேற்கண்ட விளக்கத்தைச் சொல்லியிருக்க வேண்டும்!

## ருஷ்ய ஞானிக்குக் கூலி

ருஷ்ய நாட்டு ஞானி டால்ஸ்டாய் எழுதும் நேரம் போக மீதி நேரங்களிலே வயலில் வேலை செய்வார்.

ஒருமுறை அவர் ரயில்வே ஸ்டேஷன் ஒன்றில் நின்று கொண்டிருந்தார். அவர் தோற்றம் உழவரைப் போலக் காணப்பட்டது.

ரயில் நிலையத்தில் இவரைக் கைதட்டிக் கூப்பிட்டாள், யாரோ பெண் ஒருத்தி, "ஐயா, என் கணவர் உணவு விடுதிக்குச் சென்றிருக்கிறார். வண்டி புறப்பட்டு விடும் போலிருக்கிறது. அவரை உடனே அழைத்து வாருங்கள். உங்களுக்குக் கூலி தந்து விடுகிறேன்" என்று தன் கணவரின் அடையாளங்களைச் சொன்னாள்.

அவள் கணவரை அழைத்து வந்து விட்டார் டால்ஸ்டாய். அதற்குக் கிடைத்த கூலிப் பணத்தையும் பெற்றுக் கொண்டார்.

பிறகுதான், அவர் டால்ஸ்டாய் என்னும் உண்மை அவளுக்குத் தெரிய வந்தது. மன்னிக்கும்படி மிகவும் வேண்டினாள்.

"உங்களுக்கு என் மன்னிப்புத் தேவையில்லை. ஆனால், நீங்கள் கொடுத்த கூலிப் பணத்தைத் திருப்பித் தர மாட்டேன். ஏனென்றால், அது நான் உழைத்துப் பெற்றது" என்று சிரித்தார் ஞானி.

## மிஸ்டர் புல்

துப்பறியும் ஷெர்லாக் ஹோம்ஸ் எனும் அதிசயப் பாத்திரத்தைப் படைத்த மேலை நாட்டு எழுத்தாளர் கானன் டாயல் ஆவியுலக ஆராய்ச்சிகளிலும் வல்லுநர்.

அவரது நண்பர் ஜான் மாத்யூ என்பார் அப்போது இறந்து போயிருந்த சமயம்.

"உங்கள் நண்பர் ஜான் மாத்யூவின் ஆவி உங்களுடன் பேசியிருக்குமே, என்ன சொன்னது?" என்று அவரிடம் வேறொரு நண்பர் கேட்டார்.

'இல்லை' என்று விடையளித்தார் துப்பறியும் கதாசிரியர்.

பார்த்தீர்களா? இறந்தவர்கள் பேசுவார்கள் என்பது வெறும் ஹம்பக் என்று இனிமேலாவது ஒப்புக் கொள்ளுவீர்களா?" என்று ஓர் அழுத்தம் கொடுத்து வெகு அமர்த்தலாகக் கேட்டார் நண்பர்.

கானன்டாயல் கட கடவென்று மறுகணம் சிரிப்பைக் கக்கினார். "அதெப்படி மிஸ்டர் புல்!...அவர் இறந்த சமயத்தில் எனக்கும் அவருக்கும் பலத்த மனஸ்தாபம், பேச்சு வார்த்தை கிடையாதே! பின் எப்படி அவர் ஆவி வந்து என்னிடம் பேசும்? கொஞ்சமாவது விவேகமாக நீங்கள் கேள்விகளை அணுகக் கூடாதா?" என்று மடக்கப் பார்த்த நபரையே மடக்கி விட்டார் ஆசிரியர்.

## பெரியவர்கள்

அப்பொழுது இயங்கிய அரசியல் உலகிலே திரு ஈ. வே. ரா., ராஜாஜியின் வலது கையாக விளங்கி வந்தார். காங்கிரஸ் வேலைகளிலே அதிக உற்சாகம் காட்டி உழைத்தார்.

மாநாடு ஒன்றிலே குறிப்பிட்ட சிலரால் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்று தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்த ராஜாஜி எண்ணினார். பக்கத்தில் அமர்ந்திருந்த ஈ. வே. ரா—விடம் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசச் சொன்னார். வேறு கவனத்திலிருந்த ஈ. வே. ரா. அவர்கள் என்ன, ஏது என்று கூட வினவாமல், அத்தீர்மானத்தை எதிர்த்து சரமாரியாகப் பேச ஆரம்பித்தார். அவர் பேச்சை முடித்த பிறகு தன் ஆசனத்தில் அமர்ந்தவுடன், "ஏன் அந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும் என்று சொன்னீர்கள்?" என ராஜாஜியைக் கேட்டார்.

ராஜாஜி சிரித்துக் கொண்டே, "அதைத்தானே இவ்வளவு நாழி நீங்கள் விளக்கிக் கொண்டிருந்தீர்கள்' என்றார்.

## நரகத்துக்கு!

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் காங்கிரசுக்குத் தேர்தல் அண்டிக் கொண்டிருந்தது, 1847-அம் ஆண்டு.

'விக்' கட்சியின் சார்பிட்டு ஆபிரஹாம்லிங்கன் நின்றார்.

அவருக்கு எதிராக 'டெமொக்ராடிக்' கட்சியின் சார்பில் பீட்டர் கார்ட்ரைட் எனும் மதபோதகர் நின்றார்.

அவர் ஒரு கூட்டத்தில் மதச் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார். லிங்கனும் அக் கூட்டத்துக்கு வந்து இருந்தார். லிங்கனுக்குக் கடவுள் நம்பிக்கையும் மதப்பற்று தலும் இல்லை என்று நிரூபிக்க வேண்டுமென்று விரும்பினார் போதகர். "உங்களிலே சுவர்க்கத்தை அடைய விரும்புவோர் எழுந்திருங்கள்," என்றார்.

சிலர் எழுந்து நின்றார்கள்.

பிறகு!

"நரகத்துக்குச் செல்ல விரும்பாதவர்கள் எழுந்து நிற்கலாம்!" என்றார்.

ஆபிரஹாம்லிங்கனைத் தவிர, அனைவரும் எழுந்து நின்றனர்.

மதபோதகர் விசையுடன் லிங்கனை நோக்கி, "லிங்கன் அவர்களே! தாங்கள் எங்கே செல்ல ஆசைப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அமைதியான நிதானத்துடன், "காங்கிரசுக்குச் செல்ல ஆசைப்படுகிறேன்!" என்று பதிலிறுத்தார் ஆபிரஹாம்லிங்கன்!

## ஹிட்லருக்குக் கடிதம்

உலக மகாயுத்தத்தின் இரண்டாம் கட்டத்திலே தீரர் ஹிட்லர் மாபெரும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருந்த வேளை அது. அப்போது அண்ணல் காந்தி அடிகள் அன்னாருக்குக் கடிதமொன்று எழுதி அனுப்பினார்.

"ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட நீங்கள் பலாத்காரமான வழிகளைக் கடைப் பிடித்து வருகிறீர்கள். ஆனால், நானோ, அறவழி முறையில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டு வருகிறேன். அவ்விரு வழிகளிலே எதற்கு வல்லமை உண்டு என்பதைக் காலமல்லவா உலகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும்!" என்று காந்திஜி எழுதினார்.

ஆம்; காலம் எடுத்துக் காட்டி விட்டதே—அறம் வெல்லும் என்பதை!

## சிரிக்கும் மனிதர்!

உலகத்தையே ஆட்டிப் படைத்த அடால்ப்ஃ ஹிட்லர்—அந்த நாஜிஸப் பயங்கர வாதியையும் ஓர் அதிசய மனிதர் திகைக்க வைத்தார் என்ருல், அதிசயமாகத் தோன்றுகிற தல்லவா?

அம் மனிதர் அந்த ஹிட்லரைக் கூட பயமுறுத்திய அளவுக்கு அவர் கைவசம் வைத்திருந்த ஆயுதம் சிரிப்பு—அவர் தயாரித்த 'சர்வாதிகாரி' என்னும் படம்!

அந்தச் சிரிப்பின் மனிதர்தான்; சார்லிசாப்ளின்!

## சைமன்ஸ் பரதன்

சில ஆண்டுகளுக்கு முன், அமெரிக்கத் தூதராக தமிழகத்தில் இருந்தார் டாக்டர் சைமன்ஸ்.

அவர் இங்கிருந்த வரையில் ஒரு தமிழராக—ஓர் இந்தியராகவே பழகினர். அப்படியென்ருல் அவரது நல்ல மனத்தை யாவரும் புரிந்து கொள்ளக் கூடும்.

ஒரு சமயம், அவர் கம்பராமாயணத்தைப் பற்றி ஒரு விருந்தில் ஓர் உரை நிகழ்த்தினர். பரதனின் உயர்வு பற்றி அவர் கிட்டத்தட்ட நூறு நிமிஷங்கள் வரை அழகாகப் பேசினர் என்ருல், ராமாயணத்தில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடும், புலமையும் புலனுகிறதல்லவா? அவரது உணர்ச்சிச் செறிவு மிகுந்த சொற்பொழிவைக் கேட்டு தமிழ்ச் சான்ருேர் பலர் அப்படி மெய்ம் மறந்து போயினராம்!

## இரட்டைப் பலம்

பிரசித்தி பெற்ற தளபதி மாண்ட் கோமரிக்கும் சர்ச்சிலுக்கும் இடையில் ஒரு பேச்சு நடந்து கொண்டிருந்தது.

ஒருவகைப்பட்ட தனித்த கர்வப் பிடிப்புடன் பெருமையாகத் தலையை நிமிர்த்திய தளபதி மாண்ட் கோமரி, ஸர் வின்ஸ்டன் சர்ச்சிலை நோக்கி, "நான் குடிப்பதில்லை; புகை பிடிப்பதில்லை; அதனுல்தான் உடல் வலிமையுடன் காணப் படுகிறேன்!" என்று சொன்னர்.

அதற்கு சர்ச்சில், "நான் குடிக்கிறேன்; புகை பிடிக்கிறேன்; அதனுல்தான் உங்களைப் போல இரண்டு மடங்கு வலிமையுடன் காணப்படுகிறேன்!" என்ருரே, பார்க்கலாம்!

## பலூன் நேரு

தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது, ஒரு கிராமத்தில் நேருஜியின் கார் நின்றது.

அப்போது வயதான கிழவர் ஒருவர் பலூன்களை விற்றுக் கொண்டிருந்தார்.

அவரை அண்டி அவரது தோள் மீது அன்புடன் கை போட்டபடி, பலூன் விலையை விசாரித்தார் மக்கள் தலைவர்.

"ஒரு பலூன் இரண்டணா!" என்ற பதில் வந்தது.

உடனே தம் பையைத் துழாவிப் பார்த்தார் நேருஜி.

வழக்கம் போல அப்போதும் அவர் தம்முடன் பணம் எடுத்துச் செல்லவில்லை.

உடனே தம் நண்பர் ஒருவரிடம் ரூபாய் இருபத்தைந்து வாங்கி அந்தப் பலூன் வியாபாரியிடம் கொடுத்து, எல்லாப் பலூன்களையும் வாங்கிக் கொண்டார்.

கிழவருக்குக் கண்களில் பனி பெய்தன.

நேருஜி எப்போதுமே குழந்தை தானே!

உடனே, எல்லாக் குழந்தைகளுக்கும் பலூன்களைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு மீண்டும் காரில் ஏறிக் கொண்டு தமது பிரயாணத்தைத் தொடரலானார்!

## குறி!

இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரியாக வில்ஸன் அவர்கள் இருந்த நேரத்திலே தேர்தல் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கையில், பலர் பலவிதக் கேள்விகளைக் கேட்டுச் சலசலப்பை ஏற்படுத்தினார்கள்.

அப்போது, சிறுவன் ஒருவன் ஓர் அழுகல் முட்டையை பிரதமரின் முகத்தில் வீசியடித்தான். உடனே அவனைப் போலீஸார் கைது செய்தார்கள்.

வில்ஸன் அப் பையனை விடுதலை செய்யுமாறு பணித்தார். "இவ்வளவு குறி தவறாமல் கச்சிதமாக முட்டை வீசும் இச் சிறுவனை இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்!" என்றார்.

அதிகாரிகள், சூழலையும் மறந்து சிரித்து விட்டார்களாம்!

## டாக்டரும் கல்கியும்

தமிழ்த் தாத்தாவைப் பார்க்கச் சென்றிருந்தார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். 'கலைமகளி'ல் கல்கியின்

எழுத்துக்களை அவர் படித்திருக்கிறார். அவற்றைப் புகழ்ந்து பாராட்டினார் ஐயர்.

பின்பு, தமது வாழ்நாளில் நடந்த சில நிகழ்வுகளைச் சொன்னார்:

ஒரு சமயம், ஒரு ஜமீந்தார் முன்பு, ஐயரும் தமிழ்ப் பண்டிதர் ஒருவரும் உட்கார்ந்திருந்தனர். அப்போது, அந்தப் பண்டிதரைப் பார்த்து, சாமிநாதய்யருக்கு உம்மைப் போல நிமிடத்துக்கு ஒரு பாட்டு இயற்ற முடியுமா, என்ன? அவருக்கு என்ன தெரியும்?" என்று வஞ்சிப் புகழ்ச்சி செய்தார்.

இதை அறியாத பண்டிதர், அந்த ஜமீந்தாரின் கூற்று உண்மையென்றே எண்ணி மகிழ்ந்தாராம்.

இதைக் கேட்ட கல்கி அவர்கள், "கொஞ்ச நாழிகை முன்பாக என்னை உற்சாகப்படுத்துவதற்காகத் தாங்கள் பாராட்டியதை, நான் உண்மையென்றே எடுத்துக் கொண்டு நம்பி மகிழலாமல்லவா?" என்றார், புன்னகைக் கோலத்துடன்.

தமிழ்த் தாத்தா குலுங்கக் குலுங்கச் சிரித்தார். "உம் எழுத்து அசல் தங்கமய்யா!...தமிழ் கூறும் நல்லுலகமே ஒப்புக் கொண்டு விட்ட உண்மை ஆயிற்றே அது!" என்று பாராட்டினார் மீண்டும்!

## மொழியில் பாகுபாடா?

காந்திஜியின் ஹரிஜன நிதிக்கு ஐந்து ரூபாய் கொடுத்தால்தான் 'ஆட்டோகிராப்ஃ'ல் அவரது கையெழுத்தைப் பெற முடியும்.

அந்த ஐ. ஸி. எஸ். பிரமுகர், ஐந்து ரூபாயை நீட்டினார். தம் வழக்கப்படி ஹிந்தியில் கையெழுத்துச் செய்து கொடுத்தார் காந்திஜி.

ஆனால் அந்த ஐ. ஸி. எஸ். காரரோ தமிழில்தான் கையெழுத்துப் போட்டுத் தரவேண்டுமென்றார்.

"அதற்கு ரூபாய் நூறு வேண்டும்!" என்றார் காந்திஜி.

"தமிழுக்கும் இந்திக்கும் ஏன் இந்த வேறுபாடு?" என்று கேட்டார் பிரமுகர்.

தலைவரோ திகைத்தார். பிறகு ஐந்து ரூபாய்க்கே தமிழிலும் ஒரு கையெழுத்துப் போட்டு நீட்டினார்.

பிரமுகர் விடாக்கண்டர். மீண்டும் ஓர் ஐந்து ரூபாயைக் கொடுத்து ஆங்கிலத்திலும் கையெழுத்துப் போடும்படி வேண்டினார்.

காந்திஜிக்குக் கோபம் வந்தது. "ஓர் இந்தியனுக்கு ஆங்கிலத்தில் கண்டிப்பாகக் கையெழுத்துப் போட்டுத் தர முடியாது!'' என்று மறுத்தார்.

ஐ. ஸி. எஸ். புள்ளி, ''தாங்கள் மொழி, இனம் இவற்றில் வேற்றுமை காட்டுபவரல்லர் என்பதை நிரூபிக்கவே ஆங்கிலத்திலும் போட்டுத் தரும்படி கேட்டேன். அவ்வளவுதான்!" என்று மடக்கினார்.

வேறு வழியின்றி, தலைவர் புன்முறுவலுடன் ஆங்கிலத்திலும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

அந்த ஐ. ஸி. எஸ். ஏ. எஸ். பி. ஐயர்!

## நாலணாக் கையெழுத்து

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒருசமயம் பெரியார் ஈ.வே. ரா—வும் குன்றக்குடி அடிகளும் நாகரசம் பட்டியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அப்போது, அடிகளார் கன வேகமாக நோட்டுக்களிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஐயா கேட்டார், அடிகளிடம். "ஒரு கையெழுத்துக்குப் பணம் எவ்வளவு?" என்று.

தாம் சும்மா-.இனாமாகத்தான் போடுவதாகச் சொன்னார் குன்றக்குடியார்.

''பொது வாழ்வுக்கு வந்து விட்ட உங்களுக்கு இம்மாதிரி விஷயங்கள் ஓரளவுக்காவது உதவும். தயங்கக் கூடாது!" என்று 'இதோபதேசம்' செய்தார் சமுதாயச் சீர்திருத்தத் தந்தை.

அவ்வளவுதான்.

அடிகளார் போட்ட அடுத்த கையெழுத்து நாலணா விலைக்குப் போய்விட்டது.

## தட்சிணையும் கடனும்

வங்கப் பிரமுகர் ஆசுதோஷ் முகர்ஜி ஒருநாள் விடி காலையில் கங்கையில் குளித்துத் திரும்பிக் கொண்டிருந்தார்.

வயதான ஓர் அம்மாள் அவரைத் தடுத்து, "மகனே, உன் கோலப் புனிதத்தை நோக்கும்போது, நீ ஒரு பிராமணன் என்று தெரிகிறது. நான் என் விரதத்தை முடிக்க வேண்டியிருப்பதால், நீ என் வீடு வந்து பூஜையை நடத்தித் தர முடியுமா? அதற்குரிய தட்சிணையைக் கொடுத்து விடுகிறேன்'' என்றாள்.

அவர் சம்மதித்து அந்த அம்மணியின் பூஜையை முடித்துக் கொடுத்தார்.

முறைப்படி கொடுக்க வேண்டிய அளவான அரிசியையும் ஐந்தணா பணத்தையும் அம்மணி அவரிடம் நீட்டினாள்.

ஆசுதோஷ் அவற்றை வாங்கிப் பத்திரமாக முடிந்து கொண்டார். ஆசுதோஷை அறிந்தவர்கள் இக்காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள்.

"ஐயோ! இவர் யார் தெரியுமா, அம்மணி? இவர்தான் ஜட்ஜ் ஆசு தோஷ் முகர்ஜி" என்றார்கள்.

"நான் ஹைகோர்ட் ஜட்ஜானால் என்ன? நானும் பிராம்மணன்தானே? ஆகவே, தட்சிணையைப் பெற்றுக் கொள்வது என் கடமையல்லவா?" என்றார்.

## பொல்லாத பேர்வழி

திலகரின் நடவடிக்கைகளை உளவு அறிவதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ரகசியப் போலீஸ்காரன் ஒருவனை திலகரின் சமையல்காரனாக அமர்ந்து கவனித்து வரும்படி அனுப்பினார்கள். அவனும் அப்படியே திலகரின் சமையல் காரனாக அமர்ந்தான்.

ஆறு மாதம் சென்றது. அந்தச் சமையல்காரன் திலகரிடம், "எஜமான், சம்பளம் போதவில்லை; கொஞ்சம் உயர்த்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

திலகர் சிரித்துக் கொண்டே, "ஏனப்பா இது! நான் மாதம் ஆறு ரூபாய் கொடுக்கிறேன். சர்க்கார் இருபத்து நான்கு ரூபாய் கொடுக்கிறார்கள். இன்னும் திருப்தி இல்லையா உனக்கு?" என்று கேட்டார்.

அவ்வளவுதான்! ஆசாமியின் தலை தொங்கி விட்டது. அப்புறம் அவனைக் காணவேயில்லையாம்!

## போதுமானது

காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர்கள். அவர்கள் பேசிக் கொண்டு வரும்போதே, இரண்டு பொருள் தொனிக்கும்படி தொடர்கள் சில இருக்கும்.

ஒருநாள், ராமநாதபுரம் ராஜாவுடன் அவர்கள் இலக்கிய சம்பந்தமாகப் பேசிக் கொண்டே இருந்தார்கள். நேரம் போனதே தெரியவில்லை. பேச்சு ஒரு கட்டத்தை அடைந்த போது, ராஜா கடிகாரத்தைப் பார்த்தார். அதிக நாழிகை ஆனது தெரிந்து, "நெடுநேரம் ஆகிவிட்டது" என்றார்.

உடனே ஐயரவர்கள், "போதுமானது" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார்கள். நேரம் ஆயிற்று, பேசினது போதுமானது என்ற இரண்டு பொருளும் அதில் தொனித்தன.

## பேரீச்சம் பழம்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதற்கு முன், அவருக்கு ஸ்டீல் என்னும் பெண்மணி நேர்த்தியான விருந்தளித்தாள்.

சுவாமிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் விருந்துண்டார். உண்ணுமுன் வழக்கம்போல கடவுளுக்கு நன்றி சொல்லுவார் என்று அந்த அம்மணி எதிர்பார்த்தாள். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

அதிசயப்பட்ட அம்மணிக்குச் சமாதானம் கூற எண்ணினார் சுவாமிஜி. "உண்ணுமுன் நன்றி கூறுவதைவிட, உண்டபின் நன்றி கூறுவதே முக்கியம். அம்மா, உங்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். நீங்களே எல்லா வேலைகளையும் செய்து விருந்தும் தயாரித்தீர்கள்" என்றார் அடிகள்.

விருந்து முடிந்தது. சுவைமிக்க பேரீச்சம் பழங்களையும் அந்த அம்மாள் அளித்தாள்.

அவற்றையும் உண்டார் சுவாமிகள், களிப்புற்றார். சொற்பொழிவு முடிந்ததும், சொற்பொழிவைப் பற்றி அந்த அம்மணி பெரிதும் புகழ்ந்தாள்.

"அதற்கும் உங்களது பேரீச்சம் பழங்கள் தாம் காரணம். மீண்டும் நான் உங்களுக்கு நன்றி சொல்லுகிறேன்" என்றார் சுவாமிகள்.

அந்த அம்மணி மெய்சிலிர்த்தாள்!

## மேதைகள் சந்திப்பு நிலையம்

ஒரு சமயம்: கோயமுத்தூர் ரயில் சந்திப்பு நிலையத்தில் ஜி. டி. நாயுடு பிரயாணம் செய்வதற்காக வந்தார். அப்போது, பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்திருந்ததைக் கண்டார். உடனே அவரிடம் சென்று, பயணத்தினைப் பற்றி விசாரித்தார். அவர் செல்ல வேண்டிய இடத்துக்கான முதல் வகுப்பு டிக்கெட்டை அவரிடம் கொடுத்து விட்டு, தம்முடன் வந்து உட்காரும்படி கேட்டுக் கொண்டார். நாயுடு முன்னால் சென்றார்.

ஆனால், வண்டி புறப்பட்டும்கூட பெரியாரைக் காண வில்லை.

சென்னை சென்ட்ரலில்தான் பெரியாரை நாயுடு சந்திக்க முடிந்தது. "ஏன் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய வில்லை?" என்று கேட்டார் நாயுடு.

"வீண் பண விரயம் ஏன் என்று இருந்து விட்டேன். உங்கள் டிக்கட்டை அப்போதே பணமாக மாற்றிக் கொண்டு விட்டேனே" என்றார் பெரியார்.

தொழில் மேதை தம்மையும் மறந்து சிரித்தார்.

## பாரத சந்தி

சென்னையில் எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயிலேற பாரதி யார் வந்திருந்தார். ஏதோ ஞாபகத்தில், காலை நடை பாதையை அடுத்த பள்ளத்தில் வைக்க, சறுக்கி விழுந்து விட்டார்.

பலர் பாரதியாரைத் தூக்க ஓடி வந்தார்கள்.

"என்னை யாரும் தூக்க வேண்டாம். இந்தப் புண்ணிய மண்ணில்—பாரத நாட்டின்—என் தாய் மண்ணில் புரள எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும் ஐயா! மகான் களும் மேதைகளும் வாழ்ந்த நாடு இது!" என்று சொல்லி எழுந்து நடைமேடையிலும் நீண்ட பொழுதுவரை புரண் டார் பாரதியார்.

அவர் எழுந்த பிறகுதான் ரயில் கிளம்பியது.

ஆம்; காலத்தை வென்ற மகாகவி ஆயிற்றே!

## பாம்பே பாம்பு!

சில ஆண்டுகளுக்கு முன்னர் சங்கீத விற்பன்னர் செம்பை வைத்தியநாத பாகவதரின் கச்சேரி பம்பாய் நகரத்தில் நடை பெற்றது.

அச்சமயம், அவர் தமது பாடல்களில் பலபல புண்ணிய ஸ்தலங்களையெல்லாம் இணைத்துப் பாடினார்.

ஓர் அன்பர் குறுக்கிட்டார். "ஐயா, எங்கள் பாம்பேயை யும் உங்கள் பாட்டில் வைத்துப் பாடுங்களேன்" என்றார்.

"ஆகட்டுமே!" என்று இணங்கினார் பாடகர். உடனே, "ஆடு பாம்பே" என்று பாடினார். தொடர்ந்து "விளையாடு பாம்பே!" என்று பாடினார். 'பாம்பே'யில் இப்போது ஓர் அழுத்தம் கொடுத்துப் பாடினார்.

கூட்டம் 'பாம்பே'யின் உயர்வு கண்டு கரவொலி எழுப் பிற்று.

## ஒரு பவுன் மேதை!

அந்த இளைஞர் கன்னையா நாடகக் கம்பெனியில் முக்கிய மான நடிகராகத் திகழ்ந்தார். இரவில் விடிய விடிய நாடகம் நடக்கும். அவர் மேடையில் தோன்றி, துளியும் அயராமல் பாடல்களை வெகு அற்புதமாகப் பொழிந்து தள்ளுவார். எவ்வளவுதான் விடிய விடிய அவர் விழித்திருந்தாலும், பகலில் கொஞ்சப் பொழுதுக்குக்கூட அவர் ஓய்வெடுத்துக் கொள்வதோ, உறங்குவதோ கிடையாது.

இதை அறிந்தார் அதிபர் கன்னையா. அப்பாடகரிடம் பலமுறை சொன்னார், பகலில் ஓய்வு பெறும்படி. இல்லையேல் இரவில் எப்படிப் பாடமுடியும்?

ஆனால் அவர் பேச்சு எடுபடவில்லை. ஆகவே ஓர் உபாயம் செய்தார்,

"நீ தூங்கினால் ஒரு பவுன் பரிசு தருவேன் உனக்கு" என்றார் முதலாளி.

அப்பாடகர் பரிசு பெற்றார்.

அவர்தான் நாடக மன்னன்—சங்கீதப் பேரறிஞர் எஸ். ஜி. கிட்டப்பா.

## 'மதுரம் டீயே!'

ஒரு தருணத்தில், பேராசிரியர் கல்கி அவர்கள் கலைவாண ரின் இல்லத்துக்குச் சென்றிருந்தார்.

அப்போது:

சரித்திரச் செல்வரை—பொன்னியின் செல்வரை இன் முகம் காட்டி வரவேற்ற என். எஸ். கே. அவர்கள், ' சாப்பிடு வதற்கு உங்களுக்கு என்ன வேண்டும்? காப்பியா, இல்லை டீயா? இல்லை, குளிர் பானங்களா?" என்று விசாரித்தார்.

அதற்குத் தோதாக, திருமதி மதுரம் அம்மையாரும் அவ் வுபசரிப்பில் கலந்து கொண்டார்.

அப்போது கல்கி, "டீயே மதுரம்!" என்று பதில் சொன்னார்.

சிரித்துக் கொண்டே மதுரம் உள்ளே சென்றார், மதுர மான டீயைக் கொணர!

## நீயும் நானும்

ஜார்ஜ் பெர்னாட்ஷா ஒரு விருந்துக்குப் போயிருந்தார். அங்கே ஒரு வாலிபப் பெண்ணைப் பார்த்து பேசத் தொடங் கினார். எதைப் பற்றி? பெர்னாட்ஷாவைப் பற்றி! அரை

மணி நேரம் தன்னுடைய பிரதாபங்களை எல்லாம் அவளிடம் எடுத்தோதினார்.

கடைசியாக, "சரி, பெண்ணே! இவ்வளவு நேரம் என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். இனி நாம் உன்னைப் பற்றிப் பேசலாம். என்னுடைய கடைசி நாடகம் இருக்கிறதே அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று ஷா கேட்டார்.

## பரதேசியார்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தண்டியலங்காரம் படிக்க விரும்பினார்.

அது தருணம், திரிசிரபுரத்தில் பரதேசி ஒருவர் தமிழ் நூல்களிலே புலமையும், சிறப்பாக தண்டியலங்காரத்தில் மிகுந்த பயிற்சியும் கொண்டிலங்கியதை அறிந்தார். அப் பரதேசி தாமாக விரும்பினாலன்றி, யாருக்கும் பாடம் சொல்லித் தருவதில்லை என்ற விவரத்தையும் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தார்.

என்றாலும், எப்படியேனும் அப்பரதேசியிடம் தண்டியலங்காரம் நூலைப் பெற்றுப் பிரதி எடுத்துக் கொண்டு விடவும், அன்னாரிடம் அதைப் பாடம் கேட்டு விடவும் ஆவல் கொண்டார். பரதேசியைச் சந்தித்தார். பரதேசி பிச்சை எடுக்கச் செல்லும் பொழுதெல்லாம் அவருடன் கூடவே சென்றார். அவருக்குத் தேவையான கஞ்சாவை வாங்கி வைத்திருந்து கொடுத்தார். இப்படியே பரதேசியை மகிழ்ச்சி அடையச் செய்து, தண்டியலங்காரத்தைப் பெற்றார்; நகல் எடுத்துக் கொண்டார்.

இவரது தமிழார்வம் கண்ட பரதேசியார், இவருக்குத் தண்டியலங்காரப் பாடம் போதித்ததுடன், அவருக்குத் தம் வசமிருந்த வேறு பல நூல்களையும் நினைவுப் பரிசிலாகக் கொடுத்தாராம்!

## கவி-தமாஷ்

"காந்திஜிக்குப் பிடித்தமான ஆட்டுப் பால், தேன், அரிசி முதலியன வெளியூரிலிருந்து வரவேண்டும். அவருக்குப் பிடித்த—பழக்கமான, வறுமையில்—எளிமையில் காந்திஜியை வைத்துக் கொள்ள எங்களுக்கு எவ்வளவு செலவாகிறது என்று மட்டும் உலகத்திற்குத் தெரிந்தால்...?" என்று கவிக்குயில் சரோஜினி நாயுடு ஒரு தருணம் அன்பு நிறைந்த எரிச்சலுடன் 'தமாஷ்' செய்தாராம்!

## ஞானப் பரிசில்

அப்போது, நமது பெருமதிப்புக்குரிய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியத் தூதுவராக ருஷ்யாவில் இருந்தார்.

அதுசமயம் அவருக்கு ஒரு பெரிய வாய்ப்புக் கிடைத்தது.

அவர் ருஷ்ய தேசத்தின் சர்வாதிகாரியாக இருந்த ஸ்டாலினைச் சந்தித்தார்.

ஏனைய தூதுவர்களுக்குக் கிட்டாத ஒரு தனிச் சலுகை இது.

அது மட்டும்தானா?

அவர் ஸ்டாலினுக்கு ஒரு மகத்தான பரிசு கொடுத்து, அத்துடன் நில்லாமல் ஸ்டாலின் முதுகிலே ஒரு 'ஷொட்டும்' கொடுத்தாராம்.

அந்தப் பரிசு என்ன தெரியுமா?

அதுதான் நமது பகவத் கீதை.

கீதையின் வாசகங்கள் சிலவற்றைக் கேட்ட ஸ்டாலின் அப்படியே மெய்ம்மறந்து விட்டாராம்!

## பைபிளில் நிலக்கடலை

ஜார்ஜ் வாஷிங்க்டன் கார்வர் ஒரு ரசாயன சாஸ்திரி. சிறந்த நீக்ரோ கல்விமான். நிலக்கடலை சம்பந்தமாக அவர் செய்த ஆராய்ச்சி பற்றி செனட் கமிட்டியில் அவர் பதில் சொல்ல வேண்டி வந்தது.

"இந்த நிலக் கடலையின் ரகசியங்களை நீர் எங்கே கற்றீர்?"

"ஒரு பழைய புத்தகத்திலிருந்து!"

"என்ன புத்தகம் அது?"

"பைபிள்!"

"நிலக் கடலையைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?"

"அது ஒன்றும் சொல்லவில்லை. நிலக்கடலையைப் படைத்த கடவுளைப் பற்றி அது சொல்கிறது. அதை என்ன செய்வது என்பதைக் காட்டிக் கொடுக்கும்படி நான் கடவுளை வேண்டிக் கொண்டேன். அவரும் அப்படியே காட்டிக் கொடுத்தார்" என்றார் நிபுணர்!

## தாய்ப் பாடல்

கவியரசர் தாகூர் ஆலவாய்த் திருநகருக்கு வருகை புரிந்தார்.

அறிஞர்கள் பலர் அவரைக் காணச் சென்றனர். இவர் பாமாலை புனைந்து தாகூரைக் கண்டு சமர்ப்பிக்கச் சென்றனர்.

தாகூருக்குத் தமிழ் மொழி தெரியாது. ஆகவே, அவருக்கும் தமக்கும் பொதுவாக ஆங்கிலத்திலேயே பாடல் எழுதிக் கொண்டு போயினர் அவ்விருவரும்.

முதல் அன்பர் அழகாகப் பாடலைப் பாடினார்.

''குயில், கிளியைப் போலப் பாட முயற்சி செய்யக் கூடாது. தன் குரலாலேயே அது பாடியிருக்க வேண்டும். அதுவே இயல்பாகவும் அழகாகவும் அமைந்திருக்கும்'' என்றார் தாகூர்.

யார் பாடினாலும் தம் தாய் மொழியிலேயே பாட வேண்டுமென்பது தாகூரின் கருத்து!

## டாக்டர் வந்தார்

காந்திஜியின் வார்தா ஆசிரமத்தை அடுத்த ஓர் ஆசிரமம்.

பல தலைவர்களது அன்பு வேண்டுகோளுக்கிணங்க அந்தக் கிழவர் தமது பாத யாத்திரையை நிறுத்தியிருந்தார். அக் கிழவர் யார் தெரியுமா? அவர்தான் அண்ணல் காந்தியடிகளின் ஆத்மீக வாரிசான விநோபாஜி. டாக்டர்கள் அவரை ஓய்வு கொள்ளுமாறு வேண்டினர்.

அவரைக் காண—அவர் நலம் காண குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் வந்தார்.

அப்போது விநோபாஜி தோட்ட வேலை செய்து கொண்டிருந்தார் குடியரசுத் தலைவரைக் கண்டதும், ''உங்கள் தோட்டக்காரருக்குச் சம்பளம் எவ்வளவு கொடுக்கிறீர்கள்? நான் இன்றைக்கு மூன்று மணி நேரம் வேலை செய்தேன். இன்றைக்குச் சாப்பிடும் சாப்பாடு அளவுக்குச் சம்பாதித்திருக்கிறேனா நான் என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்! உங்கள் தோட்டக்காரன் அளவுக்கு நானும் சம்பாதித்திருப்பேனா என்று அறிந்து கொள்ள வேண்டாமா நான்?'' என்றார் விநோபாபா.

குடியரசுத் தலைவரின் வியப்பு வளர்ந்தது!

## பேசும் தெய்வம்

காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளைப் 'பேசும் தெய்வம்' என்றே கொண்டாடுகிறார்கள்; கொண்டாடுகிறோம்.

மதுரைக் கோயில் திருப்பணி முடிந்து, கும்பாபிஷேகத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டதும், திரு பி. டி. ராஜன், சுவாமிகளைக் கண்டு, கும்பாபிஷேகத்துக்கு வந்து ஆசிபுரியுமாறு வேண்டிக் கொண்டார். தேதியையும் குறித்தார். அவ்வளவு தூரம் ராமேசுவரத்திலிருந்து கால்நடையாக வரக் கூடாதென்றும் மேனுவில் வருவது சுவாமிகளுக்கு நல்லது என்றும் சொன்னார்.

"மீனுட்சி எனக்கு நடக்கச் சக்தி அளித்திருக்கும்போது, நீ ஏன் கவலைப்படுகிறுய்?" என்றுர்கள் சுவாமிகள்.

"மீனுட்சியம்மையும் தங்களோடு சேர்ந்து விட்டாற் போலிருக்கிறதே!" என்றுர் ராஜன்.

"ஏன், அதனுல் உனக்கு வருத்தம் உண்டோ?" என்றுர்கள் சுவாமிகள், வேடிக்கையாக.

தள்ளாத காலத்தில் கால் நடையாக வந்தால் உடல் நலம் பாதிக்கப்படுமே என்றே வருத்தப்பட்டார் ராஜன்.

ஆனுல், சுவாமிகள் தம் கருத்துப்படி, ராமேசுவரத்திலிருந்து நான்மாடக்கூடலுக்குக் கால்நடையாகவே எழுந்தருளி, கும்பாபிஷேகத்துக்குச் சரித்திரச் சிறப்புக் கொடுத்தார்கள்!

## பழஞ்சுவை

மேதை பெர்னுட்ஷாவின் அறிவுத் திறனைப் பாராட்டி, அவரைக் காதலிப்பதாக நடிகை ஒருத்தி கடிதம் அனுப்பியிருந்தாள். "என்னைத் தாங்கள் மணம் செய்து கொள்ளும் பட்சத்திலே, என்னைப் போன்ற அழகும் உங்களைப் போன்ற அறிவும் கொண்ட குழந்தை பிறக்குமல்லவா!" என்று மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருந்தாள் நடிகை.

அதற்குப் பெர்னுட்ஷா அளித்த பதில் இதுதான்:

"உங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. ஆனுல் ஒரு சிறு சந்தேகம். இதற்கு மட்டும் விடை தாருங்கள். நாம் இருவரும் கல்யாணம் புரிந்து கொண்டால், என்னைப் போன்ற அழகும் உங்களைப் போன்ற அறிவும் இணைந்த குழந்தைகள் பிறந்து விட்டால், என்ன ஆவதாம்?".

அப்புறம் ஷாவின் பக்கம் ஏன் திரும்பப் போகிறுள் அந்த நடிகை!

## கஸ்தூரித் திலகம்

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கென மகாத்மா காந்தி அடிகள் புனித வேள்வியை ஆரம்பித்திருந்தார்.

அப்போது பாட்னுவில் டாக்டர் சையத் முகமதுவின் மகனுக்குக் கல்யாணம். புதுமணத்துக்குக் காந்திஜியும் அவர் துணைவியும் வருகை தந்தனர்.

மணமக்கள் இருவரும் காந்திஜியின் ஆசியைப் பெற வந்தனர்.

சகோதரி என்ற பாசத்தில் மாப்பிள்ளையின் நெற்றியில் பொட்டிட்டு, தம்பதியின் வாழ்க்கையில் சகல நலன்களும் தழைத்துப் பெருகப் பிரார்த்தித்தார்.

இதன்பின், கஸ்தூரிபாய்க்கு மணமகன் மூவாயிரம் தோலா எடைத் தங்க நகைகளை அன்புப் பரிசிலாகக் கொடுத்தான்.

கஸ்தூரிபாய் தயங்கினார். கணவரைப் பார்த்தார்.

"ஒரு சகோதரன் கொடுக்கும் பரிசு. அதை வாங்கிக் கொள்ள வேண்டும். அதுவே அன்புக்கு அழகு!" என்றார் பாபுஜி.

பரிசு நகைகளை வாங்கிக் கொண்டார் அன்னை. அடுத்த சில கணங்கள் கழிந்தன. "முஸ்லீம் நிவாரண நிதிக்கு இதைக் கொடுத்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்!" என்றார் அவர் தம் கணவரிடம்.

"இது உன் பரீட்சை. இதில் நீ வென்று விட்டாய்!" என்று மகிழ்ச்சித் திளைப்புடன் தெரிவித்தார், காந்திமகான்.

## "லேடி எல்!"

பாரிஸ் நகரத்தில் தமது நாடகமான 'லேடி எல்' என்ற நாடகத்தை அரங்கேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார், ஆசிரியர் பீட்டர் உஸ்டெனுவ்.

அறையில் இரவில் அமர்ந்திருந்தபோது, பெண்ணொருத்தி கையில் கத்தியுடன் வீராவேசம் பொங்கத் தோன்றினாள். "உம்மைக் கொல்ல இதோ, நான் வந்திருக்கிறேன்!" என்று கூவினாள் அவள்.

அவள் பைத்தியம் என்பதை ஊகம் செய்தார் ஆசிரியர்.

"ஆஹா! உன் தைரியத்துக்கு என் பாராட்டுக்கள். உன்னைப்போல ஒருத்தியைத்தான் என் நண்பர் தன் படத்துக்குத் தேடிக் கொண்டிருந்தார், கதாநாயகி வேஷத்துக்காக! இரு, அவருக்கு 'போன்' செய்கிறேன்!" என்று சொல்லி, டெலிபோன் செய்தார்.

ஆனால் வந்ததென்னவோ, போலீஸ் படை.

பைத்தியத்துக்குக் கைவிலங்கு இடப்பட்டது!

## பேரம்!

காப்ரியேல் பாஸ்கல் என்ற ஹாலிவுட் பட முதலாளி ஒரு சமயம் ஷாவின் அதிகப் பிரசித்தமடையாத நாடகம் ஒன்றை வாங்க நினைத்தார்.

ஷா அதற்கு 8,000 டாலர் கோருவதாகக் கேள்விப் பட்டார் படமுதலாளி.

"4,000 டாலர் தருகிறேன்!" என்று பட முதலாளி தந்தி கொடுத்தார், ஷாவுக்கு.

"நான் முதலில் எவ்வளவு கோரினேன் என்பதைத் தாங்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை யென்று நினைக் கிறேன்! நான் கேட்டது 80,000 டாலர்!...8,000 டாலர் அல்ல!" என்று பதில் தந்தி கொடுத்தார் பெர்னார்ட் ஷா.

பட அதிபர் உடனே தந்தி கொடுத்து விட்டார்.

"மன்னிக்கவும்-40,000 டாலர் தருகிறேன்!"

## "எனக்குத் தெரியுமே!"

மதுரையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதர வில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு நேருஜி வந்தார். அங்கே டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் பனங்கற் கண்டின் பெருமைகளை நேருஜிக்குச் சொல்லத் தொடங் கினார்.

நேருஜி அதற்குள் இடை மறித்தார்: "எனக்குத் தெரியும்!" என்று சொல்லி, ஒரு பனங்கற்கண்டுத் துண்டை எடுத்து வாயில் போட்டு ஒதுக்கிக் கொண்டு புறப்பட்டார் நேருஜி!

## சபர்மதி

மகாத்மா காந்திஜி சபர்மதி ஆசிரமத்திலே இருந்த சமயம்.

ஒரு நாள், காந்திஜி மண் குடத்துடன் வந்து கொண் டிருந்தார், பக்கத்திலிருந்த கிணற்றுக்குப் போய் நீர் கொண்டு வருவதற்காக. அவர் வந்த திசைக்கு எதிராக, செல்வந்தர் ஒருவர் நடந்து வந்தார்.

வந்தவருக்குக் காந்திஜியைத் தெரியாது. ஆகவே, அவர் காந்திஜியிடமே அண்டி, "மகாத்மா காந்தியை நான் பார்க்க வேண்டும்," என்றார்.

"வாருங்கள்," என்றார் காந்திஜி.

இருவருமாகக் கிணற்றடிக்குப் போனார்கள்.

காந்திஜி தமது வேலைகளை வெகு அமைதியுடன் செய்து கொண்டிருந்தார்.

வந்த பணக்காரருக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "என்ன ஐயா, நான் மகாத்மாஜியைப் பார்க்க வந்திருக்கிறேன். 'வா' என்று சொல்லி, என்னை இங்கே அழைத்து வந்து விட்டு, நீர்பாட்டுக்கு உமது வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றீரே!...முக்கியமான காரியமாக நான் காந்திஜியைப் பார்க்க வேண்டும், ஐயா! அவரிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்!" என்று கோபமும் பதட்டமும் தொனிக்கப் பேசினார் வந்தவர்.

காந்திஜி நிதானமாகச் சிரித்தார். பிறகு, "நான்தான் காந்தி. உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

வந்த செல்வந்தர் வாயடைத்துப் போனார். 'உலகப் புகழ்பெற்ற மகாத்மா இவ்வளவு எளிமையான வாழ்வு வாழ்கிறாரே! எளிய உடை உடுத்துகிறாரே!...வேலைகளையெல்லாம் தாமே செய்கின்றாரே!' என்று வியந்தார். காந்திஜியைக் கண்முன் கண்ட களிப்பிலேயே மெய்ம் மறந்த அவர், என்ன பேசுவதென்று புரியாமல் அப்படியே சிலையாக நின்றார்! அவர் கைகள் மகாத்மாவை நோக்கிக் குவிந்த வண்ணம் இருந்தன.

மகாத்மா பதில் வணக்கம் செய்தபடி வெகு அமைதியாகவும் மிக நிதானமாகவும் புன்னகை செய்தார்; அவரது கைகள் அந்தப் பணக்காரரை வணங்கிக் கொண்டிருந்தன!

## விவாகம் ..ரத்து!

கேண்டர்பரி ஆர்ச் பிஷப் அமெரிக்காவுக்குச் சென்றார்.

அவர் ஓர் அமெரிக்கப் பிஷப்பிடம், "இங்கே விவாக ரத்து விகிதம் அதிவேகமாய்ப் பெருகிக் கொண்டு போகிறது. இது எதைக் காட்டுகிறது, தெரியுமா?...அமெரிக்கா சுதந்திர புருஷர்களின் நாடாகி வருகிறது என்பதைத் தானே?" என்று வினவினார்.

உடனே அமெரிக்க பிஷப் கூறலானார். "உண்மையே. இருந்தாலும், இங்கே விவாகங்களின் விகிதமும் பெருகிக் கொண்டே வருகிறது. இது எதைக் காட்டுகிறது, தெரியுமா? அமெரிக்கா இன்னும் வீர புருஷர்களின் நாடாகவே இருந்து வருகிறது என்பதைத்தான்! இல்லையா?..."

## நீதி...

ஹைதராபாத் உயர்நீதி மன்றத்திலே நடந்த ஒரு முக்கிய வழக்கில் ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ ஒரு தரப்பிலும், முகம்மதலி ஜின்னு அவர்கள் மறு தரப்பிலும் வக்கீல்களாக ஆஜராகி யிருந்தார்கள்.

அசல் அரபு எழுத்தில் எழுதி பெர்சிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த ஒரு தஸ்தாவேஜைப் மொழி பெயர்த்து உதவ வேண்டும் என்று ஜின்னுவை நீதிபதி வேண்டிக் கொண்டார். அவரால் முடியவில்லை. ஸர் சாப்ரூ முன் வந்து முடித்தார்.

இந்தச் சம்பவத்துக்கு முக்கியத்துவம் அளித்த பிரபல உருதுப் பத்திரிகை ஒன்று மறுநாள் வேடிக்கையாகத் தலைப்பு தந்து செய்தியை வெளியிட்டது.

“பண்டித ஜின்னுவுக்கு மௌலானு சாப்ரூ அரபு வாசகத்தை மொழி பெயர்த்துத் தந்தார்!”

## காந்திச் சீடர்

மத்தியப் பிரதேசத்தில் காந்திச் சீடர் வினேபாஜி பாத யாத்திரை தொடர்ந்தார்—சில ஆண்டுகட்கு முன்னர்;

அப்போது கிராம மக்களிடையே, ‘காந்தியின் சீடர் வினேபா வருகிறுர்!’ என்ற சேதி பரவியது.

ஒரு கிராமவாசி வந்தார்.

“காந்தி ஊரிலேயிருந்து வருறீங்களாமே?...காந்தியைப் பார்த்து ரொம்ப நாளாச்சு!...காந்தி சௌக்கியமாக இருக்கிறுங்களா?” என்று வினவினுர்.

வினேபாஜி திக்பிரமை பிடித்து நின்றுர், சிலையாக.

மீண்டும் கேட்டார் கிராமவாசி.

அழுத்தம் பதித்து, பதட்டத்துடன் கேட்டார் அக் கிராம வாசி.

வினேபாவின் தொண்டை கம்மியது: “சௌக்கியமாய் இருக்கிறுர்!” என்றுர். அவர் கண்கள் கசிந்து வழிந்தன!

## மக்களுக்குத் தலைவர்

அரசியல் தலைவர் காமராஜர் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்றிருந்த நல்ல காலம்.

கோட்டையை முற்றுகையிட்ட நரிக்குறவர்கள் நேராகக் காமராஜைப் பேட்டி கண்டார்கள்.

"இனிமே நீங்க திருடக் கூடாது. உழைச்சுச் சாப்பிடணும். எங்காவது நிலைப்பாத் தங்கிப்பிடணும். புள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பணும்!" என்று புத்தி சொன்னார்.

அவரைப் பார்க்க வேண்டுமென்று துடிதுடித்து வந்த அவர்கள் "ஐயா எங்களுக்குச் சந்தோஷம் குடுத்தாரு!" என்று கோஷமிட்டபடி பிரிந்தார்கள்.

அதையடுத்து, பத்தான்கள் பலர் காமராஜரைச் சூழ்ந்து கொண்டு அவருடன் படம் எடுத்துக் கொண்டு விடைபெற வில்லையா?

## நோபல் பரிசு

ருஷ்ய எழுத்தாளர் போரிஸ் பாஸ்டர்நாக், தாம் எழுதிய 'டாக்டர் ஷிவாகோ'வுக்கான நோபல் பரிசை— உலகத்திலேயே எழுத்தாளர்கள் பெறக்கூடிய மிக உயர்ந்த பட்ச கௌரவத்தை ஏற்க மறுத்தார்.

இச் சந்தர்ப்பத்தில், உழைப்பால் உயர்ந்து, வெடி மருந்து வியாபாரியின் பரம்பரையில் வந்த நோபல் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட அந்த ஸ்வீட்டிஷ் அகாடமியைக் கண்டித்தார், மிகாயில் ஷோலகோவ். "ஆசிரியர்களின் இலக்கிய மதிப்பை மதிப்பிடுவதில் அகாடமி பிரத்யட்ச நோக்கோடு நடந்து கொள்ளவில்லை!" என்றார் அவர்.

அந்த மிகாயில் ஷோலகோவுக்குத்தான் இவ்வாண்டு நோபல் பரிசு கிட்டியுள்ளது. 'டான் அமைதியாகச் செல்கிறது!' என்பதுதான் பரிசுபெற்ற நாவல்.

நோபல் பரிசு பெற்ற முதல் ருஷ்யர்; ஐவான்புன்னின்.

இவர் மூன்றாமவர்!

## "ஜெய்ஹிந்த்"

குஜராத் மாநிலத்திலுள்ள ஹரிபுராவில் காங்கிரஸ் பேரவை கூடியது. மாவீரர் நேத்தாஜி—அன்றைய சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் பேரவையின் தலைவரானார். அடுத்த ஆண்டுக்கும் அவர் தலைவரானார். ஆங்கிலேயர் ஆறு மாதங்களுக்குள் வெளியேறி விடவேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தனர். அவரது தீவிரப் போக்கு பலருக்குப் பிடிக்கவில்லை. அவர் விலகிக் கொண்டார்.

இந்நிலையில் இரண்டாவது உலகப் போர் மூண்டது.

சுபாஷ் போஸை வெள்ளையாட்சி சிறையிலடைத்தது.

விடுதலையாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார்.

பிறகு, அவரை விடுதலை செய்தார்கள்.

விடுதலையானபின், போஸ் தமது வீட்டில் ஓர் அறையைச் சுற்றி கறுப்புத் திரை கட்டி, அதனுள்ளேயே இருந்தார்.

ஆட்சியாளரின் காவல்படை வெளியே காவல் இருந்தது.

வைத்தியர் என்ற முறையில் ஒரு முஸ்லீம் மட்டும் அவரை தினமும் பார்த்து வர முடிந்தது.

'நாட்டை விட்டு வெளியேறி, ஆங்கிலேயர்களின் எதிரிகளுடன் தொடர்பு கொண்டு, ஆயுத உதவி பெற்று, வெளி நாடுகளில் உள்ள இந்தியர்களைத் திரட்டி, இராணுவம் அமைத்து, அப்பால் இந்த வெள்ளையர்கள் மீது ஆயுதப் போர் தொடுக்க வேண்டும்' என்று எண்ணமிடலானார்.

உடனே, தாமே அந்த முகமதிய வைத்தியர் மாதிரி உடுத்துக் கொண்டு அங்கிருந்து போய் வெளியேறினார்.

வெள்ளையர்கள் விழித்தனர்.

ஹிட்லரைச் சந்தித்தார் போஸ்.

தற்காலிக இந்திய அரசாங்கத்தின் தலைநகராக சிங்கப்பூர் ஆனது. தம் திட்டத்தை வானொலி மூலம் மகாத்மாவுக்கும் தாய்நாட்டு மக்களுக்கும் அறிவித்தார். போஸ் தலைவரானார். இந்திய விடுதலை அரசாங்கத்தைப் பிரகடனப்படுத்தினார். விடுதலை முழக்கம் ஒலித்தது. 'நேதாஜி' என்று மக்கள் அவரை அழைத்தனர். இராட்டை பொறித்த மூவர்ணக் கொடி அவர்களது அரசாங்கத்தின் தேசியக் கொடி ஆனது.

பெண்கள் படைக்கு ஜான்ஸி ராணியின் பெயர் சூட்டப்பட்டது. தலைவி: லக்ஷ்மி

இந்தியாவின் சுதந்தர அரசாங்கத்தை ஒன்பது நாடுகள் அங்கீகாரம் செய்தன.

ஜப்பான் தன் வசப்படுத்தியிருந்த அந்தமான், நிக்கோபார் தீவுகளை நேதாஜியிடம் ஒப்புவித்தது.

ஆனால், இருமுனைத் தாக்குதலால் ஜப்பான் அடைந்த சரணாகதியின் விளைவாக நேதாஜி, செய்கோன் போய்ச் சேர்ந்தார். அவர் அங்கிருந்து புறப்பட்டு ஏறிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளானது.

நேதாஜி இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார், நம்மிடையே.

வீரம் எப்போதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

ஜெய் ஹிந்த்!

## ஞானப்படகில்

சீன ஞானி ஹியூன் ஸாங் இந்திய நாட்டில் நாளாந்தாவில் பணி முடித்துத் தம் தாய்நாடு திரும்பிய தருணத்தில்,

இந்திய அறவழி நூல்கள் பலவற்றை எடுத்துச் சென்றார்.

அவரை வழியனுப்பி வைக்க இந்திய மாணவர்கள் சென்றனர். சிந்து நதியைக் கடக்க எண்ணி, படகில் ஏறினர். கடும் புயல் அடித்தது.

மாணவர்களுக்கு சுமை குறைந்தால், படகு தப்ப முடியும் என்ற நிலை புரிந்தது. உடனே அவர்கள் நீரில் குதித்தனர்.

சீன ஞானியின் இந்திய நூற் செல்வங்கள் தப்பின. ஆனால், இந்திய மாணவச் செல்வங்களை சிந்து காவு கொண்டது.

## கவிஞர் தலை

பாரசீகத்திலே ஆன்வாரி என்றொரு நல்ல கவிஞர் வாழ்ந்தார். அக்காலத்துச் சுல்தான் அவாவுதீன் என்பவரை அவதூறு செய்து ஒரு கவிதை பாடி, அது பரவி வந்தது. அதை இயற்றியது ஆன்வாரிதான் என்று மன்னர் அறிந்து, உடனே அக்கவிஞரைக் கைது செய்யும்படி உத்தரவிட்டார்.

இதை அறிந்த கவிஞர், மலைநாட்டுத் தலைவனை மலிக்தூதி என்பானிடம் அடைக்கலம் புகுந்தார்.

அக் கவிஞரைத் தன்வசம் ஒப்படைத்தால், அதற்குப் பரிசாக பதினாயிரம் ஆடுகள் தருவதாக அரசன் கடிதம் அனுப்பியிருந்தான். தலைவன் அதைக் கவிஞரிடம் காட்டினான்.

"பதினாயிரம் ஆடுகள் கொடுத்தாவது என்னை அடைய மன்னர் ஆசைப்படுகிறார். நீரோ, உமக்கு நான் இலவசமாகக் கிடைத்திருந்தும், என் பெருமையை உணரவில்லைபோல் தோன்றுகிறதே!" என்றார் கவிஞர்.

தலைவன் கவிஞரைப் பாதுகாத்தான்!

## தொப்பியும ஞாபக சக்தியும்

பல்கேரியாவில் பேராசிரியர் அலெக்ஸாண்டர் பாலபனேவ் ஒருநாள் சோபையா நகரத்துத் தெரு வழியே நடந்து போனார். அப்போது வீசிய காற்று அவரது தொப்பியைப் பறக்கச் செய்தது. பேராசிரியர் வெகு சிரமத்தின் பேரில் அத் தொப்பியைப் பற்றி எடுத்து ஒரு தாளில் சுற்றினார். அதை ஒரு பத்திரிகாலயத்தில் சேர்ப்பித்து, கீழ்க் காணும் விளம்பரத்தையும் கொடுத்தார்.

"தெருவில் சென்று கொண்டிருக்கையில் பேராசிரியர் பாலபஜேவ் ஒரு தொப்பியைக் கண்டெடுத்தார். அதை எங்கள் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்!"

இவ்விளம்பரத்திற்குப் பணம் - கட்டணப் பணம் கொடுத்து விட்டு, பேராசிரியர் தொப்பியையும் அங்கே விட்டு விட்டுப் போய்விட்டார்.

சில நாள் சென்றபின் அப்பேராசிரியர், விளம்பரம் வந்த செய்தித் தாளுடன் பத்திரிகை அலுவலகத்திற்கு வந்து தமது தொப்பியைத் தரும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டாராம்.

எப்படி இந்தப் பேராசிரியரின் ஞாபக சக்தி!

## "சுந்தரர் பெர்த்'

பத்மபூஷன் அரியக்குடி ராமாநுஜ அய்யங்காரின் புகழ் பெரிது. அவரது அடக்கம் ஆச்சரியப்படத் தக்கது. சரளமான சுபாவமும் இனிய முகமும் யாவரையும் வசீகரம் செய்யும். சாதுர்யமாகவும் நகைச்சுவையாகவும் பேசுவதில் வெகு வல்லவர் அவர். சபாரஞ்சகமாகப் பாடுவது மாதிரியே சமயோசிதமாகப் பேசுவதிலும் சமர்த்தர் அரியக்குடி. சிறந்த அறிவாளர்.

ஒரு முறை:

வெளியூர்க் கச்சேரிக்குப் பயணப்பட எண்ணி, ஸ்டேஷனுக்குச் சில விவரங்களை அறிந்து வரும்படி தம் சிஷ்யர் ஒருவரை அனுப்பி வைத்தார்

"அப்பர் பெர்த்தான் இருக்கிறதாம்" என்றார் சீடர்.

"ஏன், சுந்தரர் பெர்த் இல்லையா?" என்று கேட்டார், அரியக்குடி.

சீடருக்குச் சிலேடையின் நயம் புரிய சில காலப் பிரமாண நேரம் ஆனது!

## ஷேக்ஸ்பியர் பையன்

மகாகவி ஷேக்ஸ்பியர் ஏதோ தண்டனைக்கஞ்சி லண்டனுக்குத் தப்பி ஓடினார்.

சிறு வயசுப் பையன்.

எலிஸபெத் ஆண்ட காலம் அது.

நாடக அரங்குக்கு ஆடம்பரமான பிரபுக்கள் குதிரைகள் மீதேறி வருவார்கள். அவர்கள் விட்டுச் சென்ற குதிரைகளைப் பார்த்துக் கொள்ளும் வேலை கிடைத்தது ஷேக்ஸ்பியருக்கு.

இன்னும்கூட, குதிரைகளைப் பார்த்துக் கொள்ளும் காவல் பையன்களுக்கு 'ஷேக்ஸ்பியரின் பையன்கள்' என்றே பெயர் வழங்குகிறது—அங்கே!

## நடி. எறும்பு

டாலூலா என்ற புகழ்பெற்ற சினிமா நடிகையைப் பற்றி அந்த வாலிப விஞ்ஞானி அறிந்தான். அந்நடிகையின் பக்கத்து ஆசனத்தில் வந்து அமர்ந்தான். "எறும்புகளுக்குள்ளே போலீஸ் இலாகா உண்டு. ராணுவம் கூட உண்டு" என்று எறும்புகளின் வீரப் பிரதாபங்களைப் பற்றி ஓயாமல் பேசினான்.

நடிகைக்குத் தலைவலி எடுத்தது.

"ஆனால், அவற்றுக்குக் கடற்படை இருக்காதென்றே நினைக்கிறேன்" என்றாள்.

விஞ்ஞானி அப்புறம் மூச்சுக் காட்டவில்லை!

## சீனத்துச் சிங்காரி

வெளிநாடுகளிடையே உளவு அறிவதில் வல்லரசுகளுக்கு இடையே எப்போதுமே போட்டா போட்டி.

ஐந்தாம் படைத் தொழிலில் செஞ்சீனா முதல்.

சீனச் சுந்தரி ஸைலி—க்வாங் முதல அழகி. பதினெட்டே வயசு. மெக்ஸிகோவுக்குப் பறந்தாள். டெம்பிகோ வந்தாள். கிழவர் காவோ பைங் தம்மை அவளிடம் ஒப்படைத்தார்.

1960, பிப்ரவரி இறுதி.

ஓர் இரவு.

அவளிடம் அவர் ஒரு ரகசியத்தைச் சொல்லிவிட்டார். "ஸைபீரியாவிலிருந்து ஒரு பெரிய பெட்ரோல் கப்பல் பார்மோஸாவுக்காக வந்து கொண்டிருக்கிறது. அது பனமா கால்வாயைக் கடந்து நாளைக்கே இங்கு—டெம்பிகோ வந்து தங்கும். அதற்கு நான் பழங்களும் உணவுப் பண்டங்களும் சப்ளை செய்யப் போகிறேன்" என்றார்.

ஸைலி அனைத்தையும் வெகு அலட்சியப் பாவத்துடன் கேட்டாள்.

ஆனால் உள்ளூரில் இருந்த ஒரு பல்கேரியாக் கடைக்கு அவள் 'போன்' பேசினாள். கிழவர் வந்ததும், தனக்கு உடல் நலமில்லையென்றும் மருந்து அனுப்பும்படி சொன்னதாகவும் பொய் சொன்னாள்.

ஆனால் அவள் அனுப்பிய ரகசியச் செய்தி மூலம், காவோ பெங் தெரிவித்த பெட்ரோல் எண்ணெய்க் கப்பல் நங்கூரம் இட்டிருந்த செய்தி ஒரு தோழருக்குத் தெரிந்தது,

உடனே அபாய அறிவிப்பு மூலம் அத்தோழர் அகப் பட்டார். சுடப்பட்டார். தோழரிடம் இரு வெடிகுண்டு களும் சில ரகசியத் தபால்களும் கிடைத்தன. அமெரிக்க ரகசியப் போலீஸ் இலாகா சுறுசுறுப்படைந்தது.

மணமக்களாக வந்த நான்கு சீனச் சுந்தரிகளின் போட்டோக்களும் கிடைத்தன. எல்லாம் அவர்களின் உளவு வேலை என்பதும் புரிந்தது.

மறுவாரம், சீன வியாபாரி காவோ பைங்கின் மாளிகையைப் போலீஸார் சூழ்ந்தனர். ஸைலி வந்து கதவைத் திறந்தாள். வெளியில் சென்ற காவோ பைங் திரும்பினார்

ஸைலி, ரிவால்வரால் போலீஸ் அதிகாரியைச் சுட முயன்றாள். ஆனால் அதற்குள் அவளே சுடப்பட்டாள்.

தம் ஆசை நாயகி ஒரு பயங்கரச் சீன வேவுகாரி என்பது கிழவருக்குப் புரிந்தது!

## சம உயரம்

பாரதத்தின் பிரதம மந்திரியாக லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் கடமை புரிந்த வேளை அது.

அப்போது புது டில்லி ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றின் விழாவுக்குத் தலைமை தாங்கும்படி வேண்டப்பட்டது. சென்றார், தலைமை ஏற்றார்.

ஆயிரக் கணக்கான சிறுவர்—சிறுமியர் உலகம் குழுமி யிருந்தது.

சாஸ்திரிஜி 'மைக்'கின் முன் எழுந்து நின்று பேசத் தொடங்கினார். "இவ்வாண்டு வைபவத்துக்கு என்னைத் தலைமை தாங்க அழைத்ததானது, நானும் உங்கள் உயரத்தில் இருப்பதை உத்தேசித்துத்தான் என்று நம்புகிறேன்" என்று 'தமாஷ்' பண்ணி விட்டு, பேச்சின் மையத்துக்கு நாடினார்.

## கடன்

புது டில்லியில் பார்லிமெண்ட் வீதியில், கவிக்குயில் சரோஜினி தேவியின் நினைவுத் தபால்தலை வெளியீட்டு விழா நடந்தது.

ஏ. கே. சென், டி. ஏ. சே., லால்பகதூர் முதலானோர் மேடையில் இருந்தனர்.

தபால் மந்திரி சென் முதல் 'போணி'யாக பதினைந்து பைசா, தபால் தலைகளை விற்பனைக்கென டி. டி. கே. க்கும் சாஸ்திரிக்கும் கொடுத்தார்.

டி. டி. கே. தம் பையிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

சாஸ்திரியின் பையில் ஒன்றும் இல்லை,

சென், "ஒரு ரூபாய்க்குச் சில்லறை இல்லையே!" என்றார்.

"பரவாயில்லை. சாஸ்திரிக்கும் சேர்த்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் டி. டி. கே.

நன்றி சொன்னார் லால்பகதூர்.

"உங்களுக்குக் கடனாகத்தான் கொடுத்திருக்கிறேன். நீண்ட காலக் கடனாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். சிறு தவணைகளிலே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஆமாம்" என்று ஒரு போடு போட்டார் டி. டி. கே.

லால்பகதூர் உட்பட அனைவரும் சிரித்தனர்.

## கவிக்குப் பரிசில்

நோபல் பரிசு பெற்ற கவி தாகூரின் 'கண்கள் உன்னைக் காணவில்லை; ஏனெனில், நீ என் கண்ணினுள் மணியாக விளங்குகிறாய்!' (நயன தோமாரே பாயினா தேகி') என்னும் அற்புதமான பாடலை அடிநாளிலே அவரது தந்தை படித்து விட்டுக் கண்ணீர் மல்கி மனமுருகினார். "நம் நாட்டை ஆளுபவர்கள் நம்மவரைச் சேர்ந்தவராக இருந்திருக்கும் பட்சத்தில் உன்னுடைய இந்த அற்புதமான கவிதையை எப்படியெல்லாமோ கவுரவித்திருப்பார்கள். இப்போது என் சக்திக்கு இவ்வளவுதான் கொடுக்க முடியும்" என்று சொல்லி ஒரு பை நிறையப் பணம் அளித்தாராம்!—தாகூரின் தந்தை தேவேந்திரநாத் தாகூர்:

## மேல் நாடும் மேல் படிப்பும்!

மறைந்த இந்திய ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களின் தொண்டுக்கு நிரந்தர நினைவுச் சின்னமாக விளங்குவது 'ஜமீயா கல்வி நிலையம்.' காந்திஜியின் நல் வாழ்த்தும் நேரு, ராஜேந்திர பிரசாத் போன்ற பெரியோர் தொண்டும் இக் கல்வி நிறுவனத்துக்குக் கிடைத்தன.

ஒரு நடப்பு:

ஜமீயா படிப்பு நிறுவனத்தின்பால் கொண்ட உறவின் நிமித்தம், ஜாகிர் உசேன் தமது மேலைநாட்டுப் படிப்பையும் ஒதுக்கினார்.

பின்னர் ஒரு சமயம், அவர் மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க விழைந்த நேரத்தில், அவர் தேசியவாதி என்ற காரணத்தால் வெள்ளை அரசாங்கம் அவருக்கு 'பாஸ்போர்ட்' கொடுக்க மறுத்து வந்தது.

இச் சமயத்தில், பிரீமண்டில் என்ற ஆங்கிலேய உயர் அதிகாரி ஜாகிர் உசேனது கல்வியறிவைக் கேள்விப் பட்டார். அவரைக் கண்டு பேசினார். ஜாகீர் உசேன் நடப்பினைச் சொன்னார்.

உடனே அந்த வெள்ளைக்காரத் துரை ஜாகீர் உசேனின் வெளிநாட்டுப் பயணத்துக்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு ஆங்கிலேய கலெக்டருக்குப் பணித்தாராம்!

"வெள்ளையர்களிலும் நல்லவர்கள் இருக்கும் அதிசயத்தை நான் கண்டேன்!"

## முப்பால் கடந்து!

அன்றொரு நாள்: திருத்தணியில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் இலக்கிய மாநாடு ஒன்று நடந்து கொண்டிருந்தது. திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சொற்பெருக்கு ஆற்றிக் கொண்டிருந்தார். பிரபுலிங்க லீலையிலிருந்து சில அழகுக் காட்சிகளை அற்புதமாக விளக்கிக் கொண்டிருந்த நேரம் அது.

ஓர் அன்பர் வாரியாருக்குக் குவளையில் ஏதோ கொணர்ந்து கொடுத்தார்.

அதைக் கவனித்தார் வாரியார்.

உடனே அவர், "இது காப்பி! ஆனால், நான் சொல்வது அசல்!" என்றார்.

அருகிலிருந்த தலைவர்—சிலம்புச் செல்வர் ம. பொ. சி; அவர்கள், "டம்ளரில் இருப்பது காப்பி அல்ல; அது பால்!" என்றார்.

உடனே வாரியார், "நான் முப்பாலும் கடந்து, அப்பால் இருக்கிறேன்!...இப்பாலும் வந்து விட்டது!" என்று முடித்தார்.

கூட்டம் சிரித்தது!

## கோஸிஜின்: 'சபாஷ்!'

இந்த ஏப்ரல் 3-ல் மாஸ்கோ விமான நிலையத்தில் திருபர்களுடன் திருமதி இந்திரா காந்தி பேசிக்கொண்டிருக்கையில் ரஷ்யப் பிரதமர் கோசிஜின் ஏழு வயதான சுரேஷ் மேனன்

என்ற இந்திய தூதரக அதிகாரியின் மகனுடன் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"நிருபர்களுடன் நீங்கள் பேசிக் கொண்டிருந்தது சுவாரஸ்யமாக இருந்ததோ, இல்லையோ! இந்த இந்தியச் சிறுவனுடன் நான் பேசிக் கொண்டிருந்தது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. ரஷ்ய குழந்தை போல் இவன் ரஷ்ய மொழி பேசுகிறான்," என்றார் கோசிஜின்.

"இந்தியச் சிறுவன் உங்களுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி. நிருபர்களுடன் நான் பேசி முடிக்கும் வரையில் நீங்கள் சும்மாயிருக்க வேண்டியிருக்கிறதே என்று எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. நல்ல காலம் இந்தியச் சிறுவன் உதவிக்கு வந்தான்" என்றார் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி.

## ஐயா

மோட்ச குண்டம் ஸர் விசுவேசுவரய்யா மைசூர் திவானாக இருந்தார்.

அப்போது அவரது சுற்றுப் பயணத்தின் போது, ஒரு ஜில்லாவின் கமிஷனர் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

அந்தக் கமிஷனர், "ஐயா, நான் தங்களுக்குக் கீழே முன்பு சேக்ரடேரியட்டில் பணி செய்தவன்!" என்று தெரிவித்தார்.

"அது எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. தாங்கள் என்னுடன் வேலை செய்து கொண்டிருந்தீர்கள். எனக்குக் கீழே வேலை செய்யவில்லையே!" என்றார் பாரத ரத்னா டாக்டர் விசுவேசுவர ஐயா.

## நேருபிரான்

இப்போதைய மத்திய அமைச்சரவையின் திட்டத்துறை அமைச்சரான திரு. சி. சுப்பிரமணியம் தம்முடைய 'மன வளர்ச்சி' என்னும் நூலில் சொன்னது:

நேருவுக்குத் தெய்வத்திடம் நம்பிக்கையும் பக்தியும் உண்டா என்று பல பேருக்குச் சந்தேகம். அன்று மீனாட்சியம்மன் சந்நிதிக்கும் நேரு சென்று தரிசனம் செய்தார். கோயில் மரியாதைகளைப் பக்தியுடன் ஏற்றுக் கொண்டார். நேருவுக்குப் பரிவட்டம் கட்டவேண்டும் என்று குருக்கள் சொன்னார். உடனே அந்தப் பரிவட்டத்தை நேரு குழந்தை போல தாமே வாங்கிக் கழுத்தில் அணிந்து கொண்டது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அன்று கோயிலில்

நேருவைப் பார்த்தவர்கள் யாரும் தெய்வத்தினிடமோ, தெய்வ வழிபாட்டிலோ அவருக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லத் துணியமாட்டார்கள்.

## உரை ஆடல்!

ஸச்சா கைட்ரி என்ற பிரபல நடிகரை ஆங்கில வாலிப நாடக ஆசிரியர் ஒருவர் வந்து பார்த்தார்.

"உங்கள் நடை சற்று செயற்கையாக இருக்கிறது. புரிவது கடினம். ஒரு விஷயத்தை உங்கள் மனத்தில் இருத்த வேண்டும். நாடக உரையாடல் ஒரு மூடனுக்கும் புரியும்படி அவ்வளவு சுலபமாக இருக்க வேண்டும்" என்றார் நடிகர்.

வாலிப ஆசிரியர் சொன்னார்: "சந்தனம், கைட்ரி. உங்களுக்குச் சிறிது சிரமம் கொடுக்கலாமா? எந்த இடம் உங்களுக்குப் புரியவில்லை? சொல்லுங்கள்; திருத்தி விடுகிறேன்!"

## சுவாதித் திருநாள்

கருவிலே திருவுடையவர் மகாராஜா சுவாதித் திருநாள்.* இவர் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போதே முடி சூட்டப் பெற்றார். பெற்றோர் உள்பட அவரை 'மகாராஜா' என்றே அழைத்தனர். பதின்மூன்று வயசிலேயே பல மொழி வல்லுனரானார். சங்கீதத்தில் மேதையானார்.

ஒரு சமயம் கர்னல் நியூவிலின் எனும் ஆங்கிலேயருடன் உரையாடியபோது சொன்னதாவது: "எங்கள் சமஸ்கிருதச் சொற்களிலிருந்து ஏராளமான இங்கிலீஷ் பதங்கள் பிறந்திருக்கின்றன. ஜ்யோமிதி—ஜியாமெட்ரி; மாதா—மதர்; பிதா; ஃபாதர்; இப்படியே!" என்றார்.

அது சரி.

தமிழ் மொழியிலிருந்து ஆங்கிலச் சொற்கள் ஏராளம் பிறந்திருக்கின்றனவே!

சாமான்—சாமான், கட்டுமரம்—கட்டாமரம்
அரிசி —ரைஸ்
நாவாய்—நேவி
இப்படிப் பல உண்டே!

## பஞ்சாப் கடிதம்

கான்பூரிலே 1958-ல் பள்ளிக்கூடத்துக்குச் சென்று கொண்டிருந்தாள் கன்னி ஒருத்தி. அவளைச் சில காலிகள்

மயக்கம் கொடுத்துக் கடத்திச் சென்று விட்டனர். இருமுறை அவள் விற்கப்பட்டாள். ஒரு கிராமத்தில் அவள் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது, அப் பெண் எப்படியோ நேருஜிக்கு ரகசியமாக ஒரு தபால் எழுதி விட்டாள்.

உடனே நேருஜி இக்கடிதத்தைப் பஞ்சாப் முதலமைச்சருக்கு அனுப்பி ஆவன செய்யும்படி பணித்தார்.

அக்கிராமத்தில் போலீஸ் சோதனை நடந்தது. அந்த அபலைப் பெண்ணும் மீட்கப்பட்டாள்.

நேருஜியின் கவனத்துக்கு இச் செயல் வராமலிருந்திருந்தால்...!

அதர்மம் என்றுமே வாழ்ந்ததில்லை!

## இருட்டில்

பாஸ்டர் நகரத்தில் வாழ்ந்து வந்த அந்த ஐரிஷ் பாதிரியாருக்கு அயர்லாந்துக்காரர்கள் என்றால், அலாதியான பாசமும் அன்பும் சுரக்கும்.

ஒரு நாள்:

பிரார்த்தனையின் போது கூட்டத்தில் ஓர் ஐரிஷ்காரரைப் பார்த்து விட்டார் மதகுரு. தொழுகை முடிந்ததும், அவர் வேகமாக வந்து அம்மனிதரை ஆவலுடன் நெருங்கினார்.

"அயர்லந்து நாட்டில் எந்த இடத்திலிருந்து நீ வருகிறாய்?" என்று வினவினார்.

அந்த மனிதர், 'அதை விட்டுப் புறப்படும்போது ஒரே இருட்டு. ஒன்றுமே புரியவில்லையே" என்றார் சாவகாசமாக.

## என் கமலா

'பாரத ரத்னா' நேருஜி சொல்கிறார், தம்முடைய சுயசரிதையில்:

"1934-ம் வருஷம் பிப்ரவரி மாதம் வாரண்டின்பேரில் நான் கைது செய்யப்பட்டேன். என் மனைவி கமலா எனக்கு உடைகள் கொண்டு வர உள்ளே அறைக்குச் சென்றாள். அவளிடம் விடை பெறுவதற்காக நான் அவளைப் பின் தொடர்ந்தேன். உடனே அவள் என்னைத் தழுவிக் கொண்டு கீழே விழுந்தாள். சிறைக்குச் செல்வதை நாங்கள் லேசாக நினைத்து மகிழ்ச்சியுடன் அதை ஏற்கப் பழகியிருந்தோம். எனவே, அவளுடைய இச்செயல் வழக்கத்திற்கு மாறுபட்டதாகத் தோன்றியது.

இதுதான் எங்களுடைய கடைசிச் சந்திப்பு என்று என் கமலாவுக்கு முன்கூட்டியே தெரிந்து விட்டது போலும்!"

## மகத்தான புண்ணியம்

தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்து, அந்த மை உலரு முன்னே, வரலாற்றின் மாவீரரானார் லால் பகதூர் சாஸ்திரி.

அவர்: பாரத ரத்னம்!

அவர் அமரத்வம் அடைந்ததும், அவரது புனித உடலைச் சுமக்கும் புண்ணியம் பெற்றார் பாகிஸ்தானத்தின் அதிபர் அயூப்கான் அவர்கள்!

## முட்டாள் பாதை

அறிஞர் ஜார்ஜ் பெர்னாட் ஷா ஒற்றைத் தடமொன்றில் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அவர் வருவதைப் பார்த்தவுடன், எதிரில் வந்த யாரோ ஒருவன் மரியாதைக்காக ஒதுங்கி நின்றான்.

அவனருகில் ஷா வந்ததும், ''நான் முட்டாள்களுக்கு வழி விடுவதில்லை'' என்றார்.

உடனே அந்த வழிப்போக்கன் மிகவும் அடக்கத்துடன், ''ஆனால் நான் வழி விடுவது உண்டு, ஐயா!'' என்றான்.

## ஒரு பைசா ஈடு

1965 தொடக்கத்தில் இச்சம்பவம் நடந்தது.

அமெரிக்காவிலிருந்து வெளி வரும் 'டைம்' என்னும் பத்திரிகை மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்தார் டாக்டர் லோகியா.

''வாழ்நாள் பூராவும் நேரு குடும்பத்தினரின் பகைவராக இருந்திருப்பவர்'' என்று அப்பத்திரிகை அவரை வருணித்திருந்ததே வழக்குக் காரணமாகும்.

சரி.

அமரர் லோகியா கோரியிருந்த மான நஷ்டத் தொகை எவ்வளவு, தெரியுமா?

ஒரு பைசா!

ஆமாம்;

ஒரே ஒரு பைசா!

## ஜி. கவிஞர்

1920—1958 வரை இந்திய மொழிகள் அனைத்திலும் வெளியான அவ்வளவு படைப்புக்களிலும் சிறந்ததென,

'ஓடக் குழல்' என்ற மலையாளக் கவிதைத் தொகுதி நூலுக்கு காசியிலுள்ள 'பாரதீய ஞான பீடம் ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கியிருக்கிறது. ஒரு கவிதை நூல் இத்தகைய மகத்தான கவுரவத்தைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இதன் ஆசிரியர் ஜி. சங்கர குருப். 'ஜி' என்றே எல்லோரும் அழைப்பார்கள்.

மலையாள மகா கவி ஆன இவருக்குப் 'பாரதீய கவிஞன்' என்ற பட்டமும் கிடைத்திருக்கிறது.

கவிதைப் பூங்கொத்து இப்படிப்பட்ட பரிசு பெறுவதற்கு முன் எவ்விதப் பேச்சு மூச்சற்றிருந்தது. பரிசு பெற்றதோ இல்லையோ அதைப் பற்றி நல்லதும் கெட்டதுமாக, இல்லாததும் பொல்லாததுமாகச் சர்ச்சைகள் கிளம்பிவிட்டன!

இந்நிலைக்காக வருந்துகிறார் கவிஞர். அவ்வருத்தத்தை 'மலையாள மனோரமா' என்ற மலையாள ஏட்டின் பேட்டியில் வெளிக்காட்டியும் இருக்கிறார்.

'ஓடக் குழல்' என்றால் 'புல்லாங் குழல்!'

## பம்மல் குழு

ஈ. கிருஷ்ணய்யர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்து, வெள்ளையர்களை எதிர்த்திட்ட புண்ணியத்துக்காகச் சிறை வாச நோன்பு இருந்த தீரர்.

ஒரு சமயம் விசாரணையின்போது, அவர் வாக்கு மூலம் கொடுத்தார்.

"என் மனத்தின் இச்சைப்படி கலைஞன் வேலை, 'பம்மல்' குழுவில் தொண்டு புரிகிறேன். ஆனாலும் கட்டாயப்படி ஹைகோர்ட் வக்கீலாயிருக்கிறேன்!"

"பம்மல் என்றால் என்ன?" என்று மறுபடியும் குறுக்கு விசாரணை நடந்தது.

"நீதிபதி ராவ்பகதூர் சம்பந்தம் முதலியாருக்குத்தான் பம்மல் என்று பேர். அவரது சொந்த ஊர் பம்மல். அவர் சட்டத்தின் உள்ளே நீதிபதி. சட்டத்துக்கு வெளியே அவர் ஓர் அற்புதக் கலைஞர்" என்று பதில் சொன்னார் ஐயர்.

ஆட்சியின் விசாரணைக் குழு மலைத்தது!

## சரித்திரத்துக்குத் தமிழ்

இந்தியாவின் மொழிப் பிரச்னை இன்று உச்சக் கட்டத்தில் இருந்து வருகிறது.

ஆனாலும் இப்பிரச்னையை நூல் வடிவில் பேசியிருக்கிறார் புலவர் ஒருவர். அவர் பன் மொழிகளிலும் புலவர்.

இந்நூல் 1948-ல் வெளியானது.

"கடந்த இருபத்தைந்து நூற்றாண்டுகளில் இந்தியாவின் பெருமையைத் தொடர்ந்து சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தமிழ் மொழியைத்தான் சரண் அடைய வேண்டும். சம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சி கி. பி. ஆறும், ஏழாம் நூற்றாண்டுடன் நின்று விட்டது. இந்தி மூலம் சென்ற நூற்றாண்டையும் இந்த நூற்றாண்டையும்தான் புரிந்து கொள்ள முடியும். தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளை நாடினால், கடந்த ஆறு நூற்றாண்டுகளை அறியலாம். தமிழ் ஒன்றின் துணை கொண்டுதான், கடந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின் இந்திய வளர்ச்சியை நாம் அறிய முடியும்!"

இவ்வாறு தமது 'இந்தியாவின் மொழிச் சிக்கல்' எனும் நூலில் கூறுகிறார் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள்.

இந்நூலின் மேலட்டையில் இந்தியாவின் படம் தலை கீழாகப் போடப்பட்டிருக்கிறது!

## பாட்டனுக்கு வரி

பாகிஸ்தான் 'பாட்டன்' டாங்கிகளை நம் இந்தியத் துருப்புகள் மிகவும் சுலபமாக—எளிதாகப் பிடித்துக் கைப் பற்றி விட்டார்கள்.

ஆனால் அவற்றை இந்தியாவுக்குள் கொண்டு வருவது தான் இராணுவத்தினருக்குப் பெரும் பாடாகி விட்டது.

ஏன் தெரியுமா?

வெளி நாட்டுப் பொருள்களான இந்த டாங்கிகளின்மீது சுங்க வரி கட்டியாக வேண்டுமென்று மத்திய சுங்க வரி இலாகா வற்புறுத்தியதுதான்!

## புத்தர் முன்னே

இளங்காலை வேளை.

கருணை வள்ளலாம் புத்த தேவன் அன்பே வடிவம் கொண்டு வீற்றிருந்தார்.

ஓர் அற்பன் அந்தப் புத்தர் பிரானைத் தூற்றினான்; வாய்க்கு வந்தபடி ஏசினான்.

புத்தர் அவனை நோக்கி வெகு அமரிக்கையுடன், "அன்பனே! ஒருவன் பிறருக்குப் பரிசு கொடுப்பதை ஏற்கா விட்டால், என்ன செய்யலாம், சொல்" என்று கேட்டார்.

உடனே அவன், "திருப்பிக் கொடுப்பதே உத்தமம்" என்று விடையிறுத்தான்.

அறத் தலைவன் அழகிய முறுவலுடன், "நீ வாரி வாரி வீசினுயல்லவா அந்த ஏச்சுக்களை நான் ஏற்க முடியாது, அன்பனே!" என்றார்.

கொடிய அவ்வறற்பன் வெட்கத்தால் குன்றி மறைந்தான்!

## கருங்காலி வேலை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'சாஸ்திரி' ஹால் மிகவும் பெருமை மிக்கது அல்லவா?

அந்தப் பெருமைக்கு உகந்தவர்—அந்தக் கவுரவத்திற்குச் சின்னம் அளித்தவர்தான் மகாகனம் சீனிவாச சாஸ்திரியார்.

தஞ்சை மண்.

ஆனால், உலக அரங்கில் அவரது புகழ் பிரசித்தம். ஆங்கிலேயர்களே அதிசயப்படும் அளவுக்கு ஆங்கிலத்தை விளையாட விட்டவர்.

இன்னும் கேளுங்கள்:

1935 ஆம் ஆண்டிலே, சென்னையில் அமைச்சரவையை அமைப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் இணங்கவில்லை.

உடனே அந்த வெள்ளைக்காரக் கவர்னர் சாஸ்திரியை அழைத்து, சென்னையில் மந்திரி சபையை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

"அந்தக் கருங்காலி வேலையைச் செய்வதற்கு என்னைத் தானா பார்த்தீர்?" என்று ஆத்திரப்பட்டாராம் மகாகனம் வி. எஸ். எஸ், சாஸ்திரி.

ஆங்கிலேய அரசு அளித்த "ஸர்" பட்டத்தைக் காற்றில் பறக்க விட்ட தேசிய மனம் கொண்ட மாமேதை. அண்ணல் காந்திஜியின் உற்ற நண்பராயிற்றே!

## இதய ஒலி

ரசிகமணி டி. கே. சி. சொல்கின்றார்! "சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன், திருச்சிராப்பள்ளிக்கு வந்து, எஸ். பி. ஜி. காலேஜில் தமிழின் அருமையைப் பற்றியும் வளத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். நானும் பிரசங்கத்தைக் கேட்கப் போயிருந்தேன். அப்போது நான் நாலாவது பார மாணவன். தமிழ் மகளின் நகை பட்டியலை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எடுத்துக் காட்டியபோது, அதாவது, தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக்

குண்டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை, கடைசியாகக் காலுக்குச் சிலப்பதிகாரம் என்று முடித்தார்களோ, இல்லையோ-அப்படியே மயங்கிப் போய் விட்டேன்! பிரசங்கத்தின் இறுதியில் ரொம்ப ஆற்றாமையுடன் ஒரு விஷயத்தை வலியுறுத்தினார்கள். "மாணவர்களுக்கும் கனவான்களுக்கும் ஒரு வார்த்தை. இங்கிலீஷைப் படிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் தமிழுக்குத் தினம் அரைமணி நேரம் ஒதுக்கி வையுங்கள். கால்மணி நேரம் படித்தாலும் போதும், பெரிய காரியம்!" என்று தம் ஆர்வத்தை எல்லாம் சேர்த்து ஒருமுனைப் படுத்திச் சொன்னார்கள்.

தமிழின் வளர்ச்சியில் ரசிகமணிக்கு ஏற்பட்ட ஒட்டும் உறவும் எப்போது பிறந்தது என்பது இப்போது புரிகிறதல்லவா?

## பிடித்தது: சதை!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் ஜப்பான் நாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பினார்.

உடனே புரட்சி நடிகரைச் சூழாமல் இருப்பார்களா பத்திரிகை நிருபர்கள்? "ஜப்பான் நாட்டில் தங்களுக்கு எது பிடித்தது?" என்று கேட்டார்கள்.

அதற்கு மக்கள் திலகம் "ஜப்பான் நாட்டிலே எனக்குச் சதை பிடித்தது!" என்று சிரிக்காமல் சொன்னதுதான் தாமதம், நிருபர்கள் சிரித்து விட்டார்கள்!

## இங்கிலாந்துப் பயணம்

புகழ்பெற்ற சிந்தனையாளர்களான டாக்டர் ஜான்ஸனும் கோல்ட்ஸ்மித்தும் இங்கிலாந்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். புறப்பட்டுச் சில நாட்கள் ஆயின. ஒரு சில இடங்களைப் பார்த்தார்கள் பிறகு தங்கள் நிதி நிலைமையை அறிய, பணப் பையைப் பார்த்தார்கள். பணம் பூராவும் செலவழிந்து விட்ட உண்மை புரிந்தது. ஆகவே, அவர்கள் லண்டனுக்குத் திரும்பிவிட முடிவு செய்தார்கள்.

ஆனால் ஒரு ரகசியம் என்னவென்றால், லண்டனுக்கு வரக் கூட பஸ்ஸுக்குப் பணம் பற்றவில்லை. எனவே, வேறு வழியில்லாமல் தங்களுடைய கோட்டுகளை விற்றுவிட்டு, ஒரு வழியாக லண்டனை அடைந்தார்கள். இந்தக் கசப்பான அனுபவம் அவர்களை வெகுவாக வருத்தியது.

லண்டன் பார்லிமெண்ட் கட்டடத்தின் அருகில் உள்ள தேம்ஸ் பாலத்தில் நின்று கொண்டு 'மக்களுக்கு ஓசியில்' பயணம் செய்ய ஏற்பாடு செய்ய முடியாத அரசாங்கம் இது!...இனிமேல், அரசாங்கம் இலவசமாக பஸ் விட வேண்டும்!'' என்று ஜான்ஸனும் கோல்ட் ஸ்மித்தும் பேசி, தங்களது வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டார்களாம்!

## பேசத் தயங்கினார் நேரு

உலகத்தில் உள்ள தலை சிறந்த பேச்சாளர்களின் பட்டியலிலே மனிதகுல மாணிக்கம் நேருஜிக்குக் குறிப்பிட்ட ஓர் இடம் எப்போதுமே ஒதுக்கப்பட்டிருக்கும்!—இது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை.

ஆனால் நேரு கேம்ப்ரிட்ஜில், 'ட்ரினிட்டி காலேஜில்' கல்வி பயின்றபோது மாணவர் அவை முன் நின்று சில நிமிடங்கள் பேசக்கூட தயங்கினார்; கூச்சப்பட்டார். இந்திய மாணவர் ஒன்றுகூடி சங்கம் அமைத்து, இந்தியப் பிரச்னைகள் குறித்து அடிக்கடி உரையாடுவது வழக்கம். பல மாதங்களில் ஒரு தடவைகூட மேடையேறிப் பேசாவிட்டால், அபராதம் செலுத்த வேண்டும் என்பதும் விதியாக அமைந்திருந்தது.

ஜவாஹரிடம் கூச்சமும் தயக்கமும் நிறைந்திருந்ததால், அவர் மேடையில் ஏறி நிற்கக்கூட அச்சமடைந்து, விதிக்கப் பட்ட அபராதங்களை மட்டும் தவறாமல் கட்டவும் துணிந்தார்.

மேலைநாட்டுப் படிப்பை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்பினார் நேருஜி. இந்திய விடுதலைக் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். நாட்டின் விடுதலையில் அவர் கொண்டிருந்த ஆர்வம் அவரைப் பேச வைத்தது; பேசினார். குறிப்பிட்ட இரண்டு மூன்று கூட்டங்களிலேயே அவரது பேச்சுத் திறன் பலராலும் பாராட்டப் பட்டது.

நேருஜி இந்தச் சமயத்தில் அலகாபாத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சு மக்கள் நெஞ்சங்களிலே விடுதலை உணர்வை வெகுவாகத் தூண்டிவிட்டது—இச் சம்பவம் பற்றி நேருஜி தமது இந்திய வரலாறு நூலில் பெருமையோடு குறிப்பிட்டிருக்கின்றார்.

## திருடி

காந்திஜி வர்தா ஆசிரமத்தில் தங்கியிருந்த சமயம் கஸ்தூரிபா தனது பேத்திக்கு நகை செய்து போடுவதற்காக அவ்வப்போது கிடைத்த பணத்தை யெல்லாம் சேர்த்து

வைத்திருந்தார். இந்த விஷயம் ரகசியமாக யிருந்தது. காந்திஜிக்குக் கூடத் தெரியாது. ஒரு நாள் இந்தத் தொகை திருடு போய் விட்டது. கஸ்தூரிபா அம்மையாருக்கு மன வேதனை தாங்க முடியவில்லை. இச் செய்தி காந்திஜிக்கு எட்டியது. திருடனைத் தாம் கண்டு பிடித்துத் தருவதாக அவர் கூறி ஆசிரம வாசிகளை யெல்லாம் ஒரு பொது இடத்தில் கூடும்படி கட்டளையிட்டார். எல்லாரும் கூடி விட்டார்கள். காந்திஜி திருடனைக் கண்டு பிடித்தாக வேண்டும். மெள்ள எழுந்து தம் தர்மபத்தினியான கஸ்தூரிபாவின் கையைப் பற்றிக் கொண்டார். 'இதோ, இவள் தான் திருடி' என்று உரக்கக் கூவினார். சுற்றியிருந்த அனைவரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். அப்போது காந்திஜி சொன்னார். "சொத்து சேர்ப்பது நம் கொள்கைக்கு விரோதம் என்று தெரிந்திருந்தும், ஒருவருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகப் பணம் சேர்த்து வைத்த கஸ்தூரிபாதான் திருடி. அதற்காக அவள் வெட்கப்பட வேண்டும்." என்றார்.

அன்னையின் முகம் நாணத்தால் கவிழ்ந்தது.

## எரிமலை

அது ஒரு கையெழுத்துப் பிரதிதான்!

அதை வெள்ளைக்கார அரசாங்கம் தடை போட்டது.

ஏன் தெரியுமா?

அது, இந்திய விடுதலைப் போரின் வீரவரலாற்றை முரசறைந்தது.

'இந்தக் கையெழுத்துப் பிரதி அச்சியற்றப் பெற்று, வெளிப்படுத்தப் பெற்றால், நம் ஆட்சி ஆட்டம் கண்டு விடும்' என்பது ஆங்கிலேய உயர்மட்ட அதிகாரிகளின் கணிப்பு; பீதி!

உண்மை நிலையும் அப்படியேதான் இருந்தது.

ஆனால் அந்தக் கைப்பிரதியை மிகமிகத் தந்திரமாக வெளியேற்றி, அச்சிட்டு, வெளிக் கொணரப்பட்டது. இதற்கு மூலவர் அந்த நூலின் ஆசிரியரேதான்!

அந்த ஆசிரியர் யார், தெரியுமோ?

வீர சவர்க்கார்!

அந்த நூல் என்ன, தெரியுமா?

'எரிமலை!'

## தேசியப் படை ராணி

இந்திய தேசியப் போராட்டத்தில் அமரத்துவம் பெற்ற ராணி லக்ஷ்மிபாய் போரில் படுகாயமுற்று, ரத்தம் பெருக்கெடுத்தோட, தாகத்தினால் அவதியுற்றுக் கிடந்தாள். அவளுக்குத் தண்ணீர் கொடுக்க ஒரு வைத்தியர் அனுப்பப்பட்டார்.

ராணி லக்ஷ்மிபாய் அந்த வைத்தியரைப் பற்றிய விவரங்களை வினவினாள். "நான் உயர் வகுப்பு இந்து. நான் பிரிட்டிஷ் படையில் வைத்தியராகப் பணியாற்றுகிறேன்!" என்று பெருமையுடன் கூறினார், அந்த வைத்தியர்.

"தேசியப் படையைச் சேர்ந்த எந்தக் கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்தவனாயினும் தண்ணீர் கொடுத்தால் தயங்காமல் வாங்கிக் குடித்து விடுவேன். ஆனால் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த நீ என் எதிரி கோஷ்டியைச் சேர்ந்தவன். உன் கையால் வாங்கிக் குடித்தால் எனக்குக் கதி மோட்சமில்லை!" என்று கூறி அந்தத் தண்ணீரைக் கொட்டி விட்டாள் ராணி லக்ஷ்மிபாய்.

## ஏழை நாடு

மகாத்மா காந்தி நமது கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்ட பிறகுதான் உண்மையான பிரச்னையைக் கவனிக்க ஆரம்பித்தார்.

ஒருசமயம் காசியில் நடந்த ஒரு அஸ்திவாரக் கல் நடும் விழாவுக்கு வந்தவர்கள் மிக ஆடம்பரமாக வந்திருந்தார்கள். மகாத்மா காந்தியையும் அதற்கு அழைத்திருந்தார்கள். அவர் "இவ்வளவு ஆடம்பரமாக வந்திருக்கிறீர்களே—எதற்காக? இந்த நாட்டில் உடுப்பதற்குத் துணியில்லாமல், வேலை இல்லாமல் இருக்கிறவர்களைப் பற்றி யோசித்துப் பார்த்தீர்களா?" என்று கேட்டார். அவர்களுக்கெல்லாம் மகாத்மா காந்தி அப்படிக் கேட்டதில் கோபம். உடம்பு சரியில்லாதிருந்தால் டாக்டர் எப்படி கடுமையான பத்தியம் சொல்லுவாரோ அதுபோலத்தான் மகாத்மா காந்தியும் சொன்னார். ஆடம்பரத்தைக் கண்டித்ததோடு அவர் நிற்கவில்லை. "ஏழைகளுடைய தேசம்தானே இந்த நாடு?" என்பதையும் அழுத்தமாகச் சொன்னார்.

## டேவி விளக்கு

மின் விளக்கு கண்டு பிடிக்கப்படும் முன்னர் 'டேவி விளக்கு' என்ற விளக்கைக் கண்டு பிடித்தவர் ஹம்ப்ரி டேவி என்பவர்.

அவர் புகழ் பெறுவதற்கு முன், ஒரு வைத்தியரிடம் வேலைக்கு அமர்ந்திருந்தார். அவர் தனியாக இருக்கும்போது தம்மை மறந்து, தம்முடைய கருத்துக்களை வாய் விட்டுப் பேசுவது வழக்கம்.

ஒரு முறை அவருடைய வைத்தியர், அவரிடம் ஒரு மருந்தைக் கொடுத்து, பக்கத்து ஊரிலிருந்த ஒரு நோயாளியிடம் கொடுத்து விட்டு வரச் சொன்னார். போகும் வழியில் சொற்பெருக்குச் செய்து கொண்டே சென்றார் டேவி.

நோயாளியின் வீட்டுக்குப் போய்ப் பார்த்தபோது, அவரது கையில், வைத்தியர் கொடுத்த மருந்துப் புட்டி காணப்படவில்லை.

திரும்பி வந்து பார்த்தபோது, அந்த மருந்துப் புட்டி, ஒரு வயலின் ஓரத்தில் கிடந்ததாம்! தம்மை மறந்து அப்படிப் பிரசங்கம் செய்திருக்கிறார் டேவி—கையிலிருக்கும் பொருளைத் தூக்கி எறியும் அளவுக்கு!

## ஞாபக மறதி

இஸ்ரேல் நாட்டுக்குப் புதிய ஜனாதிபதியாக வந்துள்ள ஸால்மான் ஷாஸார் அவர்களுடைய ஞாபக மறதியைப் பற்றிப் பல ரஸமான கதைகள் உண்டு. அவற்றில் ஒன்று இதோ:

ஒரு முறை அவர் அமெரிக்க நாட்டில் பல ஊர்களில் பிரசங்கம் புரிய அழைக்கப் பட்டிருந்தார். ஒரு சமயம் அவர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று தன் பைகளைத் துழாவிப் பார்த்தார். அவரது ரயில் டிக்கெட், அத்துடன் அவர் பணப் பையும் காணவில்லை. அவரது அவல நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு சகப் பிரயாணி ஒருவர் பணம் கொடுக்க முன் வந்தார். அதற்கு நன்றி தெரிவித்து விட்டு, "உங்களிடம் பணம் வாங்கிக் கொள்வதனால் என்ன பிரயோசனம்? எனக்குத்தான் எந்த ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன் என்பது மறந்து விட்டதே" என்றாராம்!

## விஷயதானம்

சாதாரணமாக, பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதாகத்தான் சொல்வது வழக்கம். அப்படித்தான் அந்த நாட்களிலே எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பது வழக்கம். இதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. ஏன் தெரியுமா? அப்போதெல்லாம் விஷயத்தைத் தானமாகத்தான் கொடுத்து வந்தார்கள். எழுத்துக்களுக்கு யாதொரு சன்மானமும் கிடையாது—அதாவது, கொடுக்கப்படுவது இல்லை!

இந்த விஷயதானம் பேராசிரியர் கல்கி அவர்களைச் சிந்திக்க வைத்தது—சிந்தித்தார். அச்சிந்தனை அவரோடு நிற்கவில்லை. நிற்க விடவில்லை. உடனே ஆனந்தவிகடன் அதிபர் வாசன் அவர்களையும் பற்றியது. அதன் பலன், எழுத்தாளர்களுக்கு அடித்தது யோகம்! ஐந்து, பத்து என்று சன்மானம் பெறத் தலைப்பட்டார்கள் எழுத்தாளர்கள். 1930 முதல் இந்த அன்பளிப்பு அமலாகத் தொடங்கியது.

எழுத்தாளர்களுக்குச் சன்மானம் அளிக்கப்பட்டதைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் எழுத்தாளர்களிடமிருந்து வந்து கொண்டிருந்தனவாம்.

அவற்றைப் பார்த்தார்கள் வாசனும் கல்கியும்.

"விஷயத்தைத் தானமாகப் பெறக்கூடாது என்று ஏற்பாடு செய்தீர்கள்" என்றார் ஆசிரியர் கல்கி.

"விஷயத்திற்குத் தனம் கொடுக்கத் தலைப்பட்டு விட்டீர்கள்!" என்றாராம் அதிபர் வாசன்.

கல்கி மெய்ம்மறந்தார்!

## தலைகீழ் ராஜா

ராஜாஜி சேலத்தில் அட்வகேட்டாகத் தொழில் நடத்தி வந்த சமயம் அது. அப்போது வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை ஆண்டு கொண்டிருந்தார்கள்.

அவரிடம் வேலை பார்த்த பணியாள் ஒருவனிடம் ஒரு கவரையும் தபால் தலையையும் கொடுத்து ஒட்டிக்கொண்டு வரும்படி பணித்தார்.

அவ்வாறே செய்து முடித்தான் வேலைக்காரன்.

அந்தக் கவரை வாங்கி சரிபார்த்தார் ராஜாஜி. "அடடே!...நாங்கள் எவ்வளவோ பாடுபட்டு வருகிறோம் பிரிட்டிஷ் ராஜாவைக் கவிழ்க்க!...நீ ஒரு நிமிஷத்தில்

பிரிட்டிடிஷ் மன்னரைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டாயே!"
என்று சிரித்தார்.

கவரில் ராஜா தபால் தலையை தலைகீழாக ஒட்டிவிட்டான் வேலைக்காரன்.

## காந்திஜியின் முடி

காந்திஜி தென்னாப்பிரிக்கா போன போது தானே முடி வெட்டிக் கொள்ள வேண்டிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது. அவர் ஒரு கிராப் வெட்டும் சலூனுக்குச் சென்றார். அந்தக் காலத்தில் வெள்ளைக்காரர்கள் கறுப்பரை அருவருப்பாக நடத்தினார்கள், எனவே அந்தச் சலூன் கடைக்காரர் காந்திஜிக்கு முடிவெட்ட மறுத்து விட்டார்.

பார்த்தார் காந்தி! வேறு வழியோ இல்லை. தாமே ஒரு கத்தரிக்கோலை வாங்கி கண்ணாடியைப் பார்த்து வெட்டிக் கொண்டார். கஷ்டமாகத்தான் இருந்தது. எப்படியோ ஒரு மாதிரி தம்மைத் தயார் செய்து கொண்டு, நீதிமன்றத் திற்குப் போனார். எல்லோரும் அவரைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"உங்களது தலைமயிருக்கு, என்ன ஆபத்து வந்தது? எலிகள் ஏதாவது கத்தரித்து விட்டனவா?" என்று கிண்டல் செய்தார்களாம்!

"எனக்கு நானே முடி வெட்டிக் கொண்ட சிறப்பைப் பாராட்டி முதலில் நீங்கள் கற்றுக் கொள்ளலாமே" என்றார் காந்திஜி.

## வறுத்த மீனும் பஞ்சப் பேயும்

சோவியத் நாட்டிலே அப்பொழுது மிகப் பயங்கரமான பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. ஓட்ஸ், உருளைக் கிழங்கு ஆகியவற்றின் தோல் எது கிடைத்தாலும், மக்கள் அதைத் தின்று வந்தார்கள். நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு ஒரு சிறிய ரொட்டித் துண்டு மாத்திரமே கொடுக்கப்பட்டு வந்தது.

மக்கள் தலைவர் லெனின் தேனீரை சர்க்கரையின்றியே அருந்தி வந்தார். நாடு முழுவதும் பட்டினியால் அல்லல் பட்டு வாடி வருந்திக் கொண்டிருக்கையில் தாம் மட்டும் நன்றாக உண்டு வாழ அவர் மனம் ஒப்பவில்லை.

அன்று, க்ரெம்ளினில் உள்ள தம் அலுவலக அறையில் அன்றாடக் கடமை ஒன்றில் மனம் ஒன்றியிருந்தார் தோழர் லெனின்.

பெட்ரோகிராடிலிருந்து மீன் துறைப் பொறுப்பாளர் ஒருவர் அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். மீன் குறைந்த அளவில் கிடைப்பதற்கான காரணங்களை மீனவர் நின்று கொண்டே லெனினிடம் விவரித்தார். லெனின் இரண்டு தடவைகள் அவரை உட்கார்ந்து பேசும்படி கூறியும் அவர் உட்காராமல் நின்று கொண்டே பேசினார் ஏன் தெரியுமா? அவர் லெனினுக்கென்று விசேஷமாக மீன் வறுத்து பொட்டலம் கட்டிக் கொணர்ந்திருந்தார். அந்தப் பொட்டலம் அவருடைய முதுகுப்புறத்தில் இருந்தது. வந்த பேச்சு முடிந்தது: ''வேண்டிய பணம் தர ஏற்பாடு செய்கிறேன். அதிக அளவு மீன் பிடித்து மக்களின் பஞ்சத்தைக் குறைக்க முயலுங்கள்'' என்றார் லெனின். பேச்சு முடிந்ததும், லெனினிடம் தன் அன்பளிப்பைக் கொடுத்து அவரை வியப்பில் ஆழ்த்தித் திரும்பவேண்டுமென்பது அம் மீனவரின் விருப்பம்.

லெனின் அப்பரிசைக் கண்டு வருந்தினார். ஏன் அவருக்குக் கோபம்கூட வந்து விட்டது. ''தோழரே! நாட்டிலே குழந்தைகள் பலர் பட்டினியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில், நீங்கள் இதை எனக்காகக் கொண்டு வந்திருக்கவே கூடாது!'' என்று கண்டிப்பாகக் கூறி, அப் பரிசை ஏற்க மறுத்து விட்டார் லெனின்.

தான் அன்புடன் லெனினுக்காகத் தயாரித்துக் கொண்டு வந்த வறுத்த மீனை அவர் எடுத்துக் கொள்ளவில்லையே என்று மீன் துறைப் பொறுப்பாளர் வருந்தினார். ஆகவே மீண்டும் வற்புறுத்தினார்.

லெனின் உடனே அழைப்புப் பொத்தானை அழுத்தவே செயலாளர் வந்தார். மீனவர் மருண்டு போய் விட்டார். செயலாளரிடம் ''இந்த மீன் பொட்டலத்தைக் குழந்தைகள் இல்லத்தில் உடனடியாகச் சேர்ப்பியுங்கள்'' என்று லெனின் ஆணையிட்டார். பிறகு மீனவரோடு கைகுலுக்கிவிட்டு ''தோழரே! இந்த அன்பளிப்பிற்கு சோவியத் நாட்டுக் குழந்தைகள் சார்பில் நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்!'' என்றார் லெனின்.